இந்த நிலையில் குறித்த காணியில் நின்ற உரிய நபர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத நிலையில் அங்கிருந்து வெளியேறினர்.

# யாழில் ஊடகவியலாளரின் வீடு தாக்குதல்: பின்னணியில் இராணுவத்தினரே!

## பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

யூன் 16, 2024

யாழில் ஊடகவியலாளரின் வீடு தாக்குதலுக்குள்ளாகி மூன்று தினங்களாகியும் இதுவரை எவரையும் பொலிசார் கைது செய்யவில்லை என குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குறித்த தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தின் மறைகரங்கள் உள்ளதென தெரிவித்தார்.

அச்சுவேலியில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளரின் இல்லத்தை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலத்திற்கு பின்னர் ஊடகவியலாளரை இலக்கு வைத்து குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் கடந்த 13 ம் திகதி நடைபெற்று இன்றுடன் மூன்று நாள்களாகியும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிசார் ஆகியோர் தேடுகிறோம் பிடிக்கிறோம் என்கிறார்கள். எதுவும் நடப்பதாக இல்லை.

இதே ஜனாதிபதியை பற்றியோ அரச உயர் அதிகாரிகள் பற்றியோ யாராவது பதிவு போட்டால் ஒரு சில மணிநேரங்களில் கைது செய்யப்படுவார்.

யாழ் மாவட்டத்தில் மூலைக்கு மூலை இராணுவம், கடற்படை, விமானப்படை பொலிசார் குவிக்கப்பட்டு இருக்கும் போது எவ்வாறு இவர்களுக்கு தெரியாமல் மோட்டார் சைக்கிள்களில் துணிகரமாக வாள்கள் பொல்லுகளுடன் வரமுடிகிறது.

வீட்டுக்கு வெளியே நின்ற பேருந்து முச்சக்கரவண்டியை தாண்டி ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளை இனங்கண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த விடயத்தை திசைதிருப்புவதற்காக திருநங்கைகள்



மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி பலாலி வசாவிளான் பகுதியில் காணி துண்டு விடுவிப்புக்காக வந்தபோது, காணி விடுவிக்கப்படவில்லை மக்கள் கூடியநிலையில் அது தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற த.பிரதீபன், க.பரதன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்களும் இராணுவத்தினரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகப்பட்டு இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.





# வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா சாவடைந்தார்!

யூன் 16, 2024

முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தமிழினப் பற்றாளரும் இயற்கை உயிரின சூழல் ஆர்வலருமான வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அவர்கள் சாவடைந்துள்ளார்.

1983 இல் சிறீலங்கா சிங்கள கொடுஞ்சிறையில் சிறை வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி உயிருடன் மீண்டவர் வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அவர்கள்.

அன்று முதல் எம் மண்ணை விட்டகலாது தாயகத்திலேயே வாழ்ந்து தாயகத்தின் பணிகளுக்காகவே தன்னை அர்ப்பணித்துப் பணிபுரிந்த ஓர் உன்னத மனிதத்தைத் தமிழினம் இழந்திருக்கிறது.

தங்கத் தலைவன் தங்கத்துரை அவர்களும் தானை தளபதி குட்டிமணி அவர்களும் சிறையிலிருந்த போது அவர்களின் கண்களை தோண்டி எடுத்து இந்த கண்களா தமிழீழம் காணப் போகிறது என்ற வரலாற்றை பதிவு செய்த வெலிக்கடை சிறையில் தேச விடுதலையின் தியா கிகளுக்கு மருத்துவம் செய்தார் என்பதற்காக வெஞ் சிறையில் அடைக்கப்பட்டு. மட்டக்களப்பு சிறை உடைத்த மானமா வீரத்தமிழனாய் வெளியேறி இன விடு தலைக்காய் இறுதிவரை பணிசெய்த அன்பின் மாமனிதன் டாக்டர் ஜெயகுலராஜா






# திருகோணமலை மூதூர் கிழக்கு நெல்லிக்குளம் மலை உடைக்கும் இடத்திற்கு நீதிபதி விஜயம்!

யூன் 16, 2024

மூதூர் கிழக்கு சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பேர் கடந்த 11ம் திகதி சம்பூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்கள்.





இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிசார் தாக்கல் செய்ததுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு இன்று (15) விஜயம் மேற்கொண்டு ஆராய்வதாகவும் நீதிபதி தெரிவித்திருந்தார். அந்த வகையில் இன்று குறிப் பிட்ட இடத்திற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுச் சென் றார்.

குறித்த மலை உடைப்பின் காரணமாக அருகில் உள்ள விவசாயம், போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு போன்ற வற்றுக்கு பாதிப்பிருப்பதாகவும் கிராமத்தவர் ஒருவர் தெரி வித்தார்.

இங்கு வருகை தந்த சிரேஷ்ட சட்டத்தரணி தங்கமுத்து ஜயசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

சேனையூர் நெல்லிக்குள மலையைச் சுற்றி காணிகள் இருக்கின்றன.இங்கு கல் உடைப்பதற்கு எந்த வகையில்





அனுமதி வழங்கப்பட்டது என்று எமக்கு தெரியாது.

நீதிமன்றத்தில் இந்த விடயம் இருப்பதால் எமக்கு கருத்து சொல்ல முடியாதுள்ளது. இதனால் இக்கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள் துன்பப்படுகிறார்கள் என்று மாத்திரம் எமக்கு தெரிகின்றது என்றார்.

தற்போது இந்த இடத்தினை நீதிபதி அவர்கள் வந்து பார்வையிட்டு சென்றதினால் 20 ஆம் திகதி எமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்!

யூன் 19, 2024

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழக வளாகம் முன்பாக போராட்டத்தை இன்று புதன்கிழமை (19) ஆரம்பித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி தொடர்ச்சியாக பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் சத்தியாக்கிரக போராட்டத்தினை முன்னெடுத் துள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியா பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்களும் பம்பைமடுவில் அமைந் துள்ள பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக கொட்டகை அமைத்து சத்தி யாக்கிரக போராட்டத்தினை ஆரம்பித் துள்ளனர்.

தங்களது பிரச்சனைகள் உடனடியாக தீர்க்கப்படவேண்டும். அவ்வாறு தீர்க் கப்படாத பட்சத்தில் குறித்த போராட்டம் தொடர்ந்து செல்லும் என்று தெரிவித்த போராட்டகாறர்கள், ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்து வை, கொடுப்பனவை அதிகரி, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதை களையும் ஏந்தியிருந்தனர்.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களுடைய பூர்வீக காணிகள் அபகரிப்பு!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

யூன் 17, 2024

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு என்ற இடம் வெலிஓயாவாக மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து 4238 சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 3389 தமிழ் குடும்பங்களுக்கு காணி இல்லை என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.




முல்லைத்தீவில் இன்றையதினம் திங்கட்கிழமை (17) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வடமாகாணத்திலே 2415 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்புள்ள மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். கிட்டத்தட்ட 5 இலட்சத்தி தொண்ணூறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பை கொண்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்களுக்கு காணி இல்லை.

ஏற்கனவே விடுதலைபுலிகள் மௌனிக்கப்பட்ட காலங்களிற்கு பின்னர் பூர்விகமான மணலாறு என்ற இடம் வெலிஓயாவாக மாற்றம் செய்து. 4238 சிங்கள குடும்பங்களுக்கு காணிகள் வழங்கி வீட்டு வசதிகளும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்தே வழங்கியிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 47455 மொத்த குடும்பங்களும், 140931 மக்கள் தொகையாக காணப்படுகின்றது. இதில் தமிழர்களுடைய பூர்வீக இடங்களில் 4557 குடியமர்த்தப்பட்ட சிங்கள குடும்பங்களை சேர்ந்த 12545 பேரும், முஸ்லீம் மக்களாக 1675 குடும்பங்களை சேர்ந்த 6382 பேரும் தமிழ் மக்களாக 41210 குடும்பங்களை சேர்ந்த 121799 பேருமாக காணப்படுகிறார்கள்.

குறிப்பிட்டு கூறக்கூடிய விடயம் என்னவெனில் தமிழ் மக்களுக்கு சொந்தமாக இருந்த பூர்வீகமான நீர்ப்பாசன குளங்கள் அதனோடு சேர்ந்த காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டு 4557 குடும்பங்களில் பல குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதில் ஆமையன்குளம், முந்திரிகைகுளம், மறிச்சுக்கட்டி



குளம் ஆகிய குளங்களையும் அதனோடு இணைந்த நிலப்பரப்புகளையும் அபகரித்தே சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களையும், குளங்களையும் ஏக்கத்தோடு பார்த்து கொண்டிருக்கும் நிலமையை ஆட்சியாளர்கள் கொக்குத்தொடுவாய் , கொக்குளாய், கருநாட்டுக்கேணி மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள்.

இது தவிர 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 28676 இளைஞர், யுவதிகள் தமக்கு ஒரு ஏக்கர் காணி வீதம் தருமாறு விண்ணப்பித்த ஒரு நடவடிக்கை இருக்கின்றது.

அரசாங்கமே விண்ணப்பிக்குமாறு அறிவித்தல் வழங்கியிருந்தார்கள். ஆனால் இன்றுவரைக்கும் அவர்களுக்கான எதுவித காணிகளும் வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் நடக்கவில்லை என மேலும் தெரிவித்தார்.

# தென்னிந்திய திராவிடர்களின் வழித்தோன்றல்களே சிங்களவர்கள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்

யூன் 17, 2024

மரபணு பரிசோதனைகளின் மூலம் சிங்களவர்கள் தென்னிந்திய திராவிடர்களின் வழித்தோன்றல்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13ஆவது சீர்திருத்தம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கி.பி. 6 மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளிலேயே சிங்கள மொழி தோன்றியதாகவும் அதற்கு முன் சிங்கள இனம் இருந்திருக்க வாய்ப்பில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் மெர்வின் சில்வா கூறுவது போல துட்டகைமுனு ஒரு சிங்கள மன்னன் இல்லை. துட்டகைமுனு வாழ்ந்த காலத்தில் சிங்களம் என்ற ஒரு மொழியே இல்லை.

துட்டகைமுனு ஒரு சிங்கள மன்னன் எனக் கூறும் மெர்வின் சில்வா இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும் எனவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாளி மற்றும் தமிழ் ஆகிய மொழிகளின் கலவையிலேயே சிங்கள மொழி உருவாக்கப்பட்டது.

இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு பாளி மொழியும் கொண்டுவரப்பட்டது. ஆனால், தமிழ் மொழியே இலங்கை தீவின் ஆதி மொழி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# பாலங்களைக்கூட நிர்மாணிக்கமுடியாத இனவாத அரசு தமிழருக்கு எவ்வாறு தீர்வை வழங்கும்; வட்டுவாகல்பாலம் உடனடியாக நிர்மாணிக்கப்படவேண்டும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

யூன் 17, 2024

சாதாரணமாக எமது தமிழர் பகுதிகளிலுள்ள பாலங்களைக்கூட நிர்மாணிக்கமுடியாத இந்த இனவாத அரசாங்கம், எவ்வாறு தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கும் என முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப் பியுள்ளார்.

முல்லைத்தீவு - வட்டுவாகல்பாலத்தின் தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை முல்லைத்தீவு மக்களின் போக்குவரத்திற்கு பாரிய பிரச்சினையாக இருக்கின்ற வட்டுவாகல் பாலம் உடனடி யாக நிர்மாணிக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.






இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு - யாழ்ப்பாணத்திற்கான A-35பிரதான வீதியில் இந்த வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது.

கடந்த 1950ஆம் ஆண்டு காலப்பகுதியளவில் கட்டப்பட்டதாக அறியப்படுகின்ற இந்த வட்டுவாகல் பாலமானது, 70 வருடங் களுக்கும் அதிகமான பழமைவாய்ந்த பாலமாகும்.




குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதியுத்த காலத்தில் அதிகம் பேசப்பட்ட பாலமாக இந்தப் பாலம் காணப் படுகின்றது.

இறுதியுத்த காலத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையி லிருந்து எஞ்சிய மக்கள் இந்த வட்டுவாகல் பாலத்தின் வழி யாகவே வெளியேறியிருந்தனர். அந்தவகையில் இங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்ற பாலமாக இந்த வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது.

யுத்தத்தின் பின்னரான சூழலில் எமது தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பு, மதத் திணிப்பு, கடலில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இதனால் இங்குள்ள தமிழ்மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக் கியுள்ளனர். அதேபோல் இவ்வாறான மிகமுக்கியமான பாலங்கள் சீரின்மையாலும் எமது தமிழ் மக்கள் பாரிய போக்கு வரத்துப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறான பழமைவாய்ந்த பாலங்களை புதிதாக அமைத்துத் தராமல், இங்குள்ள தமிழ் மக்களை தொடர்ந்தும் போக்கு வரத்துப் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கவேண்டுமென இந்த இன வாத அரசாங்கம் செயற்படுவதாகவே எம்மால் பார்க்க முடி கின்றது.

குறிப்பாக தற்போது பழமையான இந்தப் பாலம் அடிக்கடி உடைவதும், போக்குவரத்துத் தடை ஏற்படுவதும், பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சீரமைப்புச் செய்யப்படுவதுமாக இந்தப் பாலத்தின் நிலை காணப்படுகின்றது.

அதேவேளை ஒரு வழிப் பாதையாக மிகவும் ஒடுங்கிய பால மாக இந்தப் பாலம் காணப்படுகின்றது. இதனால் ஒருகரையி லிருந்து வாகனங்கள் வரும்வரை, மறுகரையிலிருக்கின்ற வாகனங்கள் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே அவசர மருத்துவ சேவைகளைப் பெறவேண் டியவர்களும் காத்திருந்தே செல்லவேண்டிய அவலநிலை களும் தொடர்கின்றன.

இந்தப்பாலம் சில இடங்களில் உடைவடைந்து மிகவும் ஒடுங் கிய நிலையிலும் காணப்படுகின்றது. இதனால் பாரிய விபத் துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களுமிருக்கின்றன.

இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், ஆபத்துநிலைகளுக்கு மத்தியிலுமே இந்தப் பாலத்தின் வழியே மக்கள் பயணம்செய்ய வேண்டிய நிலையிருக்கின்றது.

குறிப்பாக முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பு, யாழ்ப் பாணம், பரந்தன், கிளிநொச்சி உள்ளிட்ட எந்தப்பகுதிக்குச் செல் வதானாலும் இந்தப் பாலத்தைக் கடந்தே செல்லவேண்டும். அந்த அளவிற்கு மிக முக்கியமான பாலமாக இந்தப் பாலம் காணப்படுகின்றது.

நாட்டை ஆட்சிசெய்கின்ற இனவாத அரசாங்கம் தென்பகுதியில் இவ்வாறானதொரு போக்குவரத்து நெருக்கடி இருப்பின் உடனடி யாக அந்த நெருக்கடியை சீர்செய்திருப்பார்கள். பாலங்களை உடனடியாக நிர்மாணித்திருப்பார்கள். இத்தகைய நெருக்கடி நிலைமை வடக்கில் காணப்படுவதனாலேயே கண்டும் காணாமல் இருக்கின்றனர்.

ஆனால் தற்போது ஜனாதிபதித் தேர்தல் வரவிருக்கின்ற நிலை யில், பலதரப்பினரும், தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற் காக தென்னிலங்கையிலிருந்து எமது தமிழர் பகுதிகளுக்கு வருகைதருகின்றனர்.

சாதாரணமான இந்தப் பாலங்களைக்கூட நிர்மாணிக்க முடியாதவர்கள், எவ்வாறு எமது தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரப்போகின்றார்கள் எனத் தெரியவில்லை.

மேலும் கடந்த 2009 மேமாதம் 18ஆம் திகதி போர் மௌனிக் கப்பட்ட பிற்பாடு, அரசாங்கம் தமக்கு வெற்றி கிடைத்ததாக அறி வித்துக்கொண்டு வெற்றி நினைவுச்சின்னங்கள், தமிழர்களின் பூர்வீக இடங்களில் பாரிய விகாரைகளையும் அமைத்து வருகின்றனர்.

இவ்வாறாக மக்களுக்குத் தேவையான, அத்தியாவசியமான வேலைகளை மேற்கொள்ளாது தேவையற்ற போர் வெற்றிச் சின்னங்களையும், விகாரைகளையும் அமைக்கின்ற இனத் துவேச மற்றும், மதவெறிச் செயற்பாடுகளை மேற்கொள் கின்றனர்.



இவ்வாறான போக்குடன் செயற்படாது மிக முக்கியமான இந்தப் பாலத்தை நிர்மாணத்துத் தரவேண்டுமென உரிய தரப்பினர் களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு சர்வதேச கண்காணிப்புக்கு வலியுறுத்தும் முல்லைத்தீவு ஊடக அமையம்!

யூன் 19, 2024

நாட்டில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் மற்றும், அடக்குமுறைகளுக்கு சர்வதேச கண்காணிப்பு அவசியமென முல்லைத்தீவு ஊடக அமையம் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச்சேர்ந்த தம்பித்துரை பிரதீபன் என்னும் ஊடகவியலாளரின் வீடு தாக்கப்பட்டமை மற்றும், அவரின் வீட்டிலிருந்த சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே முல்லைத்தீவு ஊடக அமையம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகளுக்கு சர்வேதச கண்காணிப்பை வலியுறுத்துகின்றோம்.

இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் மற்றும், அடக்குமுறைச் சம்பவங்களுக்கு சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம் என்பதை முல்லைத்தீவு ஊடகஅமையம் வலியுறுத்துகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த தம்பித்துரை பிரதீபன் என்னும் ஊடகவியலாளரின் வீடு தாக்கப்பட்டுள்ளதுடன், சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் - அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியிலுள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபன் வீட்டின்மீது கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை, அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வருகைதந்த, ஐந்துபேர் அடங்கிய வன்முறைக் குழுவினாலேயே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளதோடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டிலிருந்த ஒரு மில்லியன் ரூபாய்க்கும் மேலான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தொடர்ச்சியாக நாடெங்கும், குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் பக்கச்சார்பற்ற வகையில் செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள்மீதான அச்சுறுத்தல்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன.

இது குறித்த முறைப்பாடுகள் பொலிஸ் மற்றும் ஜனாதிபதி வரையிலான உயர்மட்டத்திற்கு அளிக்கப்பட்ட போதும், இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

அரசின் இந்த நிலைப்பாடே, எந்த குற்றத்தையும் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிவிடலாம் என்கிற எண்ணபோக்கை ஏற்படுத்தியுள்ளது. முறைப்பாடு அளிக்கப்படும் போது அது விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், இவ்வாறான அச்சுறுத்தல்கள் நடைபெற்றிருக்காது.

கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் நடவடிக்கைக்கு இலங்கை அரசு துணைபோவதாகவே எம்மால் பார்க்க முடிகின்றது. எனவேதான் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும், அடக்குமுறைச் சம்பவங்களுக்கு முல்லைத்தீவு ஊடக அமையம் சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் பல்வேறு ஊடகவியலாளர்கள் மீது இராணுவம், பொலிஸ், புலனாய்வாளர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர்களது மிலேச்சத்தனமாக சித்திரவதைகள், தொடர்ச்சியான கண்காணிப்பு அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், அடக்குமுறைச் சம்பவங்கள் என்பன இடம்பெற்றிருக்கின்றன.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்படுதல், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகுதல், சட்ட




விரோத தொழில்நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களினால் அச்சுறுத்தப்படுதல், தாக்குதலுக்கு உள்ளாகுதல் உள்ளிட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

மேலும் கடந்த காலங்களில் 44 தமிழ் ஊடகவியலாளர் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் அதற்கான நீதிகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மீண்டும் தொடர்ச்சியாக தமிழ் இன அடையாளத்தினை கொண்ட ஊடகவியலாளர்கள் என்ற காரணத்தினால் தொடர்ச்சியாக இவ்வாறான அச்சுறுத்தல்களும் துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும் தமிழ் ஊடக பரப்பினை சேர்ந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறையில் பணியாற்றும் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபன் வீடு தாக்கப்பட்டு சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை என்பது, அவரின் சுயாதீனமானதும் வினைத்திறனானதுமான ஊடக செயற்பாட்டிற்கு அடிக்கப்பட்ட சாவு மணியாகும்.

இவ்வாறு தமிழ் ஊடகவியலாளர்களின் ஊடக பணிக்கு இடையூறு விளைவிக்கும், அச்சுறுத்தல் மேற்கொள்ளும் செயற்பாடுகளை முல்லைத்தீவு ஊடக அமையம் வன்மையாக கண்டிப்பதுடன் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள உரியதரப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்கின்றோம். எனக் குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குருந்தூர் மலையில் சிறீலங்கா காவல் துறை மற்றும் புலனாய்வாளர்களின் கண்ணகாணிப்புக்கு மத்தியில் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் வழிபாடு!

யூன் 19, 2024

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாடு செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள குருந்தூர்மலை பகுதியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகள் தொடராக நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் சிவனை தரிசிப்பதற்காக ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் இன்றையதினம் காலை 10 மணியளவில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த வழிபாட்டில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஞா. யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஜெகதீசன், ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

தொல்லியல் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய சேதம் ஏற்படுத்தாத வண்ணம் வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# புதிய மகசீன் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மன உளைச்சலுக்குள்ளாகி உள்ளனர்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

யூன் 19, 2024

புதிய மகசீன் சிறைச்சாலைக்கு பயணம் செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை (18) காலை நேரில் சந்தித்து உரையாடினார்.

குறிப்பாக, புதிய மகசீன் சிறைச்சாலைக்குச் சென்று 15 வருடங்களாக அரசியல் கைதியாக கொடுஞ்சிறையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுருக்கும் கிருபாகரனுடன் (மொறிஸ்) தமிழ் அரசியல் கைதிகள் முகங் கொடுத்து வருகின்ற நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாடி இருந்தார்.

அதன்பின்னர் செல்வராசா கஜேந்திரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்:-

தமிழ் அரசியல் கைதிகள் முகங்கொடுக்கும் நெருக்கடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக புதிய மகசீன் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். அங்கு 15ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கிருபாகரனுடன் உரையாடினேன்.

குறிப்பாக கொடிய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலைமைகளே நீடிக்கின்றன.

விசேடமாக, ஒரு வழக்கிற்கு மேலதிகமாக பல வழக்குகளை அவர்கள் மீது தொடுத்து மரணிக்கும் வரையில் அவர்களை சிறைக்குள் தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இரட்டை ஆயுள்காலத்தினை சிறையினுள் கழித்துள்ள போதும் அவர்களை விடுவிக்காது மேலதிக வழக்குகளை தொடுக்கின்ற நிலைமைகள் துரதிஷ்டமானது.

சர்வதேச சட்டங்களையும், விதிமுறைகளையும் மீறும்




வகையிலான பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையும், ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்தியுள்ளபோதும் இலங்கை அரசாங்கம் அதனை கருத்தில் கொள்ளாத நிலைமை தொடர்கின்றது. இதனை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

# சமஸ்டித் தீர்வை அடைந்துகொள்ள இந்தியா ஒத்துழைக்க வேண்டும்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

யூன் 20, 2024

20-06-2024 வியாழக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்துக்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு.



20-06-2024
கௌரவ சுப்பிரமணியம் ஜெய்சங்கர்
வெளிவிவகாரச் அமைச்சர்
வெளிவிவகார அமைச்சு
புதுடில்லி
இந்தியா

ஐயா,

இலங்கைத்தீவில் தமிழருடைய தேசத்தையும் அதன் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் சமஸ்டித் தீர்வை அடைந்துகொள்ள இந்தியா ஒத்துழைக்க வேண்டும்.

பிரித்தானிய காலணித்துவ ஆதிக்கத்தில் இருந்து இலங்கை விடுபட்டதன் பின்னரான 75 வருட காலத்தில், இலங்கை அரசானது பொருளாதார ரீதியாக மட்டுமின்றி அரசியல் ரீதியாகவும் பாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 75 வருடங்களாக இலங்கை கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய இந்த வங்குரோத்து நிலைக்கு காரணமாக அமைந்திருக்கிறது. எனவே, இந்நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் கொள்கைகளிலும் ஒரு உண்மையான தீர்க்கமான மாற்றம் தேவைப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரசினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் 'ஒற்றையாட்சி' அரசியல் அமைப்பாகும். குறிப்பாக 36 வருடங்களுக்கு முன்னர் சிறீலங்கா அரசியலமைப்பில் 13 ம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு முற்றுமுழுதாக நடைமுறையில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது. அதேவேளையில் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் 13 ஆம் திருத்தம் தற்போதும் முழுமையாக நடைமுறையிலுள்ளபோதும்கூட தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றிற்கும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. குறிப்பாக, 13 ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அரசியல் ரீதியாக, அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் களச்சூழல் மேலும் மேலும் மோசமாகியே உள்ளது. யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், எந்தவொரு வழிமுறையூடாகவும் அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாதவாறு இருப்பதனால், அந்த ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட 13ம் திருத்தச்சட்டம் அறிமுகப்படுப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே தமிழர் தரப்பு முழுமையாக அதனை நிராகரித்து வந்துள்ளது. இந்த 13 ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதன் அதிகாரங்கள் குறித்து சிறீலங்காவின் மீயுயர் நீதிமன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத்தும், அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதிகாரங்களும், கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, அதிகார பகிர்வுக்கு எதிராகவே நீதிமன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக்கிறன.

இந்நிலையிலேயே, தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, 13ம் திருத்தசட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை இந்தியா கோரி வருகின்றது. ஆனால், 13ம் திருத்தத்தின் சரத்துகளின் அமுலாக்கம் குறித்து எப்போதெல்லாம் சிறீலங்காவின் மீயுயர் நீதிமன்றை நாடிய போதெல்லாம், அது மேற்குறிப்பிட்டவாறே தீர்ப்புகளை அளித்திருக்கிறது. அரசியலமைப்பு குறித்தான பொருள்கோடல் செய்து இறுதி முடிவுகளை எடுக்கும் அதிஉயர் பீடமாக சிறீலங்காவின் உச்ச நீதிமன்று இருக்கின்றது. அந்த உச்ச நீதிமன்று 13ம் திருத்த அதிகாரங்கள் குறித்து இதுவரை காலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13ம் திருத்தமானது, சிறீலங்காவின் சட்டவரம்புகளின் பிரகாரம் அது 'முழுமையாக' அமுல்படுத்தப்பட்டே உள்ளது.

இலங்கையில் இனநல்லிணக்கத்தினை ஏற்படுத்தல் என்னும் பெயரில் புதிய அரசியல் யாப்பிற்கான வரைபை உருவாக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 2016 மார்ச் இல் ஆரம்பமாகி 2019 சனவரியில் நிறைவடைந்தது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைபானது தற்போது இருப்பதனை விடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்கான வரைபாகும். அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாது. இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13 ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்க கூடாதெனும் நிலைப்பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாகவுள்ளது.

அத்தோடு, இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய எந்தவொரு பேச்சுவார்த்தையும், நேர்மையானதாகவும் தீர்க்கமானதாகவும் இருக்கவேண்டுமெனில், அரசியலமைப்பு மூலம், நாட்டின் ஐக்கியத்தை பேணிக்கொள்ளும் அதேவேளை, ஒற்றையாட்சியைக் கடந்து சமஸ்டி முறையை கருத்தில் எடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய முடியும் என்பதை சிங்கள தேசத்தின் தலைவர்கள், தமது மக்களுக்கு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கவேண்டும் என்பதையும் எமது அமைப்பு வலியுறுத்தி நிற்கின்றது.

1985 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இந்தியாவின் ஆசீர்வாதத்தோடும் அனுசரணையோடும் நடந்த பேச்சுக்களில் தமிழர் தரப்பில் அனைவரும் இணைந்து ஒருமித்த குரலில் முன்வைத்த திம்புக்கோட்பாடுகள் தீர்வுக்கான அடிப்படைகளாக இருக்க வேண்டுமென எமது அமைப்பு மிக திடமாக நம்புகிறது .

பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ள இலங்கை அரசானது, தனக்குரிய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்ய உலக நாடு



களில் தங்கியுள்ள நிலையில், வேறெந்த நாடுகளை விடவும் இந்தியாவிற்கு சிறீலங்கா மீதான பிடி மிகவும் வலிதானது. இக்கட்டான நிலையில் இருந்து சிறீலங்காவை மீட்பதற்காக தனது நடவடிக்கைகள் மூலம் சிங்கள மக்களின் மரியாதையும் இந்தியா வென்றிருக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது.

இந்நிலையில், ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதை இந்தியா ஏற்று, தமிழரின் அந்த நிலைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதோடு, தமிழர் தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு இந்தியாவை தீர்க்கமாக வேண்டிக் கொள்கிறது.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் போரினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக்கென சர்தேச நிதிஉதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர்குறித்து வடக்கு கிழக்கு நிலைமைகள் தொடர்பான அறிக்கையிடலுக்காக நியமிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அத்துடன் இலங்கையின் கடற்பரப்பினுள் எல்லதாண்டி நுழையும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளால் தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் இந்திய அரசு உடன்நடவடிக்கை எடுத்து தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோருகின்றோம்.

இறுதியாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக கொள்வதில் தமிழ்த் தேசமும் எமது அரசியல் இயக்கமும் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்பதனையும் இங்கு மீளவும் வெளிப்படுத்திநிற்கின்றோம்.

நன்றி

செல்வராசா கஜேந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# சிறீலங்கா ஜனாதிபதியின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனுமில்லை!

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன்

யூன் 20, 2024

சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே இந்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை (20) பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளும் விவகாரத்துக்காக மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

காற்றாலை உற்பத்தியை இந்தியாவுக்கு வழங்குகின்ற விவகாரம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து இராமேசுவரத்துக்கான தரைவழிப் பாதை அமைப்பது சம்பந்தமாகவும் உரையாடிச் சென்றுள்ளார்.

அவருடைய வருகை அரசியல் ரீதியாக நிறைவேறி இருந்தாலும் மன்னார் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைத்ததாக தெரியவில்லை. இங்குள்ள காணி விடுவிப்பு குறித்து எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கலந்துகொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தை வலிமையாக வலியுறுத்தவும் இல்லை. அவர்களும் ஆளும் கட்சி போல் ஜனாதிபதியின் நிகழ்வில் ஆசுவாசமாக கலந்துகொண்டு சென்றுள்ளனர்.

மன்னாரில் இனி புதிதாக குடியேறுவதற்கு எவ்வித காணியும் இல்லை.

வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வை



யில் காடுகளை பாதுகாத்தல், விலங்குகளை பாதுகாத்தல், கரையோரத்தை பாதுகாத்தல் என்ற போர்வையில் சகல இடங்களையும் வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்டு, மன்னாரில் மக்கள் குடியேறாத வகையில் ஒரு துண்டு நிலம் இல்லாத நிலையில் உத்தரவாதத்தை அரசு மீறி விட்டது என தெரிவித்தார்.

# பலத்த பாதுகாப்புடன் குருந்தூர்மலையை நோக்கி நகரும் பிக்குகள் குழு!

யூன் 20, 2024

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை பகுதியில் நீதிமன்றத்தின் அனுமதியை மீறி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு பொலிஸார், விஷேட அதிரடிபடையினரின் விஷேட பாதுகாப்புடன் பாதயாத்திரை ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி தொடக்கம் மகியங்கனையிலிருந்து பாத யாத்திரை ஒன்றினை ஆரம்பித்த பிக்குகள் குழு ஒன்று இன்று (20.06.2014) முல்லைத்தீவு மாவட்டத்தை அடைந்து முல்லைத்தீவு குருந்தூர் மலையை செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த பயண வழிகள் எங்கும் பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டுள்ளதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக அளம்பில் சந்தியை அண்டிய பகுதியில் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிசார் இணைந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பதுடன் வீதி தடுப்புக்கள் அப்பகுதியில் வைத்திருப்பதனையும் அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

இந்த பாதுகாப்பு கடமைக்கு பொலிசாரின் பாதுகாப்புடன் தென் பகுதி மற்றும் வெளியோர் பகுதிகளில் இருந்து வருகை தந்த பௌத்த மக்கள் பௌத்த கொடியினை வீதியில் இரு பகுதிகளிலும் நாட்டி கூடாரங்களையும் அமைத்துள்ளமையையும்



அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.









# திருக்கோவிலால் காப்பாற்றப்ட்ட வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா மறைவு!

யூன் 20, 2024

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் திருக்கோவிலுக்கும் முக்கிய இடம் உண்டு. அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை - 16ஆம் திகதி பிரிந்த வைத்திய கலாநிதி ஜெயகுலராஜாவை பற்றிநினைக்கையில் திருக்கோவிலையும் தவிர்த்துவிட முடியாது.



திருக்கோவிலைச் சேர்ந்த எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜாவுக்கும் கணுக்கேணி, தண்ணீரூற்றை சேர்ந்த றோஸ்மனோன்மணிக்கும் மகனாக பிறந்தவர்தான். இவரது சகோதர, சகோதரிகள் ரூத் மிருணாளினிதேவி (பாக்கியம்), மேரிபத்மினிதேவி, பெஞ்சமின் ஜெயனந்தராஜா, சாமுவேல் ஜெயதிலகராஜா, ஜோய்ஸ் ஜெயகுமாரி ஆகியோராவர்.

தனது மைத்துனி முறையான கிறிஸ்டினா ஞானதிலகராணியை இவர்திருமணம் செய்தார். இந்தத் தம்பதியருக்கு டானியல் ஜேசன் என்றமகன் பிறந்தார்.



27.10.1982 அன்று நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதலில் சீலன், புலேந்திரன், ரகு (குண்டப்பா) ஆகியபோராளிகள் காயமடைந்தனர். முப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடாநாட்டில் காயமடைந்த இவர்கள் மூவரையும் காப்பாற்றுவது இலகுவான விடயமல்ல. மேலதிக சிகிச்சைக்காக தமிழகத்துக்கு அனுப்பும் வரை தேவையான வைத்தியத்தை மேற்கொள்ள வேண்டும். இப்பணியில் டாக்டர் ஜெயகுலராஜா, அவரது சகோதரர் போதகர் ஜெயதிலகராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவரின் துணைவியாக விளங்கிய நிர்மலா ஆகியோர் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டனர். போராளிகள் காயமடைந்ததால் அதற்குத் தேவையான மருந்துகளைப் பெற முயற்சிப்பர் எனக் கருதிய உளவுத்துறையினர் மருந்தகங்களை கண்காணித்தனர். குறிப்பிட்டவகை மருந்துகளை கொள்வனவு செய்தவர் யார் என ஆராய்ந்தனர். அந்த வகையில் வண. பிதா சிங்கராயர் கைதானார். அதன் தொடர்ச்சியாக வண. பிதா சின்னராசாவும் மேற்குறிப்பிட்டஅனைவரும் கைதாகினர்.

வெலிக்கடை சிறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் போது நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதலினால்தான் இவர்களாவது உயிர் தப்ப முடிந்தது. இந்த நடவடிக்கைகளின் போது 54 தமிழ் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். தமிழினம் எதிர்த்தாக்குதல் நடத்தாவிட்டால் உயிர் பிழைக்க முடியாது என்பது அன்று கற்றுக்கொண்ட பாடம். இந்த இனம் தன்னைத் தற்காத்துக் கொள்ளநடத்திய போராட்டத்தைத்தான் 2009இன் பின்னர் அரசியலுக்குள்புகுந்தோர் வன்முறை என்று முகம் சுழிக் கின்றனர்.

வெலிக்கடை சிறைப் படுகொலை சர்வதேசத்தில் ஏற்படுத்திய தாக்கத்தாலோ என்னவோ எஞ்சியிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர். மீண்டும் தென்னிலங்கை சிறைக்கு மாற்றப்படலாம் என்ற காரணத்தாலும் தமது எஞ்சியகாலத்தை விடுதலைக்காக மீண்டும் பயன்படுத்தலாம் என்பதாலும் சகல இயக்கத்தவர்களும் தொடர்புபட்டவர்களும் சிறையை உடைத்து தப்பிப்பதென முடிவெடுத்தனர். இந்த நடவடிக்கையில் புலிகள் சார்பானோருக்கு சிறைக் காவலர்களை கட்டி வாயில் பிளாஸ்டர் போடும் பணி வழங்கப்பட்டது. பெண்கள் விடுதியில் இருந்த நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட் இயக்கத்தைச் சேர்ந்த மாணிக்கம் தாசனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுபோல், டக்ளஸ் போன்றோருக்கும் குறிப்பிட்ட பணி ஒதுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது மாணிக்கம்தாசனை தவிர மற்றெல்லோரும்தமக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றினர்.

தனிக்குழு ஒன்றை அமைத்து செயல்படப்ட்ட பரமதேவா புலிகள் சார்பானோரை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றார். இவர்களை பொறுப்பேற்க ஒரு குழுவினர் சென்றனர். எனினும் சகோதரர்களான தானும் ஜெயதிலகராஜாவும் ஒன்றாகப் பயணிக்கக்கூடாது என டாக்டர் முடிவெடுத்தார். இடையில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இருவருமே பலியாக வேண்டுமே எனயோசித்தார்.

தனித்தனியாக பயணிப்பதை போதகரும் ஏற்றுக்கொண்டார். பாதுகாப்பான தங்குமிடங்களில் ஒன்றாக திருக்கோயிலும் இருந்தது. மட்டக்களப்பிலிருந்து திருக்கோயிலுக்கு படகில் செல்வதென முடிவெடுக்கப்பட்டது. இன உணர்வாளரான ஒரு முஸ்லிம் சகோதரர் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திருக்கோயிலுக்கு படகு சென்றதை அரசின் உளவாளியான பனிக்கோபால் கண்டு கொண்டார். இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் எல்லாத் தடயங்களையும் இல்லாமல் அழிப்பதற்கு மிக வேகமாக செயற்பட்டனர். இந்த நிலையிலும் டாக்டருக்கு அறிமுகமான ஆனந்தப் போடியார் என்று அழைக்கப்படும் இராஜதுரை ஆனந்தராஜா பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில், டாக்டரை தவிர ஏனையோரை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தோசம் திருமலை வழியாக அவர்களை அழைத்துச் சென்றார். டாக்டரை இன்னொரு போராளி பொறுப்பெடுத்துக் கொண்டார். இந்த நடவடிக்கைகளின்போது தனது வாகனத்தையும் பல்வேறு உதவிகளையும் வழங்கிய உதவினார் ஆனந்தப் போடியார். பஸ், கார், கால் நடை எனப் பலவழியிலும் பயணம் மேற்கொண்டு மன்னார் பரப்புக்கடந்தானை சேர்ந்தார் டாக்டர். பின்னர் கல் ஏற்றும் லொறி, பஸ், வள்ளம் எனத்தொடர்ந்த பயணம் முதலில் யாழ்ப்பாணத்தையும் பின்னர் படகின் மூலம் தமிழகத்திலும் நிறைவடைந்தது.

தமிழகத்துக்கு பயணமான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மருத்துவ பிரிவு, போன்றவற்றின் ஆரம்பப் பணிகளில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டார். இப்பணிகளில் பாலா அண்ணா, அடேல்அன்ரி ஆகியோரின் ஒத்துழைப்பும் இருந்தது.



நாடு திரும்பியபின் சென். ஜோன்ஸ் சுண்டுக்குளி பாடசாலைகளின் நிர்வாக பணிகளிலும் ஈடுபட்டார். (இறுதியாக இவரது புகழுடலுக்குசென்.ஜோன்ஸ் கல்லூரியின் கொடியே போர்த்தி அஞ்சலிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது)

தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் குடம்பங்களை, விஷேடமாக பிள்ளைகளை வளர்ப்பதிலும், கல்வியூட்டுவதிலும் இறுதிமூச்சுவரை அயராது பாடுபட்டவர்.

பல சிறுவர் இல்லங்களை நிறுவி அதனை முன்னின்று நடாத்



தியவர்.

முல்லைத்தீவிலும் வன்னிப்பரப்பிலும் பல வைத்தியர்கள் உருவாகக்காரணராக இருந்தவர்.

மாஞ்சோலை வைத்தியசாலை உருவாகக் காரணரும் அதனைதிறந்து வைத்தவர் அவரே.

உதாரணம் பாரதி சிறுவர் இல்லம்.

YMCA நிறுவனத்தில் பொறுப்பு மிக்க பதவிகளை ஏற்று அதனூடாக தமிழ் மக்களுக்கு அயராது சேவையாற்றியவர்.

உதவி கேட்டு தன்னை நாடி வந்த மக்களுக்கு முகங்கோணாது சிகிச்சை அளித்தவர் வைத்தியர் ஜெயகுலராஜா.

அவர் செய்த பணிகளை ஒருபோதும் யாரிடமும் பெருமைக்காக கூறியதில்லை. ஏன், குடும்பத்தினரிடம் கூட பகிர்ந்ததில்லை. ஏராளமான பணிகள் அவரது வாழ்வில் செய்து சாதித்தவர்.

தேசியத் தலைவரோடு மிகவும் நெருக்கமாக பழகியவர்களில் வைத்தியரும் ஒருவராவர். இறுதிவரை தேசியத்தலைவரின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக இருந்தவர் என்பது தேசியத் தலைவரோடு பணியாற்றிய சிலருக்கே தெரிந்திருந்தது.

தொடர்ந்து முல்லை மாவட்ட வைத்திய அதிகாரியாக (MOH) நியமிக்கப்பட்டார். ஏற்றிருந்த பொறுப்புகள் மூலமாகவும் விடுதலைப்பணிகள் வாயிலாகவும் மக்கள் மனதில் இடம்பிடித்த இவரை என்றென்றும் மறக்காது தமிழினம்.

மட்டக்களப்பு சிறையுடைப்பைத் தொடர்ந்து விடுதலைக்கான பங்களிப்பில் பெரும் பங்காற்றிய ஆனந்தப் போடியாரின் இழப்பை பெரும் துயரமாகவே உணர்கின்றனர் கிழக்கு மாகாண போராளிகளாக விளங்கியோர். விடுதலைப் போராட்டம் மௌனிக்கும் வரை (இந்திய இராணுவ காலம் உட்பட) நிதியாகவும் பொருளாகவும் நிலமாகவும் ஏதோவொரு வகையில் பங்களித்த ஆனந்தப் போடியாரின் நினைவுகள் என்றென்றும் மனதில் இருக்கும்.

அதேவேளை, ஆலயத்தில் கேட்கும் கணீரென்ற குரல், பொது விடயங்களுக்காக வாரி வழங்கும் வள்ளல் தன்மை போன்றவற்றால்என்றும் மறக்க முடியாதவராக இருக்கும் ஆனந்தப் போடியார் குறைந்தபட்சம் இரு தலைமுறைகளில் தனது பெயரைப் பதித்துவைத்துள்ளார். அவரின் மறைவு நிகழ்ந்து ஓராண்டு நெருங்கும் வேளையில் டாக்டரின் மறைவு அனைவரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

# நெடுந்தீவு இளைஞனின் படுகொலைக்கு நீதி கோரிப் போராட்டம்!

யூன் 21, 2024

நெடுந்தீவு பகுதியில் கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி வேண்டி நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன் நெடுந்தீவு மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நெடுந்தீவு ஏழாம் வட்டாரத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப் பட்டார்.

பிரேத பரிசோதனையின் பின் நேற்று இரவு சடலம் உறவினர் களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் இன்று இறுதி கிரிகைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் நல்லடக்கத் திற்காக சேமக்காலைககு எடுத்துச் செல்லும் போது மக்கள் சடலத்தையும் தோள்களில் சுமந்தவாறு நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

நேற்றைய தினம் நடைபெற்ற இளைஞர் கொலையுடன் சம்பந் தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே நேற்றைய தினம் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை யில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரையும் விரைவாக கைது செய்யு மாறு கோரி நெடுந்தீவு மக்கள் சடலத்துடன் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்









# தியோகுநகரில் அவலோன் நிறுவனத்தின் அடாவடியை எதிர்த்து பொதுமக்கள் போராடியமை தொடர்பான வழக்கில் முன்னிலையான ஏழுபோரை சொந்தப்பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவு!

யூன் 21, 2024

முல்லைத்தீவு - தியோகுநகர்ப் பகுதியில் கடந்த 26.05. 2024 ஆம் திகதி கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குரிய மக்கள் பயன்பாட்டிலுள்ள வீதியை, அவலோன் எனப்படும் தனியார் நிறுவனம் அடாவடியாக வேலியிட்டுத் தடுத்தமை யால், அப்பகுதியைச்சேர்ந்த பொதுமக்கள், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ் செழியன் ஆகியோர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அடாவடியாக வீதியைத் தடுத்து அமைக்கப் பட்ட வேலியையும் அப்புறப்படுத்தியிருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கு 20.06.2024 நேற்று விசா ரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த விவ காரங்களுடன் தொடர்புபட்டுள்ள முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற் பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், தியோகுநகர் கிராம மக்கள் நால்வர், அவலோன் நிறுவன முகாமையாளர் உள்ளிட்டவர்களை சொந்தப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், இந்த வழக்கு மேல திக விசோரணைக்காக எதிர்வரும் 25.07.2024ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப் பிரி விற்குட்பட்ட, சிலாவத்தை தெற்கு கிராம அலுவலர் பிரி விலுள்ள தியோகுநகர் கிராமத்தில், கடந்த 26.05.2024 ஆம்திகதியன்று, கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைக்குரிய வீதியினை அவலோன் எனப்படுகின்ற தனியார் நிறு வனத்தினர் அடாவடியாக வேலி இட்டுத் தடுத்திருந்தனர்.

இந் நிலையில் அவ்வீதியைப் பயன்படுத்துகின்ற தியோகு நகர் கிராமத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட் டிருந்தது.

எனவே அவலோன் எனப்படும் தனியார் நிறுவத்தின் இத் தகைய செயற்பாட்டைக் கண்டித்து அப்பகுதி மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், வீதியின் குறக் காக அமைக்கப்பட்ட வேலியை பொதுமக்கள் அப்புறப் படுத்தியுமிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து குறித்த ஆர்ப்பாட்ட இடத்திற்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை மற்றும், கரைதுறைப்பற்று



பிரதேசசெயலக அதிகாரிகள் வருகைதந்து நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டனர்.

அதன்பின்னர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, பிணக்குக் குரிய குறித்த வீதி தம்முடையதெனவும், அதுதொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளி வந்துள்ளதாகவும் கடிதத்தின் மூலமும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இவ்வாறான சூழலில் அவலோன் தனியார் நிறுவன முகாமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் சமாதானக்குலைவு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற்பாட்டாளர் அன்ரனி ஜெய நாதன் பீற்றர் இளஞ்செழியன், தியோகுநகர்கிராம மக்கள் 12பேர், அவலோன் தனியார் நிறுவன முகாமையாளர் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் இவ்விடயம் தொடர்பில் தொடரப்பட் டுள்ள வழக்குஎண் 61183 என்னும் வழக்கின் விசா ரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் 20.06.2024 நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணையில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற்பாட் டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், நான்கு தியோகுநகர் கிராமமக்கள், அவலோன் நிறுவன முகாமையாளர் உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் முன் னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்குவிசாரணையின்போது ரவிகரன் மற்றும், பீற்றர் இழஞ்செழியன், தியோகுநகர் கிராமமக்கள் சார்பாக பரன்சோதி, கணேஸ்வரன், ருஜிக்கா, அனித்தா, மதுரா உள்ளிட்ட சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி யிருந்தனர்.

அத்தோடு கரைதுறைப்பற்று பிரதேசசபையின் சார்பாக சட்டத்தரணி கெங்காதரன் நீதிமன்றில் முன்னிலையாகி யிருந்தார்.

அதேபோல் அவலோன் தனியார் நிறுவனத்தின் சார்பாக சட்டத்தரணி தனஞ்சயன் நீதிமன்றில் முன்னிலையாகி யிருந்தார்.

இந்நிலையில் வழக்கினை ஆராய்ந்த நீதிபதி நீதிமன்றில் முன்னிலையானவர்களை ஐம்பதாயிரம் ரூபா பெறுமதி யான சொந்தப்பிணையிலே செல்ல அனுமதித்ததுடன், இந்த வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் 25.07.2024ஆம் திகதிக்கு திகதியிடப்படுவதாகவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# சிறீலங்கா ஜனாதிபதியின் மன்னார் விஜயம் குறித்து மன்னார் மீனவர்கள் கவலை!

யூன் 22, 2024

எதிர் வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். அப்போது மீனவர்களே இறுதி முடிவு எடுப்பார்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் இன்று வெள்ளிக்கிழமை (21) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விஷயமாக உள்ளது. கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியை சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை. வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அந்நியர்களுக்கு கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயை பெற்றுக் கொள்ளலாம் என்பதே காரணமாக உள்ளது.

நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப் படுத்தியதாக காணப்படுகின்றது.

கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. காற்றாலையாக இருந்தாலும் சரி கனிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.

நாங்கள் மீனவர்களின் பிரச்சனையை கதைப்பதற்காகவே மாத்திரம் ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம்.

எந்த அபிவிருத்திக்கும் நாங்கள் தடையானவர்கள் இல்லை. எமது வாழ்வாதார பிரச்சினையை கதைப்பதற்கு அவரை அணுகுகின்ற போது அவர் அதை தட்டிக் கழிக்கின்றார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது அவரை சந்திப்பதற்கான எமது கோரிக்கை தட்டி கழிக்கப்பட்டுள்ளது.



மீனவர்களை ஏன் அவர் கண்டுகொள்ளவில்லை. வடமாகாணமும் மன்னார் மாவட்டமும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது இவர் மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். மீனவர்களே இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

# எம் தேச ஆன்மாவில் நீக்கமற நிலைத்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனிமனித சரித்திரமாக மிளிர்கின்றார் மருந்துவர் ஜெயகுலராஜா!

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்

யூன் 24, 2024

மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜா தனது வாழ்நாளில் அதிகமான காலப்பகுதியை தேச விடுதலைப் பணிக்காக அர்ப்பணித்தவர். ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தின் ஆரம்பம் முதலே தன்னை தமிழினத்தின் ஒப்பற்ற உயரிய உன்னத விடுதலைப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்து தனது தியாகம் நிறைந்த பணியினாலும், போர்க்காலங்களில் மக்கள் துயர்துடைப்புப் பணிகளிலும், மருத்துவ சேவையிலும் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றியதன் மூலம் எம்மின மக்களின் உள்ளங்களிலும், எம் தேசத் தலைவரின் இதயத்திலும் நீங்காத இடம்பிடித்தன் மூலம் எம் தேச ஆன்மாவில் நீக்கமற நிலைத்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனிமனித சரித்திரமாக மிளிர்கின்றார். மருத்துவர் ஜெயகுலராஜாவின் மறைவு தமிழர் தேசத்தை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகளையும் புகழ் வணக்கத்தினையும் தெரிவித்து நிற்கின்றோம் எனப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இளம் மருத்துவராக ஜெயகுலராஜா பணிபுரிந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறையின் உச்சநிலையாகத் தமிழின ஒடுக்குமுறையின் அடிமைச்ச சாசனமான 1972 இல் அன்றைய பேரினவாத அரசினால் கொண்டு வரப்பட்ட முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரச உத்தியோத்தராகச் சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்துத் தனது இனமான கொள்கைக்கு முன்பாகத் தனது தொழிலை துச்சமென நினைத்துத் தூக்கி எறிந்த இனமான செம்மலாவார்.

தாயகத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும் உச்சம் பெற்றிருந்த நிலையில் தனது உயிரைக் கூட ஒரு பொருட்டாக எண்ணாது ஈழத்தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும் தனது மருத்துவப் பணியினையும், மனிதநேயப் பணியினையும் மிக அர்ப்பணிப்புடன் வழங்கினார்.

எடுத்துக்காட்டாக 1982 இல் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த போராளிகள் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியாது. ஏனென்றால், இராணுத்தினரால் இலகுவாக அடையாளம் காண முடியும். இவ்வாறான ஆபத்து நிறைந்த சூழலில் அவர்களைத் தான் பணியாற்றிய திருச்சபை மருத்துவமனையாகிய புத்தூர் புனித லூக்கா மருத்துமனையில் சிகிச்சையளித்து தனது சகோதரர் அருட்தந்தையாகப் பணியாற்றிய புன்னாலைக்கட்டுவன் நல்லாயன் ஆலயத்தில் பாதுகாத்தார். இதன் விளைவாக இவரும், அவரின் சகோதரர் வணபிதா. ஜெயதிலகராஜாவும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டனர்.

1983 இல் தமிழினத்துக்கு எதிராக நடந்த அரச பயங்கரவாதத்தின் கொலை வெறியாட்டமான வெலிக்கடைப் படுகொலையிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிப் பின்னர் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுப் பின்னர் மட்டு சிறையுடைப்பில் சிறை மீண்டு தமிழகம் சென்றார்.

தமிழகத்திலும் தனது மானிடநேய மருத்துவப் பணியிலும் மக்கள் துயர்துடைப்பு பணியினையும் தொடர்ந்தார். அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று ஈழஅகதிகள் மத்தியில் அர்ப்பணிப்பு மிக்க பணியாற்றினார். 1987 இல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளுடன் தாயகம் திரும்பி மீண்டும் தாயகத்தில் தனது உயரிய பணியினைத் தொடர்ந்தார்.

கடும்போரும், வன்முறைகளும் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தனது அர்ப்பணிப்பு மிக்க பணிகள் மத்தியிலும் பல மக்கள் அமைப்புக்களின் தலைமைப் பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பான தலைமைத்துவத்தினை வழங்கியவர். எடுத்துக்காட்டாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ். வை.எம்.சி.ஏ, யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் என்பவைகளின் தலைவராகச் செயற்பட்டுப் போர் நெருக்கடி மிக்க காலங்களில் சிறப்பான வழிநடத்தலையும், மக்கள் மத்தியில் நம்பிக்கையினையும் கொடுத்தவர். இதுமாத்திரமன்றி போர்க் களங்களில் மருத்துவப்பணியாற்றப் பல கள மருத்துவர்களைப் பயிற்சியளித்து உருவாக்கிப் போர்க்கள உயிர்காப்புப் பணிகளைச் செம்மையாக்கியவர். கடும் போர் நெருக்கடிகள் மத்தியிலும் எம்தேசக் கட்டுமானத்தின் மைல்கல்லாகத் தமிழீழ மருத்துவக் கல்லூரியின் உருவாக்கத்திலும், அதன் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்துச் செயற்பட்டவர்.

1995 இல் இராணுவ ஆக்கிரமிப்பினால் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து சென்று வன்னிப் பெருநிலப்பரப்பில் தனது பணியினைத் தொடர்ந்தார். அக் காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டச் சுகாதார வைத்திய பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றுப் பல்வேறு நெருக்கடிகள், சவால்கள் மத்தியில் கால்நடையாகவும் துவிச்சக்கர வண்டியிலும் பயணித்து தனது மனிதநேயப் பணியினைத் தொடர்ந்தவர்.

அதேவேளை வெண்புறா என்கின்ற செயற்கைக்கால் பொருத்தும் மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளராகப் பணியேற்றுப் போரின் போது கால்களை இழந்த அனேகருக்கு செயற்கைக்கால் பொருத்தக் காரணமாக அமைந்தார். போரினால் மிகக் கடுமையாக அழிவடைந்த முல்லைத்தீவு மண்ணில் சிறுவர்களை மகிழ்வூட்ட தனது சொந்த செலவில் மாவீரர் நினைவு பூங்



காவை (விலங்கியல்) நிறுவி சிறுவர்களுக்கான சிறந்த மகிழ்வூட்டும் பொழுதுபோக்கு களத்தை உருவாக்கியவர். இப்படியாக எம் இனத்திற்காக இவர் ஆற்றிய எண்ணிலடங்காப் பணிகளை எழுதிக் கொண்டே செல்லலாம்.

தனது அறிவை, ஆற்றலை பன்முக ஆளுமையினை தேச விடுதலைக்காக அர்ப்பணித்து அரும்பாடுபட்டுப் பணியாற்றிய ஓர் தியாகச் செம்மலை எம் தேசம் இன்று இழந்து நிற்கிறது. தேசவிடுதலை என்கின்ற உயர்ந்த இலட்சியத்துக்காக வாழ்ந்து அதற்காக உழைத்த உன்னதமான மனிதர்களை சாவுகள் ஒருபோதும் காவு கொள்வதில்லை. எம் தேசத்தின் ஆன்மாவிலும், தேசமக்களின் மனங்களிலும் நிரந்தரமாக வாழ்வார்கள்.

இன்று எமது தேசம் எதிர்கொண்டுள்ள நெருக்கடியான ஆக்கிரமிப்புச் சூழ்நிலையில் மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜா போல் ஆயிரம் ஆயிரம் தேசப் பற்றாளர்களை உருவாக்கினால் தான் எமது தேசத்தினையும், மக்களினையும் மீட்க முடியும் என்பதே நிதர்சனம். மருத்துவர் ஜெயகுலராஜாவின் மறைவிற்கு இறுதி வணக்கம் செலுத்தும் அதே தருணத்தில் அன்னாரின் சுதந்திரத் தேசக் கனவினை நனவாக்க நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம் எனவும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு குடையின் கீழ் வராத அனைவரும் சாக்கடை புழுக்கள்!

## வடமாகாண கடலோடிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கா. அண்ணாமலை

யூன் 23, 2024

தமிழ் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு குடையின் கீழ் வராத அனைவரும் சாக்கடை புழுக்கள் என வட மாகாண கடலோடிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கா.அண்ணா மலை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்(துயககயெ) வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நேற்று(23.06.2024) நடாத்திய ஊடக சந்திப் பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.அவர் மேலும் தெரிவித் ததாவது, தமிழ் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு குடை யின் கீழ் வராத அனைவரும் சாக்கடைப் புழுக்கள். அவர்கள் தூக்கி தூரத்தில் வீசப்பட வேண்டியவர்கள்.

இதனை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை நாங்கள் ஏற்கனவே செய்திருக்கவேண்டும். இதனை செய்யாமல் விட்டதனால்தான் இவர்கள் இன்று இவ்வாறு கதைக்க வேண்டியதற்கான காரணம்.

அண்மையில் சுமந்திரன் கதைத்த விடயம் நாங்கள் தான் கதைப்பம். இவரை போன்றவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். வெல்வதற்காக ஓடுபவனுக்கு தான் வரும் தோற்கிற பயம். நாங்கள் தமிழ் மக்கள் ஓடுவோம் என் பதை காட்டுவதற்காக வந்திருக்கிறோம். ஓடியே காட்டு வோம். நாங்கள் ஒரு குடையின்கீழ் ஒன்று சேர வேண்டும்.

ஒன்று சேராத அத்தனை கட்சிகளையும் நாங்கள் பார்த் துவைக்க வேண்டும், அத்தனை துருப்பிடித்த ஆணிகளை யும் பிடிங்கி அறியவேண்டும். இந்த துருப்பிடித்த ஆணிகள் இவ்வளவு காலமும் செய்த வேலை என்ன என்பதை பார்த்து வைத்து அத்தனை துருப்பிடித்த ஆணிகளையும் அடியோடு பிடுங்கி எறியவேண்டும்.

துருப்பிடித்த ஆணிகளை வைத்திருக்க வைத்திருக்க எங்களுக்குத்தான் விஷம், இதனால் அனைத்து தமிழ் மக்களும் ஒரு குடையின் கீழ் நின்று எவருக்கும் அஞ் சாமல் இந்த பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என் பதனை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது கதைக்க தெரிந்தவர்கள் என்று மேடைகளில் இருக்கிறார்கள், இன்று பாருங்கள், நாங்கள் தமிழ் பொது வேட்பாளர் என்றவுடன் தென்னிலங்கை இருந்து எத் தனை பேர் ஓடி வருகிறார்கள்.

இன்றுவரை எதுக்கும் வராதவர்கள் ஏன் இப்போது ஓடி வருகிறார்கள். ஏனெனில் பயம். இப்போது அவர்கள் எத் தனை பேரை வைத்து இந்த கண்களை மூட வைக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள்.

இனி யாரும் கண்களை மூடக் கூடாது. இனி யாரும் அயரக் கூடாது. இதனால் அனைவரும் அயராது உழைக் கும் வேண்டும். வேகம் கொண்டு நடக்கவேண்டும். நாங்கள் யார் என்பதை பொது மக்களாக அத்தனை




அரசியல் வாதிகளுக்கும் காட்ட வேண்டும் .

நாங்கள் தான் உங்களை தெரிவு செய்த நாங்கள் என் பதை தெரிவிக்க வேண்டும். சுமந்திரன் பொது அமைப் புக்கள் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக் காத அனைத்து கட்சிகளுக்கும் நான் இதனை கண்டன மாகவே பதிவு செய்கிறேன்.

இவ்வாறு சுமந்திரனுக்கு கதைப்பதற்க்கு தகுதி இல்லை. வேண்டும் ஏன்றால் அவர் நேரடி விவாதத்திற்க்கு வரட் டும். நான் படிக்காதவன்தான், நான்காம் வகுப்புத்தான் படித்தேன், வேண்டும் என்றால் நேருக்கு நேர் வா ருங்கள். நான் அவர் என்ன செய்தீர்கள் என்பதை கேட் கிறேன் என கூறியுள்ளார்.

# அரசாங்க அதிபரும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளரும் இனங்களுக்கிடையே குரோதங்களை வளர்க்க திட்டமிட்டு செயற்படுகின்றனர்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

யூன் 24, 2024

மாவட்ட அரசாங்க அதிபர் தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்க ளுக்கும் இடையே இனக்குரோதத்தை வளர்த்துவிடுகின்ற முக மாகத்தான் திட்டமிட்டு தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக் கின்றார். அவ்வாறே கல்முனை தெற்கு பிரதேச செயலாளரும் இரு இனங்களுக்குள் இனக்குரோதங்களை ஏற்படுத்தும் வித மாக சட்டத்துக்கு முரனாக இந்த அலுவலகங்களின் விவகாரத் தில் தலையிட்டு அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டுக் கொண் டிருக்கின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறையை கண்டித்து திங்கட்கிழமை (24) இடம் பெற்ற வீதிமறியல் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி செல்வராசா கஜேந்திரன் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகங்களின் அதிகாரங்களை பறித்து அதனுடைய செயற்பாடுகளை முடக்கி கல்முனையில் உள்ள தமிழர்களின் உரிமையை முற்றாகப் பறித்தெடுக்கும் நோக்கத்தோடும் இந்த நிலங்கள் அனைத்தையும் கபளீகரம் செய்யும் நோக்கத்தோடும் பல நீண்டகாலமாக திட்டமிட்ட செயற் பாடுகள் இடம் பெற்றுவருகின்றது.

இந்த பறிக்கப்பட்ட பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் மீளவும் வழங்கப்பட வேண்டும் எனவும் ஒரு தனியான கணக்காளர் நியமிக்கப்படவேண்டும் என தொடர்ச்சியாக கல்முனைவடக்கு மக்கள் கோரிவந்துள்ளனர். இந்த கோரிக்கை புறக்கணிக்கப் பட்ட நிலையிலே கடந்த 92 நாட்களாக இந்த கோரிக்கைகளுக் காக தொடர்ச்சியாக போராடிவருகின்றனர்.

ஆனால் 92 நாட்கள் ஆகியும் இனங்களுக்கிடையே ஒரு நல்லுறவை பேணவேண்டிய ஒரு அதிகாரியான இந்த மாவட் டத்தின் அரசாங்க அதிபர் இந்த இடத்துக்கு இன்றுவரையும வந்து கேட்கவில்லை ஆனால் இந்த போராட்டம் ஆரம்பித்த பின்னர் அரசாங்க அதிபர் கல்முனை தெற்கு பிரதேச செயலகத் துக்குப் பல தடைவ வந்திருக்கின்றார். இது தொடர்பாக நாடாளு மன்றத்தில் பல தடவைகள் நான் பேசியுள்ளேன்

அதேவேளை கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் வேண்டும் என்று இரு இனங்களுக்குள் இனக்குரோதங்களை ஏற்படுத்தும் விதமாக எதேச்சையாகச் சட்டத்துக்கு முரனாக இந்த அலு வலகங்களின் விவகாரத்தில் தலையிட்டு அதிகார துஸ் பிரயோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

இருந்தபோதும் இன்று 5 ஆயிரத்துக்கு மேல் மக்கள் ஒன்று திரண்டு இந்த கோரிக்கைகளுக்காக கிட்டத்தட்ட 6 மணித் தியாலயங்கள் இந்த பிரதான வீதிகள் மறிக்கப்பட்டு மிகவும் ஒரு பதற்றமான சூழல் உருவாகி இருந்தபோதும் கூட இனங்களுக் கிடையே முறுகல் வந்துவிடக்கூடாது என எந்த கவலையும் இல்லாமல் அரசாங்க அதிபர் வரவில்லை மக்கள் மிகவும் கொதித்து போயுள்ளனர்.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் தனது அலுவலகத்திற்கு வந்து சந்திக்குமாறு தெரிவித்ததையடுத்து இனமுறுகல் வரக் கூடாது என இந்த ஏற்பாட்டாளர்கள் மிகவும் பொறுப்புடன் செயற் பட்டு இந்த போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி அரசாங்க



அதிபர் காரியாலயத்துக்க செல்வதாக முடிவெடுத்துள்ளனர்.

இதில் பொது உள்ளாட்டு அமைச்சும் பாராமுகமாக இருப்பது என்பது கவலைக்கு உரிய விடையம் அமைச்சரவை கூட்டத் தில் பிரதமரை நான் சந்தித்து எழுத்து மூலம் கடிதம் ஒன்றை கொடுத்திருந்தேன் இந்த பிரச்சனையை தலையிட்டு உடனடி யாக தீர்த்துவைக்குமாறு ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மக்கள் தொடர்ந்து போராடுவதன் மூலம் மட்டும் தான் இந்த உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் வேறு எந்தவழியி லும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது என்பதை சுட்டிக் காட்டவதேடு மக்கள் முன்னெடுக்கும் இந்த போராட்டங்களுடன் நாங்கள் தொடர்ச்சியாகப் பக்கபலமாக நிற்போம் என்றார்.

# நாய் கடிக்கு உள்ளானால் உடனே வைத்திய சிகிச்சை பெற வேண்டும்!

யூன் 28, 2024

நாய் கடித்தால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற வேண்டும் எனவும் இது தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு தேவை எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிபணிப்பாளர் வைத்தியர் ஜமுனா னந்தா தெரிவித்தார்.

விசர் நாய் கடிக்கு உள்ளான கிளிநொச்சியை சேர்ந்த 4 வயதான சிறுமி நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அந்நிலையில் அது தொடர்பில் நேற்றைய தினம் வியாழக் கிழமை யாழ். போதனா வைத்தியசாலை பிரதிபணிப் பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

விசக் கடிக்கு தீண்டப்பட்டால், 5 நிமிடங்களுக்கு நீரினால் நன்றாக கழுவ வேண்டும். சவர்க்காரம் இட்டும் கழுவ லாம் பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

வைத்தியர்களிடம் நாய் அல்லது பூனை தொடர்பாக முழு விபரத்தை தெரிவிக்க வேண்டும். தடுப்பு மருந்து செலுத் தப்பட்ட நாய்கள் கடிக்கும் போது அதில் கிருமிகள்



இருக்காது.

ஆனால் தெரு நாய்கள் கடிக்கும் போது கொஞ்சம் அவ தானமாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மட்டக்களப்பில் போராட்டம்; நீதிகோரி திரண்ட உறவுகள்!

யூன் 24, 2024

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நீதிகோரி போராட்டமொன்று இன்று திங்கட்கிழமை காலை காந்தி பூங்கா முன்பாக இடம் பெற்றது.






மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், கொலைகாரனால் நீதி வழுங்க முடியுமா? பிள்ளைகளை தினம் தேடிக் கொண்டே நீதி இன்றியே இறந்து கொண்டிருக்கின்றோம், நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையே, போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையிலான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் இங்கு சங்க செயலாளரினால் வாசிக்கப்பட்டது.

சுமார் 100 க்கு மேற்பட்ட காணமல் ஆக்கப்பட்டவர்களின் கலந்து கொண்டதுடன் ஒரு மணி நேரம் இவ்வார்ப்பாட்டம் இடம் பெற்றது. ஒவ்வொரு மாதமும் 24ஆம் திகதி தமது உறவுகளுக்கு நீதிகோரிய போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.

# 92வது நாளாக மட்டு. கல்முனை பிரதேச மக்கள் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்!

யூன் 28, 2024

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கணடித்து இன்று திங்கட்கிழமை 92வது நாளாக பிரதேச மக்கள் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் போராட்ட வடிவத்தை மாற்றி அதாவது செயலகத்தை மூடி பாதைகளை மூடி ஆக்ரோஷமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் போக்குவரத்து முற்றாக செயலிழந்தது. பிரதேச செயலகம் இயங்கவில்லை. நகரில் ஒருவித பதட்டம் நிலவியது.

திட்டமிடப்பட்டு கல்முனை வடக்கு பிரதேய செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை எமது போராட்டம் தொடரும் என மக்கள் தெரிவித்தனர்.






இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் குவிந்துள்ளதுடன் கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியையும் முற்றுகையிட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில் தமிழ்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கவிந்திரன் கோடீஸ்வரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் பா.அரியநேத்திரன் மற்றும் காரைதீவு முன்னாள் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், வடக்கு பிரதேசசெயலக உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள் மற்றும் பொது சமூக அமைப்புகளும் கலந்து கொண்டனர்.

90 நாட்களாகியும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம அங்கு வருகை தராதமை பலத்த விசனத்தை ஏற்படுத்தியது.

இன்று களத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரடியாக தொடர்பு கொண்டு பேசினார். இருப்பினும் அவர் வருகை தரவில்லை.

மேலும் உரிய உயர் அதிகாரிகளும் அரசும் எமக்கு தீர்வை தர வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த இந்த அலுவலகம் 1988களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது.

தொடர்ந்து 1993 இது அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகின்றது. இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக பிரயோகித்து வருகின்றனர்.

இதனை எதிர்த்து பொது மக்கள் ஆர்ப்பாட்டம் போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை பறிப்பது நீதிமன்றை அவமானப்படுத்தும் செயலாகும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் கல்முனையில் தெரிவித்தார்.

இங்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இதுவரை அவர் இந்த பக்கமே தலை காட்டவில்லை. ஒரு கூட்டத்தையும் கூட்டவில்லை. இது எந்த நாட்டில் உள்ள சட்டம்? இதுவொரு பச்சைப் பாரபட்சம். நீதி இல்லையா? இவ்வாறு கேள்வி எழுப்பினார் அவர்.

சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவிக்கையில்,

அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் நிரந்தரமாக வாழும் தமிழ் மக்களை நிரந்தரமாக துரத்தி அடிப்பதற்கு இன்னொரு சமூகம் கையாளுகின்ற யுக்தி போன்று இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

முழுக்க முழுக்க தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் உள்ள நிர்வாக அலகான பிரதேச செயலகம் செயற்படக் கூடாது என்பதில் ஏனிந்த கொலைவெறி.

அந்த பிரதேசத்திற்கான அதிகாரங்களை பறிப்பதற்கு பலரும் முயற்சி செய்கின்றார்கள். குறிப்பாக கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவதும் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல். இங்குள்ள பிரதேச செயலாளர் சுமூகமாக சுதந்திரமாக தனது பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இங்கு 300 உத்தியோகத்தர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் அதன் அதிகாரங்களை பறிப்பதற்கு மறைமுகமாக அதிகார பயங்கரவாதத்தை திணிக்கிறார்கள். இலங்கை நீதியின் படி தர்மத்தின் படி சட்ட நியாயாதிபதி ஒரு அமைதியான தீர்வை இந்த மக்கள் வேண்டுகின்றார்கள். ஒரு பொறுப்புள்ள தமிழ்க் கட்சி என்ற அடிப்படையிலே நாங்கள் சமாதானமாக சட்டரீதியாக இப்பிரச்சினைக்கான தீர்வுக்கு நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். அது வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது, என்றர்.

# வலிந்து காணாமல் போனோருக்காக அலுவலகத்தில் பதிவு செய்யாவிடின் உதவி கிடைக்காது; உறவுகளை மிரட்டும் கிராம சேவையாளர்கள்!

யூன் 27, 2024

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோருக்கான (ஓ.எம்.பி) அலுவலகத்தின் நஷ்ட ஈட்டினையும் மரண சான்றிதழினையும் பெற்றுக்கொள்வதற்காக கிராம சேவகர்கள் கிராம அமைப்புக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை மிரட்டுகின்ற சம்பவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஒன்று நேற்று புதன் கிழமை முல்லைத்தீவு நகரப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட போது கருத்து தெரிவிக்கையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆண்டுகளுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டுவரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தில் நீதிகோரிய கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி, சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். ஐ.நா சபையில் எங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது இந்த நிலையில் நீதி கோரி போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர் இறந்து கொண்டிருக்கின்றார்கள். இலங்கையில் ஓ.எம்.பி அலுவலகத்தினால் நஷ்டஈடும் கொடுத்து மரண சான்றிதழும் கொடுக்கும் ஏற்பாடுகள் மக்களை விரட்டி விரட்டி செய்கின்றார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை தொடர்ச்சியாக கிராம உத்தியோகத்தர் ஊடாகவும் கிராம அமைப்புக்கள் ஊடாகவும் அழுத்தங்கள் கொடுத்து மிரட்டுகின்றார்கள் இந்த பதிவுகள் செய்யாவிடின் எந்த ஒரு அரச உதவிகளும் தரமுடியாது என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மிரட்டல் விடுக்கப்படுகின்றது.



இந்த மிரட்டல்களை தாண்டி எமக்கான நீதி கிடைக்க வேண்டும். குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டுத்தான் தான் நாம் போராடி வருகின்றோம் எமக்கான நீதியினை சர்வதேசம் தான் தரவேண்டும் என்றார்.

# மூதூரில் மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டம் நடாத்தியவர்கள் மீதான தாக்குதலுக்குத் தமிழத்தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்!

யூன் 28, 2024

மூதூரில் மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டம் நடாத்திய தமிழ்மக்கள் மீது இரவோடிரவாகத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.




திருகோணமலை மூதூர்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் மதுபானசாலை திறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 15 பேரை மூதூர்ப் பொலிசார் கைது செய்தமைக்கு எதிராக அவர் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொடர்ச்சியாக மூதூர்ப் பொலிசார் இரவு வேளைகளில் திட்டமிட்டு இந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இரவுவேளை என்பதால் ஆதாரமின்றி முறைகேடுகளில் ஈடுபடுவதும், அச்சுறுத்துவதும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட மனித உரிமை மீறலாகும்.

தமிழ்மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மதுபானசாலை மூடப்பட வேண்டும் எனவும் அவ் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் நினைவாக கனடிய நாடாளுமன்றத்தில் அக வணக்கம்!

யூன் 19, 2024

கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் நினைவாக கனடிய நாடாளுமன்றத்தில் மௌன மவுன அஞ்சலி செலுத்தப்பட்டதனை இந்தியா கண்டித்துள்ளது.



கடந்த ஆண்டு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் குரத்வாரா அருகே மர்ம நபர்களால் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். சம்பவம் தொடர்பாக இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சுமத்தியதை அடுத்து, இந்தியா - கனடா நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் கனடா நாடாளுமன்றத்தில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது இதன்போது கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதற்கு பதிலடியாக 1985-ம் ஆண்டில் ஏர் இந்தியா கனிஷ்கா விமானத்தில் காலிஸ்தான் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் உயிரிழந்த 329 அப்பாவிகள் நினைவாக மௌன அஞ்சலி கூட்டம் நடத்தப்போவதாக கனடாவில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்து உள்ளது.

இது குறித்து வான்கூவரில் உள்ள இந்திய தூதரகம் தனது 'எக்ஸ்' பக்கத்தில் ,

தீவிரவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. உலகளாவிய அச்சுறுத்தலை எதிர் கொள்ள அனைத்து நாடுகளுடன் நெருக்க மாக இந்தியா பணியாற்றி வருகிறது.



கடந்த 1985-ம் ஆண்டில் ஏர் இந்தியா கனிஷ்கா விமானத்தில் தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்ததன் 39-வது ஆண்டு நினைவு நாள் ஜூன் 23-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 86 குழந்தைகள் உட்பட 329 அப்பாவி பொது மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். சிவில் விமான வரலாற்றில் கொடூரமான தீவிரவாத தாக்குதலாக இது கருதப்படுகிறது என குறிப்பிட்டுள்ளது.

# ஈரானின் இஸ்லாமிய புரச்சிகர காவலர் படையை தீவிரவாத அமைப்பாக கனடா அறிவிப்பு!

யூன் 19. 2024

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் (IRGC) இராணுவ படையை தீவிரவாத அமைப்பாக கனடா அறிவித்துள்ளது.

பல ஆண்டுகளாக எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஈரான் நாட்டை விட்டு வெளியேறியோரிடமிருந்து வந்த அழுத்தங்களுக்கு பிறகு, கனடா இறுதியாக IRGC-யை ஒரு தீவிரவாத அமைப்பாக பட்டியலிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை உலகளாவிய தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கனடாவின் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

மேலும், இதன் காரணமாக, ஆயிரக்கணக்கான ஈரானிய அதிகாரிகள், உயர் ஐ.ஆர்.ஜி.சி. உறுப்பினர்கள் உட்பட பலர் கனடாவுக்குள் நுழைய தடை செய்யப்படுவார்கள்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) என்பது ஈரானில் ஒரு சக்திவாய்ந்த இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பாகும்.

இது உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியுடன் நெருக்கமான உறவை கொண்டுள்ளது மற்றும் சுமார் 190,000 க்கும் மேற்பட்ட செயல்படக்கூடிய பணியாளர்களை கொண்டுள்ளது.

இவர்கள் ஈரானின் மூலோபாய ஆயுத திட்டத்தை கண்காணிக்கும் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படையை கொண்டுள்ளனர்.

ஐ.ஆர்.ஜி.சி. மத்திய கிழக்கில் தனது ரகசிய நடவடிக்கைப் பிரிவான குத்ஸ் படையின் (Quds Force) மூலம் செல்வாக்கு செலுத்துகிறது. எனவே குத்ஸ் படை ஏற்கனவே கனடாவால் தீவிரவாதக் குழுவாக பட்டியலிடப்பட்டுள்ளது.





# கனடாவிலிருந்து நாய்களுடன் அமெரிக்கா செல்வோரின் கவனத்திற்கு!

மே 20, 2024

அமெரிக்கா செல்லும் கனடியர்கள் நாய்களை எடுத்துச் செல்வது தொடர்பில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க எல்லை பகுதியை கடக்கும் கனடியர்களுக்கு இந்த புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் இந்த நடைமுறையை அறிமுகம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தரை வழியாக அல்லது வான் வழியாக நாய்களை அழைத்துச் செல்லும் கனடியர்கள் சில சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு இருக்க வேண்டும் எனவும் நாய்களில் மைக்ரோசிப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாய்களின் உரிமையாளர்கள் அமெரிக்காவிற்கு பயணங்களை மேற்கொள்ளும் போது ஒரு புதிய பதிவு ஆவணம் ஒன்றில் பூர்த்தி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய நடைமுறைகளை பின்பற்ற தவறும் கனடியர்கள் நாய்களுடன் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய நடைமுறையின் கீழ் நாய்களை அழைத்துச் செல்லும் கனடியர்கள் நூற்றுக்கணக்கான டாலர்களை செலவிட நேரும் எனவும் ஆவணங்களை பூர்த்தி செய்ய நேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களையும் விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படுவதாக கனடிய மிருக வைத்திய ஒன்றியம் தெரிவித்துள்ளது.






## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ரொரான்ரோவின் சென் போல்ஸ் இடைத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி!

யூன் 25, 2024

ரொரான்ரோவின் சென் போல்ஸ் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியீட்டியுள்ளது.

லிபரல் கட்சியின் வலுவான தொகுதியாக கருதப்பட்டு வந்த இந்த தொகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட டொன் ஸ்டுவர்ட் இந்த தேர்தலில் வெற்றி ஈட்டியுள்ளார்.

ரொரான்ரோவின் சென்ட் பால்ஸ் தொகுதியில் இவ்வாறு ஸ்டுவர்ட் வெற்றியை பதிவு செய்துள்ளார்.

கடுமையான போட்டிக்கு மத்தியில் கான்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் ஸ்டுவர்ட் 590 மேலதிக வாக்குகளின் வெற்றியை பதிவு செய்துள்ளார்.

நீண்ட காலமாக இந்த தொகுதி லிபரல் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

லிபரல் கட்சியின் சார்பில் லெஸ்லி சர்ச் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் லிபரல் கட்சி முன்னிலை வகித்த போதிலும் இறுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த தேர்தல் வெற்றி ஆளும் லிபரல் கட்சிக்கு பெரும் பின்னடைவாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனெனில் தொகுதியின் தேர்தல் வெற்றியானது ஒட்டு




மொத்த மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் என அண்மையில் கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். வண்டுமென அமைச்சர் தெரிவித் துள்ளார்.

# கனடாவில் பண வீக்கம் தொடப்பாக வெளியான தகவல்!

யூன் 25, 2024

கனடாவின் பணவீக்க நிலைமைகள் சாதகமான நகர்வினை நோக்கி பயணிப்பதாக மத்திய வங்கியின் ஆணையாளர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

கனடிய மத்திய வங்கி நாட்டின் பணவீக்க வீதத்தை இரண்டு வீதத்திற்கும் குறைந்த அளவில் பேணும் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் தமது இலக்கினை எட்டக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகள் காலப்பகுதியில் முதல் தடவையாக கனடாவில் வட்டி வீதம் குறைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடிய நிதிக் கொள்கையில் ஏற்பட்ட பாரிய நிதி மாற்றமாக கருதப்படுகிறது.

எவ்வாறு எனினும் வேலையற்றோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.




# ஒன்ராரியோவில் வாகன திருட்டுச் சம்பவங்களை மேற்கொண்ட 124 பேர் கைது!

யூன் 26, 2024

கனடாவில் வாகன திருட்டுச் சம்பவங்களை மேற்கொண்ட 124 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஒன்ராரியோ மாகாணத்தில் இவ்வாறு வாகன கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட சுமார் 177 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த வாகனங்களின் பெறுமதி சுமார் பத்து மில்லியன் டாலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஒன்ராரியோ கார் கொள்ளை தடுப்பு விசேட படையணி மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் சுமார் 124 பேர் கைது செய்யப்பட்டதாக அறிவித்துள்ளது.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 750 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

நீண்ட விசாரணைகளுக்கு பின்னர் புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கனடாவில் இடம் பெற்று வரும் வாகன கொள்ளை சம்பவங்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பல்வேறு வாகன கொள்ளை சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக




தெரிவிக்கப்படுகிறது.

# லெபனானில் வாழ்ந்து வரும் கனடியர்களுக்கு கனடிய அரசாங்கம் விடுத்துள்ள எச்சரிக்கை!

யூன் 26, 202

லெபனானில் வாழ்ந்து வரும் கனடியர்களுக்கு அரசாங்கம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலெனி ஜோலி இந்த அவசர எச்சரிக்கை அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

லெபனானில் வாழ்ந்து வரும் கனடியர்கள் அந்த நாட்டை விட்டு அவசரமாக வெளியேற வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

லெபனானின் தற்போது நிலவிவரும் பதற்ற நிலைமைகளின் அடிப்படையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இசுரவேல் படையினருக்கும் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடை யிலான மோதல்கள் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டி உள்ளார்.

எனவே கனடியர்கள், லெபனானுக்கான பயணங்களை மேற்கொள்வது உசிதமானதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் லெபனானில் தங்கியுள்ள கனடியர்கள் வர்த்தக விமானங்களின் ஊடாக அங்கிருந்து வெளியேறுவது பொருத்தமானது என அறிவித்துள்ளார்.

லெபனானில் ஆயுதப் போராட்டம் வெடித்தால் அங்கு வாழ்ந்து வரும் கனடியர்கள் வெளியேறுவதற்கு சிக்கல்கள் ஏற்படக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே லெபனானை விட்டு வெளியேறுமாறு கனடிய பிரஜைகளுக்கு அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

லெபனானுக்கான பயணங்களை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் பயண எச்சரிக்கைகள் தொடர்பில் கூடுதல் கவனம்



செலுத்துமாறு அவர் மேலும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# கனடாவில் தொடர்ச்சியாக மளிகை பொருட்களின் விலைகள் அதிகரிப்பு!

யூன் 27, 2024

கனடாவில் தொடர்ச்சியாக மளிகை பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் மளிகை பொருட்களின் விலைகள் 1.5 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது கடந்த மே மாதத்தை விடவும் சிறிதளவு அதிகரிப்பு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மளிகை பொருட்களின் விலைகள் 1.4 வீதமாக காணப்பட்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் மே மாதம் மளிகைப்பொருள் விலை உயர்வு அதிகளவில் பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரையில் உணவு பொருட்களின் விலைகள் 22.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்படி மக்களின் செலவுகளில் பிரதானமான செலவு அதிகரிப்பாக உணவுப் பொருள் விலை அதிகரிப்பு காணப்படுகின்றது.

மரக்கறி வகைகள், இறைச்சி பழ வகைகள் அல்ஹகோல் அல்லாத பானங்கள் என்பவற்றின் விலைகள் அதிகளவு உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



உணவுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக உணவகங்களில் வழங்கப்படும் உணவின் அளவு குறைக்கப்படுவதாக மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

# ஒன்ராறியோ அரசு வாகன உரிமத் தகடுகளை தானாகவே புதுப்பிக்கும் முறையை அறிமுகப்படுத்துகிறது!

யூன் 27, 2024

"ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள வாகன ஓட்டுநர்களுக்கு குறைந்த செலவுடனான மேம்படுத்தப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டில், பயணிகள் வாகனங்களுக்கான உரிமத் தகடுகளுக்கான "ஸ்டிக்கர்" கட்டணத்தை நாம் நீக்கி உரிமையாளர்கள் வாகனம் ஒன்றுக்கு ஆண்டுக்கு 120 டொலர்களை சேமிக்க உதவியிருந்தோம்.

தானாகவே வாகன உரிமத் தகடுகளைப் புதுப்பிக்கும் முறையை இப்போது அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலம், வட அமெரிக்காவிலேயே நாம் முன்னணி வகிப்பதுடன், ஆண்டொன்றுக்கு வாகன உரிமையாளர்களின் 900 மணித்தியால நேர விரயமும் தவிர்க்கப்படும். ஜூலை 1 முதல், முறையான வாகனக் காப்பீடு உள்ளதுடன், அபராதத் தொகை அல்லது நெடுஞ்சாலைக் கட்டணங்கள் நிலுவையில் இல்லாத பட்சத்தில், வாகன உரிமத்தகடு காலாவதியாவதற்கு 90 நாட்களுக்கு முன்னதாக அவை தாமாகவே புதுப்பிக்கப்படும். இப்புதுப்பித்தல் முறையில் சிக்கல்களை எதிர்நோக்குவோர், "சேவிஸ் ஒன்ராறியோ"வின் சேவையை அணுகலாம்.




# ரொரான்ரோ சென் போல்ஸ் இடைத் தேர்தல் தோல்வி குறித்து கனடிய பிரதமரின் கருத்து!

யூன் 28, 202

வாக்காளர்களின் கரிசனையை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளதாக கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.



கனடாவில் ரொரான்ரோ சென் போல்ஸ் தேர்தல் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி தோல்வியை தழுவியது.

கான்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் இந்த தேர்தலில் 580 மேலதிக வாக்குகளினால் வெற்றி ஈட்டினார்.

இந்த தேர்தல் தோல்வி ஆளும் லிபரல் கட்சிக்கும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விற்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இந்த நிலையில் இடைத்தேர்தலில் கட்சி அடைந்த தோல்வி குறித்து பிரதமர் மனம் திறந்து உள்ளார். வாக்காளர்களின் கரிசனைகளையும் அவர்கள் அதிருப்தியையும் புரிந்து கொள்வதாக பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இது ஒரு கடினமான தருணம் எனவும் ஒட்டுமொத்த லிபரல் கட்சி உறுப்பினர்களும் கடுமையாக உழைக்க வேண்டிய தருணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடியர்கள் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய மெய்யான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மக்களின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் என அவர்



FEDERAL ELECTION RESULTS IN TORONTO-ST. PAUL'S

| | 2024 By-Election | 2021 | 2019 | 2015 | 2011 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| Liberal | 41% | 49% | 54% | 55% | 41% | 51% |
| Conservative | 42% | 25% | 22% | 27% | 32% | 27% |
| NDP | 11% | 17% | 16% | 15% | 22% | 13% |
| Green | 3% | 6% | 7% | 3% | 5% | 9% |
| Other parties | 3% | 3% | 2% | - | 1% | 1% |
| Winner & Margin | CPC 1% | Liberal 24% | Liberal 32% | Liberal 28% | Liberal 9% | Liberal 24% |

தெரிவித்துள்ளார்.

எவ்வாறு எனினும் இந்த தேர்தல் தோல்வி காரணமாக பிரதமர் பதவி விலகுவார் என சில ஊகங்கள் வெளியிடப்பட்ட போதிலும் அவ்வாறான எந்த ஒரு முனைப்பு பற்றி பிரதமர் கருத்து வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தோல்வி குறித்து அதிருப்தி அடைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கொவிட் – 19 காலத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட நலன்புரித் திட்டக் கொடுப்பனவுகளை மீள வசூலிக்கும் முயற்சிகளில் கனடிய வருமான வரித்துறை!

யூன் 28, 2024

கொவிட் - 19 காலத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட நலன்புரித் திட்டக் கொடுப்பனவுகளை மீள வசூலிக்கும் முயற்சிகளில் கனடிய வருமான வரித்துறை ஈடுபட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக பாதிப்புகளை எதிர் நோக்கியவர்களுக்கு கனடிய அரசாங்கம் கொடுப்பனவு தொகைகளை வழங்கியிருந்தது.

சுமார் 9 மில்லியன் டாலர்கள் வரையில், இவ்வாறு தனிப்பட்ட நபர்களுக்கு நலன்புரி கொடுப்பனவாக கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கூடுதல் தொகை பணம் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து அறவீடு செய்யும் நடவடிக்கைகள் கடுமையாக்கப்படும் என கனடிய வருமான வரித்துறை அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இந்த நடவடிக்கை கடுமையாக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு கூடுதலாக பெற்றுக் கொண்டவர்களின் சம்பளங்கள் அல்லது வங்கிக் கணக்குகள் ஊடாக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகைகள் அறவீடு செய்யப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூடுதலாக நிதி செலுத்தப்பட்டவர்களில், மீள அளிப்பதற்கு ஒத்துழைக்காதவர்கள் அல்லது பதிலளிக்காதவர்களிடம் மட்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கனடிய வருமான வரித்துறை அறிவித்துள்ளது.

இவ்வாறு கூடுதலாக பெற்றுக் கொண்டவர்கள் ஏதேனும் ஒரு வழிமுறையில் கடனை மீள செலுத்துவதற்கு ஊக்குவிப்பதே தமது இலக்கு என மேலும் தெரிவித்துள்ளது.



# தமிழக செய்திகள்



## தமிழ் நாட்டு கள்ளக்குறிச்சியில் மது சாராயம் அருந்தியோரில் 40 பேர் பலி!

யூன் 20, 2024

தமிழ்நாட்டில் மது சாராயம் அருந்தியோரில் 40 பேர் இறந்தனர். வாந்தி, வயிற்றுவலி மற்றும் வயிற்றுப்போக்கால் 60க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுப் புதன்கிழமை சென்னையிலிருந்து 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கருணாபுரத்தில் இச்சம்பவம் நடந்தது.

நேற்று காலையில் இருந்தே ஒவ்வொருவராக மருத்துவமனைக்கு வரத் தொடங்கினர். நேரம் செல்லச்செல்ல இந்த எண்ணிக்கை அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்கள் புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம் ஆகிய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கு மேலும் 100க்கு மேற்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்தனர். இதனால் பெரும் பரபரப்பு நிலவியது.

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 4 பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

கைது செய்தவர்களிடமிருந்து 200 லீட்டர் மெத்தனால் கலந்த மதுபானத்தை கைப்பற்றினர்.

இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். தடுக்க தவறிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமூகத்தை சீரழிக்கும் இதுபோன்ற குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்றும் தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.



## தமிழ்நாடு அரசே! பூரண மதுவிலக்கினை உடனே அமுல்படுத்து!

### தமிழ் பேரரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வ. கௌதமன்

யூன் 20, 2024

“எத்தனால்” தான் காரணமென்று இன்னும் எத்தனை நாள் தான் சொல்வீர்கள்? தமிழ்நாடு அரசே! பூரண மதுவிலக்கினை உடனே அமுல் படுத்து என்று தமிழ் பேரரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வ.கௌதமன் அவர்கள் இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் 13 உயிர்களும் செங்கல்பட்டு மாவட்டம் பெருக்கரணை, பேரம்பாக்கம் கிராமங்களில் 8 உயிர்களும் மெத்தனால் கலந்த கள்ள சாராயம் அருந்தி உயிர்விட்ட ஓராண்டிற்குள் தற்போது கள்ளக்குறிச்சியில் 40க்கும் மேற்பட்ட உயிர்கள் செத்து, 100க்கும் மேற்பட்டவர்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிற செய்தி இதயத்தில் ஈரம் உள்ளவர்களை நடுநடுங்கச் செய்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து கள்ளச்சாராயம் விற்கின்ற கயவர்களுக்கு துணை நிற்கின்ற ஆட்சியாளர்களும், அரசு அதிகாரிகளும் இம்மாபெரும் உயிரிழப்புகளுக்குப் பொறுப்பேற்று உடனடியாக பதவி விலக வேண்டும் இல்லையேல் ஓரிரு தினங்களுக்குள் பூரண மதுவிலக்கினை பிரகடனப்படுத்த வேண்டுமென தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு அரசு என்பது அந்த நிலத்தில் வாழ்கின்ற குடிமக்களை காப்பதற்குத்தானே தவிர குடிக்க வைத்து கூட்டம் கூட்டமாக கொல்வதற்கு அல்ல என்பதை இனியாவது தமிழ்நாடு அரசு புரிந்து கொள்ள வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தை சேர்ந்த சுரேஷ் என்பவரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட 200 நபர்கள் கள்ளச்சாராயம் குடித்ததாக சொல்லப்படுகிறது. கள்ளக்குறிச்சி அருகில் உள்ள கல்வராயன் மலையில் நீண்ட நெடுங்காலமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவது, அரசுக்கும் காவல்துறைக்கும் அவ்வப்போது ஆட்சி செய்கின்ற அரசியல்வாதிகளுக்கும் தெரிந்தே திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கின்ற இந்த வியாபாரத்தை இனியும் மூடி மறைக்க முடியாது. எத்தனையோ முறை பொதுமக்கள் தடுத்தும், அதிகார வர்க்கத்திடம் முறையிட்டும் கூட கண்டு கொள்ளாமல் போனதால்தான் இன்று கள்ளக்குறிச்சி சுடுகாடாக மாறி ஒப்பாரி வைத்து ஓலமிட்டுக் கொண்டிருக்கிறது. தமிழினத்தின் சங்க கால போர்களில் சண்டையிட்டு செத்ததை விட நிகழ்கால அரசுகள் நடத்துகின்ற ஃபாரிலும், பீரிலும் செத்துக் கொண்டிருக்கின்றவர்களின் எண்ணிக்கைதான் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அரசு சாராயக்கடையை மூடினால் கள்ளச்சாராயம் தலைவிரித்தாடும் என்கிறீர்கள். அரசு நிறுவனம் காய்ச்சி விற்கின்ற சாராயமே ஆறாக ஓடிக்கொண்டிருக்கும் போது, அரசின் தயவால் அயோக்கியர்கள் காய்ச்சி விற்கின்ற கள்ளச்சாராயம் கடலளவு வியாபாரம் நடப்பது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு பக்கம் கள்ளச்சாராயம் குடித்து இப்படி அவ்வப்போது செத்து எண்ணற்ற பெண்கள் கத்தி கதறி தாலியறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கம் நல்ல சாராயம் என்று கூறி டாஸ்மாக்கில் விற்கின்ற சாராயத்தைக் குடித்து இலட்சக்கணக்கான பெண்கள் நீண்ட நெடுங்காலமாக தாலியறுத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். இந்த நிலை எப்பொழுது மாறும்?

கழக ஆட்சி அமைந்தால் முதல் கையெழுத்தே மதுவிலக்காகத்தான் இருக்கும் என்று கொடுத்த வாக்குறுதியினை இனி எந்த கல்வெட்டில் எழுதி வைப்பது? ஒரு குடும்பத் தலைவன் இறந்தால் ஒரு தலைமுறையே அழிந்துவிடும். கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஏறத்தாழ நான்கு தமிழ் தலைமுறைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு விட்டது. இன்று கண் துடைப்புக்காக கலெக்டர், காவல்துறை அதிகாரிகள் இடம் மாற்றப்படுகிறார்கள். இதுதான் தண்டனையா? இதனால் நிரந்தர தீர்வு வந்துவிடுமா? இந்த இலட்சணத்தில் மதுவிலக்கிற்கென்று ஒரு அமைச்சர் வேறு? இத்தனை பலி வாங்கியதில் மாவட்ட நிர்வாகத்திற்கு மட்டும்தான் பங்கு உண்டு என்றால் மாநிலத்தை ஆளும் நிர்வாகத்திற்கு பங்கு இல்லையா என்ன? அரசின் கவனக் குறைவால் மக்கள் செத்தால் மக்களின் வரிப்பணத்தை எடுத்து நிவாரணம் கொடுப்பது ஒரு அரசுக்கு அழகா? மாறாக இதற்கு தார்மீக பொறுப்பான அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள்



சம்பளத்திலிருந்து ஏன் இனி எடுத்துத் தரக்கூடாது?

இதற்கெல்லாம் தண்டனையாக நீங்கள் பதவி கூட விலக வேண்டாம். அதற்குப்பதிலாக தமிழ்நாட்டு மக்களிடம் ஓட்டு கேட்டு வரும் போது முதல் கையெழுத்து பூரண மதுவிலக்கிற்குப் போடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தீர்களே, அதை மட்டுமாவது உடனே நிறைவேற்றுங்கள். உங்கள் தலைமுறை நன்றாக இருக்கும். விலை மதிக்க முடியாத 50க்கும் மேற்பட்ட உயிர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக தமிழ்நாடு அரசு உடனடியாக பூரண மதுவிலக்கு கொள்கையை பிரகடனப்படுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்வது மனித இயல்பு அதற்கு பரிகாரம் உண்டு. ஆனால் பாவத்திற்கு என்றுமே விமோசனம் கூட இல்லை.

வ.கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி
“சோழன் குடில்”
சென்னை
20 06 2024

## கள்ளச்சாராயம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்!

### உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

யூன் 23, 2024

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்ததின் விளைவாக பெண்கள் உள்பட 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதும், மேலும் பலர் மருத்துவமனைகளில் அபாயகரமான நிலைகளில் உள்ளதும் மக்கள் அனைவரின் உள்ளங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன.

துயரம் தோய்ந்த இந்தச் சாவுகளுக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் கண்டறியப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுடன் இதற்குப் பின்னணியிலிருந்து செயல்பட்ட அனைவரின் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, தமிழகம் முழுவதிலும் கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட வேண்டும்.

கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிக்கும் அதே வேளையில் அரசு நடத்தும் மதுக்கடைகளையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு பூரண மதுவிலக்கை அமல்படுத்த தமிழக அரசு முன் வர வேண்டும்.

இந்தத் துயர நிகழ்ச்சியில் இறந்து போனவர்களின் குடும்பங் களுக்குத் தமிழர் தேசிய முன்னணியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்



# சாதிய உயர்வுகளை அகற்றுவதற்கு நீதிபதி சந்துரு பரிந்துரைகளை செயல்படுத்துக!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

யூன் 20, 2024

தமிழ்நாடு முதலமைச்சருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்,

மாணவர்களிடம் பரவி வரும் சாதிய வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான அறிவுரை வழங்க அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி கே. சந்துரு குழு மிகச்சிறந்த பரிந்துரைகளை அளித்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன். அப்பரிந்துரைகள் அனைத்தையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்படி முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

நீதிபதி கே. சந்துரு குழு அளித்துள்ள பரிந்துரைகளில் முதன்மையானவை வருமாறு:

1. அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்களில் சாதி அடையாளத்தை நீக்குதல்.

2. பெயர் அகரவரிசைப்படி மாணவர்களை வகுப்பறைகளில் உட்கார வைத்தல். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் மட்டும் விதிவிலக்கு அளித்தல்.

3. பெயர்ப் பதிவேடுகளில் மாணவர்களின் சாதி குறித்த எத்தகைய குறிப்பும் இருக்கக் கூடாது.

4. பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், நிர்வாகத்தில் பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கான ஒழுக்க விதிமுறைகளை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

5. ஒவ்வொரு பள்ளியிலும் அல்லது கல்லூரியிலும் சமூக நீதி மற்றும் மாணவர் படை உருவாக்கவேண்டும். தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இது இயங்க வேண்டும். அனைத்துச் சாதிகளைச் சேர்ந்த மாணவர்களும் இதில் சேர்க்கப்பட்டு சாதி, சமூகத் தீமைகளை அறவே அகற்றுவதற்கான பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

6. கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அவர்கள் சார்ந்துள்ள சாதியினர் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில் பணிகளுக்கு நியமிக்கப்படக் கூடாது.

7. கல்வி நிலையத்தின் எல்லைக்குள் அலைப் பேசிகளை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு முற்றிலு மாகத் தடை விதிக்கவேண்டும்.

8. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் நல்லொழுக்க வகுப்புகள் வாரத்திற்கு ஒருமுறை நடத்தப்படவேண்டும்.

9. 500க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில் பள்ளி நல அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

10. சாதித் தீமைகள் அதிகமாக இருக்கும் பகுதிகள் எவை என்பதை ஆராய்ந்து முடிவு செய்வதோடு, அங்கு சாதி மோதல்கள் ஏற்படுவதை முன்னதாகவே கண்டறிய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

11. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் சாதித் தீமைப் பற்றிய பாடம் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

12. சாதிய உணர்வுடன் இயங்கும் ஆசிரியர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் விதிமுறைகள் மாற்றப்படவேண்டும்.



13. சாதி அடையாளத்தைக் குறிக்கும் வகையில் மாணவர்களின் கரங்களில் வண்ணக் கயிறு கட்டுதல், மோதிரங்கள் அணிதல், நெற்றியில் குறியீடுகளை இடுவது, சாதிக் குறிக்கும் வகையில் வண்ணம் பூசப்பட்ட சைக்கிள்களில் வருதல் போன்ற பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு கலக்கும் சாதி உணர்வுகளை வெளிப்படுத்துதல் அறவே தடை செய்யவேண்டும்.

மேலும் பல சிறப்பான பரிந்துரைகளை நீதிபதி சந்துரு வழங்கியதன் மூலம் ஆயிரமாயிரம் ஆண்டு காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழித்துவரும் சாதிப் பாகுபாடுகளை அறவே அகற்றுவதற்கும், சாதியற்றச் சமுதாயம் உருவாவதற்கும் அவர் வழிகாட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

ஆண்டாண்டு காலமாக சாதியின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தியும், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியும் வருபவர்களைத் தவிர, மற்ற அனைவரும் நீதிபதி சந்துரு அவர்களின் பரிந்துரைகளை ஏற்று மனமாறப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. தாமதமின்றி இப்பரிந்துரைகளை உடனடியாகச் செயல்படுத்தத் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

# கீழடி 10-ம் கட்ட அகழாய்வில் பல வண்ண கண்ணாடி மணிகள் கண்டெடுப்பு!

யூன் 24, 2024

கீழடியில் பல வண்ணங்களில் கண்ணாடி மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்ற அகழாய்வுகள் மூலம் 2,600 ஆண்டுகளுக்கு முந்தைய நகர நாகரீகம் இருந்துள்ளது கண்டறியப்பட்டது. ஏற்கெனவே 9 கட்ட அகழாய்வு பணிகள் மூலம் பல ஆயிரம் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில், 10-ம் கட்ட அகழாய்வு பணியை ஜுன் 18-ம் தேதி கீழடி, கொந்தகை ஆகிய 2 இடங்களில் முதல்வர் மு.க. ஸ்டாலின் சென்னையில் இருந்தபடியே காணொலி மூலம் தொடங்கி வைத்தார். தொடர்ந்து கீழடியில் 2 குழிகள் தோண்டப்பட்டு வருகின்றன. முதல்கட்டமாக சில அடி ஆழத்திலேயே பல வண்ணங்களில் கண்ணாடி மணிகள் கண்டெடுக்கப்பட்டன. இதுவரை 27 மணிகள் கிடைத்துள்ளதாக தொல்லியல் துறையினர் தெரிவித்தனர். விரைவில் கொந்தகையில் அகழாய்வுப் பணி தொடங்கப்பட உள்ளது.



# இந்திய கடல் எல்லையை தாண்டக்கூடாது: மீனவர்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தல்!

யூன் 27, 2024

இரண்டு மாத மீன்பிடித் தடைக்காலம் நிறைவடைந்து, கடந்த யூன் 15-ம் தேதி முதல் விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் சென்றுவருகின்றனர். கடந்த 10 நாட்களில்மட்டும் புதுக்கோட்டை, இராமேசுவரம், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 5 விசைப்படகுகளை கைப்பற்றிய இலங்கை கடற்படையினர், 36 தமிழக மீனவர்களைக் கைது செய்து, யாழ்ப்பாணம் சிறையில் அடைத்துள்ளனர்.

மேலும், விசைப்படகு ஒன்றைசுற்றி வளைத்தபோது எதிர்பாராதவிதமாக இலங்கை கடற்படையினரின் ரோந்துப் படகில் இருந்த வீரர் ரத்நாயக்க என்பவர், கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து, தமிழக மீனவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி, இராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபின்னர், நேற்று 550 விசைப்படகுகளில், 2500-க்கும் மேற்பட்டோர் கடலுக்குச் சென்றனர்.

இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு முன்பாக நேற்று அதிகாலையில் இருந்தே மீன்வளத் துறை அதிகாரிகள், சர்வதேச கடல் எல்லையில் அசம்பாவிதம் நடைபெறாமல் இருப்பதற்காக 'இந்திய கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லவேண்டாம்.' என ஒலிபெருக்கியில் தொடர்ந்து அறிவிப்பு செய்தனர். மேலும், கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அனைவரும் ஆதார் நகல், மீனவர் அடையாள அட்டை எடுத்துச் செல்லுமாறும், அனுமதி டோக்கன் பெற்றுச் செல்லுமாறும் அதிகாரிகள் வலியுறுத்தினர்.



# உலக செய்திகள்

## காஸாவில் பாலஸ்தீனியரை கடும் சித்திரவதை செய்து கொல்லும் இசுரவேலிய இராணுவம்!

ஐ.நா.

யூன் 15, 2024

காஸாவில் பாலஸ்தீனியர்களை இசுரவேலிய இராணுவம் திட்டமிட்டு கொலை செய்ததாகவும் பாலியல் வன் கொடுமை உள்ளிட்ட மனித தன்மையற்ற சித்திரவதை களில் ஈடுபட்டதாகவும் ஐ.நா.விசாரணைக்குழுவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இசுரவேல் - ஹமாஸ் மோதல் தொடர்பாக இந்திய வம் சாவளியும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் தலைவருமான நவநீதம்பிள்ளை தலைமை யில் உயர்மட்ட குழு விசாரணை மேற்கொண்டது.

காஸாவிலுள்ள பாலஸ்தீனியர்களை முற்றாக கொன் றழிக்க இசுரவேல் முயன்றதாக அந்த குழுவின் அறிக் கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இசுரவேலிய இராணுவத்தினர் காஸா பெண்களை பாலியல் சித்திர வதை செய்ததோடு, பாலஸ்தீனிய ஆண்கள் மற்றும் இளைஞர்களை பாலின ரீதியாக துன்புறுத்தியதாகவும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைகளை துண்டித்தல், உடல் உறுப்புகளை துண்டித் தல், நிர்வாணப்படுத்துதல் மற்றும் இறந்தோரின் உடல் களுக்கு அவமரியாதை செய்தல், எரித்தல் போன்ற செயல் களில் இசுரவேல் இராணுவம் ஈடுபட்டதாக அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறியதோடு, இசுரவேல் இராணுவம் போர் குற்றம் புரிந்துள்ளதாகவும் ஐ.நா.



விசாரணைக்குழு அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 80 வருட அமெரிக்கா மற்றும் சவுதி ஒப்பந்தம் காலாவதியானது; இனி டொலரில் கச்சா எண்ணெய் விற்பனைக்கு இல்லை!

யூன் 15, 2024

அமெரிக்க டொலரில் மட்டுமே கச்சா எண்ணெய்யை விற்றுவந்த சவுதி அரேபிய அரசு, அமெரிக்கா உடனான ஒப்பந்தம் காலாவதி ஆனதால், இனிவரும் காலத்தில் யூரோ, யுவான், யென், பிட்காயின் போன்றவற்றில் கச்சா எண்ணெய்யை விற்பது குறித்து பரிசீலித்துவருகிறது.

அடுத்த 80 ஆண்டுகளுக்கு டொலரில் மட்டுமே கச்சா எண்ணெய்யை விற்க வேண்டும் என 1974 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும், சவுதி அரேபியாவிற்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தம் கடந்த வாரம் காலாவதி ஆனது.

கச்சா எண்ணெய் விலை டொலரில் நிர்ணயம் செய்யப் பட்டதால் உலகளாவிய வர்த்தகத்தில் அமெரிக்காவின் கை ஓங்கி இருந்த நிலையில், ஒப்பந்தத்தை புதுப்பிக்கப் போவதில்லை என சவுதி அரேபியா தெரிவித்துள்ளது. இது அமெரிக்காவிற்கு ஏற்படப் போகும் பொருளாதார பின்




## தமிழர்களுக்கான எங்களின் அர்ப்பணிப்பு உறுதியானது!

### பிரிட்டனின் வெளிவிகார அமைச்சர் டேவிட் கமரூன்

யூன் 19, 2024

பிரித்தானிய தமிழர்களிற்கான கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதியானது தளர்ச்சியற்றது என பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட்கமரூன் தெரிவித்துள்ளார்.
பிரிட்டனிற்கு தமிழ் சமூகத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டியுள்ள அவர் அனைவருக்கும் உண்மை நீதி மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தின் பொதுதேர்தலிற்கு முன்னதாக வெளியிட்டுள்ள வீடியோவில் இதனை தெரிவித்துள்ள டேவிட்கமரூன் பிரிட்டனின் தமிழ் சமூகம் என்பது பெரும் வெற்றிக்கதை என குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் நாட்டின் வாழ்க்கைக்கு நீங்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றீர்கள் என தெரிவித்துள்ள டேவிட்கமரூன் வர்த்தகம் முதல் கற்பித்த மருத்துவம்,உங்கள் உயிர்துடிப்புள்ள கலாச்சாரம் போன்றவற்றின் மூலம் நீங்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றீர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

,
எங்கள் தேசிய வாழ்வின் பல பகுதிகளிலும் தமிழர்கள் முக்கிய பங்கினை வகிக்கிறீர்கள் எனவும் டேவிட் கமரூன் தனது வீடியோவில் தெரிவித்துள்ளார்.

எமது தமிழ் சமூகத்தின் வெற்றிகள் பிரிட்டனின் எதனை சாதிக்க முடியும் என்பதற்கான ஒரு முன்மாதிரி என குறிப்பிட்டுள்ள டேவிட்கமரூன் நாங்கள் உங்கள் அபிலாசைகளிற்கும் எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளிற்கும் எப்போதும் ஆதரவளிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

15 வருடங்களிற்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்தும் டேவிட் கமரூன் தனது வீடியோவில் குறிப்பிட்டுள்ளார்.

பல பிரித்தானிய தமிழர்கள் இலங்கையின் அண்மைக்கால வலிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் என்பது எனக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ள டேவிட்கமரூன் இந்த வருடம் இலங்கையில் மோதல்கள் முடிவடைந்து 15 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன எனது நினைவுகள் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களை தேடுபவர்கள் குறித்ததாக உள்ளன என தெரிவித்துள்ளார்.

1948ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட (2013) முதல் பிரதமர் அல்லது ஜனாதிபதி நான் என தெரிவித்துள்ள டேவிட் கமரூன் யுத்தத்தின் மோசமான



விளைவுகள் குறித்து நான் நேரடியாக கேட்டறிந்துகொண்டேன் என குறிப்பிட்டுள்ளார்.

அன்று நான் வழங்கிய அர்ப்பணிப்பு இன்றும் உள்ளது நீடிக்கின்றது ,என வீடியோவில் தெரிவித்துள்ள டேவிட்கமரூன் அனைவருக்கும் நீதி உண்மை பொறுப்புக்கூறலை பிரிட்டன் ஆதரிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமாற்றுக்கால நீதி ஆகியவற்றிற்கான சர்வதேச முயற்சிகளிற்கு நாங்கள் தலைமைதாங்குகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# அணு ஆயுதங்கள் தொடர்பாக ஸ்வீடன் நிறுவன ஆய்வறிக்கை!

யூன் 22, 2023

அண்டை நாடான பாகிஸ்தானை காட்டிலும் இந்தியாவின் வசம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIRPI) என்ற ஸ்வீடன் நாட்டு நிறுவனம் இதனை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை நேற்று (ஜூன் 17) அந்த நிறுவனம் வெளியிட்டிருந்தது. அதில் உலக நாடுகளின் வசம் உள்ள அணு ஆயுதம் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா, இசுரவேல் ஆகிய ஒன்பது உலக நாடுகள் அணு ஆயுத சக்தியை கொண்டுள்ளன. அந்த வகையில் இந்த நாடுகளின் வசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை ஆண்டுதோறும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்தியாவின் கைவசம் உள்ள நியூக்கிலியர் வார்ஹெட்டின் எண்ணிக்கை 172 என உள்ளது. இது கடந்த ஜனவரி மாத கையிருப்பின் தகவல். பாகிஸ்தான் வசம் உள்ள அணு ஆயுதத்தின் எண்ணிக்கை 170 என உள்ளது.

கடந்த 2023-ல் இந்தியா தனது அணு ஆயுதங்களை விரிவு செய்ததாகவும், இதற்கு நவீன முறையை பின்பற்றியதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. நீண்ட தூரத்தில் உள்ள இலக்கை எட்டும் வகையில் அணு ஆயுதம் சார்ந்த மேம்பாடுகளை இந்தியா மேற்கொண்டு உள்ளதாகவும் தகவல்.

உலகளவில் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் வசம் அணு ஆயுதங்கள் அதிகம் உள்ளன. மேலும், உலகின் ஒட்டுமொத்த அணு ஆயுத கையிருப்பில் சுமார் 90 சதவீதத்தை இந்த இரண்டு நாடுகளும் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது சீனாவின் வசம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சற்று குறைவாகவே உள்ளது.

கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் வசம் ஒட்டுமொத்தமாக அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்காக கடந்த ஓராண்டில் மட்டும் உலக நாடுகள் சுமார் 91.3 பில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் மட்டும் இந்தியா சுமார் 2.7 பில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளது. முதலிடத்தில் உள்ள அமெரிக்கா



51.5 பில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள சீனா 11.9 பில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளது.

உலக அளவில் தற்போது ஆக்டிவாக உள்ள அணு ஆயதங்களின் எண்ணிக்கை 9,585 என உள்ளது. இதில் சீனா வசம் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 410 என இருந்துள்ளது.

# இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளால் பதற்ற நிலை!

## ஜெனீவாவில் இணை அனுசரணை நாடுகள் கவலை

யூன் 20. 2024

இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 56 அமர்வில் கனடா மலாவி மொன்டிநீக்ரோ வடமசடோனியா ஐக்கிய இராச்சியம் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

ஐக்கிய இராச்சியத்தின் மனித உரிமை தூதுவர் ரிட்டா பிரென்ஞ் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் மிக நீண்டகாலமாக காணப்படுவதை வெளிப்படுத்திய இலங்கையின் பலவந்தமாக காணாமல்போதல் குறித்த உங்கள் அறிக்கைக்கு நன்றி என அவர் தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்பட்டதால் ஏற்பட்ட துயரங்களிற்கும் அதனால் அனைத்து சமூகங்களிற்கும் ஏற்பட்ட பாதிப்புகளிற்கும் தீர்வை காண்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் உருவாக்கும் நடைமுறைப் படுத்தும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் உட்பட புதிய சட்டமூலம் எதுவும் அதன் மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றுவதாக காணப்படவேண்டும் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதாக காணப்படவேண்டும் என ஐக்கிய இராச்சியத்தின் மனித உரிமை தூதுவர் ரிட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் நாட்டில் சட்ட அமைப்புகளின் சுதந்திரம் வெளிப்படை தன்மையையும் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் காணிகள் விடுவிக்கப்பட்டதை வரவேற்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்குகிழக்கு பகுதிகளில் காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகளால் பதற்ற நிலை காணப்படுவதாக வெளியான தகவல்களால் நாங்கள் கரிசனையடைந்துள்ளோம், என தெரிவித்துள்ள ஜெனீவா தீர்மானத்திற்கு அனுசரணை வழங்கிய நாடுகள் கண்மூடித்தனமான கைதுகள், தேடுதல் நடவடிக்கைகள், பொலிசாரின் நடவடிக்கைகளின் போது தடுத்துவைக்கப்படல் குறித்தும் கரிசனையடைந்துள்ளதாக தெரிவித்துள்ளன.



இலங்கை அரசாங்கம் நிலைமாற்றுக்கால நீதிபொறிமுறைகள் சுயாதீனமானவையாக அனைவரையும் உள்வாங்குபவையாக பக்கச்சார்பற்றவையாக வெளிப்படை தன்மை மிக்கவையாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவையாக காணப்படுவதை உறுதி செய்யவேண்டும் என இணை அனுசரணை நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

# பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாக ஆர்மீனியா அறிவித்தது!

யூன் 21. 2023

பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பதாக ஆர்மீனியாவின் வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை அறிவித்தது.

காசாவில் போர் தொடர்ந்து எட்டு மாதங்களுக்கும் மேலாக நடந்து வரும் நிலையில், பாலஸ்தீன அரசை அங்கீகரித்த சமீபத்திய ஆர்மீனியா இருக்கிறது.

சர்வதேச சட்டம், நாடுகளின் சமத்துவம், இறையாண்மை மற்றும் அமைதியான சகவாழ்வு ஆகியவற்றிற்கான அதன் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில், ஆர்மீனியா குடியரசு பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கிறது என்று ஆர்மீனியாவின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில்:-

காசாவில் பேரழிவு தரும் மனிதாபிமான நிலைமை மற்றும் நடந்து கொண்டிருக்கும் இராணுவ மோதல் ஆகியவை, சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரலில் தீர்வு தேவைப்படும் முதன்மையான பிரச்சினைகளில் ஒன்றாகும் என ஆர்மீனியா குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் உள்கட்டமைப்பு, பொதுமக்களுக்கு எதிரான வன்முறை ஆகியவற்றை இலக்கு வைப்பதை திட்டவட்டமாக ஆர்மீனியா நிராகரிக்கிறது. மேலும் ஆயுத மோதலின் போது பொது மக்களை பணயக்கைதிகளாக பிடித்துக்கொள்வதை நிராகரித்தது. சர்வதேச சமூகத்தின் நிபந்தனையற்ற விடுதலைக்கான கோரிக்கைகளுடன் ஆர்மீனியாவும் இணைகிறது என மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்பெயின் மற்றும் நோர்வே அயர்லாந்துடன் இணைந்து பாலஸ்தீனிய அரசை அங்கீகரிப்பதாக கடந்த மே மாதம் அறிவித்தன.

இந்த அங்கீகாரம் இசுரவேலின் கோபத்தை வரவழைத்தது.

ஆர்மீனியாவின் அங்கீகாரத்தை பாலஸ்தீனிய நிர்வாகம் வரவேற்கிறது. இது உரிமை, நீதி, நியாயம் மற்றும் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்கான நமது பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கான வெற்றியாகும். எங்கள் நண்பர் ஆர்மீனியாவுக்கு நன்றி என்று பாலஸ்தீனிய அதிகாரத்தின் மூத்த அதிகாரியான ஹுசைன் அல்-ஷேக் எக்ஸ் தளத்தில் கூறினார்.

இந்த அறிவிப்பு வந்தவுடன் ஆர்மீனியாவின் தூதரை வரவழைத்ததாக இசுரவேலின் வெளியுறவு அமைச்சகம் கூறியது.

ஆர்மீனியா பாலஸ்தீனிய அரசை அங்கீகரித்ததைத் தொடர்ந்து, வெளியுறவு அமைச்சகம் இசுரவேலில் உள்ள ஆர்மேனிய




தூதரை கடுமையாக கண்டித்தது.

ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்தின் அங்கீகாரத்திற்குப் பின்னர், பாலஸ்தீனிய நாட்டை அங்கீகரிக்கும் ஐ.நா. உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 193 இல் 146 ஆக அதிகரித்தது. மூன்று நிரந்தர ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களான பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா - பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்றலில் "உரிமைக்காக எழு தமிழா" எழுச்சிப் போராட்டம்!

யூன் 24, 2024

தமிழின அழிப்புக்கு நீதிகேட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழம் விடுதலை அடையும் வரை "உரிமைக்காக எழு தமிழா" ஒன்று கூடல் இன்று 24.06.2024 திங்கட்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு பெல்சியம் நாட்டில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய முன்றலில் எழுச்சியாக இடம்பெற்றது.



ஆரம்ப நிகழ்வாக பெல்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அருகில் உள்ள திடலில் இருந்து எழுச்சிப்பேரணி ஆரம்பித்து நகர்ந்து சென்று ஐரோப்பிய முன்றிலை அடைந்து அங்கு தரித்து நின்று எமக்கு நீதிவேண்டி குரல் எழுப்பப்பட்டது.

பின்னர் அங்கிருந்து நகர்ந்த பேரணி மீண்டும் திடலை அடைந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையின் முன்பாக



நினைவு வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

இளையோர்களால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பெல்சியம் நாட்டுக் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

இளையோர்களால் மாவீரர் திரு உருவப்படங்களுக்கான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, அணிவகுத்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்ப மாகின.

இளையோரால் எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் இளையோர்கள் எமது போராட்டத்தின் நோக்கப் பற்றி உணர்வு பொங்க உரையாற்றியிருந்தனர்.

குர்திஸ்தான் மக்களின் சார்பில் அதன் பிரதிநிதி ஒருவர் ஆங்கில மொழியில் உரைநிகழ்த்தியிருந்தார்.

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடல் ஒலித்தபின்னர், தேசியக்கொடிகள் இறக்கப்பட்டு, "தமிழரின் தாகம் தமிழீழத்




தாயகம்" என்ற தாரக மந்திரத்துடன் நிகழ்வு இனிதே நிறை வடைந்தது.

பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பேருந்துகள், மகிழுந்துகள் மூலம் மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வரும் 16.09.2024 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபை முன்றிலில் இடம்பெறவுள்ள எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டது.

# விக்கி லீக்ஸ் ஊடகத்தின் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே விடுதலையாகி ஆவுஸ்ரோலியா சென்றடைந்தார்!

யூன் 26, 2024

விக்கிலீக்ஸ் இணைத்தின் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே இன்று தனது தாய் நாடான ஆஸ்திரேலியாவைச் சென் றடைந்தார்.



அமெரிக்கப் பிரதேசமான வடக்கு மரியானா தீவுகளில் உள்ள சைபனில் சைபனில் மூன்று மணி நேர விசாரணைகள் அசாஞ்சே நடந்தன. விசாரணையின் பின்னர் அசாஞ்சே விடுதலையானர். தேசிய பாதுகாப்பு ஆவணங்களைப் பெறு வதற்கும் வெளியிடுவதற்கும் சதி செய்ததாக ஒரு கிரிமினல் குற்றத்தை ஒப்புக்கொண்டார். ஆனால் சுதந்திரமான பேச் சுரிமையைப் பாதுகாக்கும் அமெரிக்க அரசியலமைப்பின் முதல் திருத்தத்தை அவர் நம்புவதாகக் கூறினார்.

14 ஆண்டு கால சட்டப் போராட்டத்திலிருந்து விடுவிக்கும் ஒப்பந்தந்தில் அமெரிக்க உளவுச் சட்டத்தை மீறிய குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் அவர் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் ஒரு தனியார் ஜெட் விமானத்தில் அஸ்திரேலியா கான்பெர்ரா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளின் பேரில் ஸ்வீட னுக்கும் அமெரிக்காவிற்கும் நாடுகடத்தப்படுவதற்கு எதிராக போராடி லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் அசாஞ்சே ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தஞ்சம் அடைந்திருந்தார்.

பின்னர் ஈக்வடார் தூதரகத்தில் பிரித்தானியக் காவல் துறையினர் நுழைந்து அவரைக் கைது செய்தனர். பின்னர் பிரித்தானிய உயர்பாதுகாப்பு சிறையிலும் ஏழு ஆண்டுகள் கழித்தார்.

2010ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள், பாலியல் வன்கொடுமைகள், படுகொலை போன்ற நூறாயிரக் கணக்கான அமெரிக்க இராணுவ ஆவணங்களை வெளி யிட்டார். இது அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய இரகசிய தகவல் மீறல்களில் ஒன்றாகும்.

"ஒரு பத்திரிகையாளராகப் பணிபுரிந்த நான், அந்தத் தகவலை வெளியிடுவதற்காக வகைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவலை வழங்குமாறு எனது ஆதாரத்தை ஊக்குவித்தேன்," என்று அவர் நீதிமன்றத்தில் அசாஞ்சே கூறினார்.

சுதந்திரமான பேச்சுரிமையைப் பாதுகாக்கும் அமெரிக்க அரசிய லமைப்பின் முதல் திருத்தத்தை என்று நான் நம்பினேன். ஆனால் அது உளவு சட்டத்தின் மீறல் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று நீதிமன்றில் கூறினார்.



அமெரிக்க மாவட்ட தலைமை நீதிபதி ரமோனா வி. மங் லோனா அசாஞ்சேயின் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அசான் ஜின் செயல்களால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை என்று அமெரிக்க அரசாங்கம் சுட்டிக்காட் டியதைக் குறிப்பிட்டார்.

பிரித்தானிய சிறையில் இருந்த காலத்தின் காரணமாக அவர் விடுவிக்கப்பட்டார். எதிர்வரும் ஜூலை 3 அன்று 53 வயதாகும் அசாஞ்சேக்கு பிறந்தநாள் வாழ்த்துகளைத் நீதிபதி தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கம் அசாஞ்சே அவர்களின் பெயர்களை வெளியிடுவதன் மூலம் தீங்கு விளைவிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியதற்காக அசான்ஜை பொறுப்பற்றவராகக் கருதும் அதே வேளையில், அவரது ஆதரவாளர்கள் சுதந்திரமான பேச்சு மற்றும் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தியதற்காக அவரை ஒரு ஹீரோ என்று பாராட்டினர்.

# தினந்தோறும் 10 குழந்தைகளின் கால்கள் துண்டாகிறது; காஸாப் போரின் அதிர்ச்சியூட்டும் தகவல்!

யூன் 26, 2024

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் 2023 அக்டோபர் மாதம் துவங்கி கடந்த மதங்களாக நீடித்து வரும் நிலையில் இதுவரை பெண்கள், குழந்தைகள் உட்பட 37, 658 பேர் உயிரிழந்துள்ளனர்.

காஸா நகரம் போரினால் முற்றிலும் உருகுலைந்துள்ள நிலை யில் தற்போது ராஃபா நகரின் மீது தனது கண்களை இசுரவேல் திருப்பியுள்ளது. அகதி முகாம்கள், மருத்துவமனைகள் உள் ளிட்ட பொதுமக்கள் தஞ்சமடைந்துள்ள இடங்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதால் சர்வதேச சமுதாயத்தின் கடும் எதிர்ப்புக்கு இசுரவேல் ஆளாகியுள்ளது.

போரை நிறுத்துவதற்கான முயற்சியில் ஐ.நா மெனக்கிட்டு வந் தாலும் இசுரவேல் பிடி கொடுப்பதாக தெரியவில்லை. எல் லைகளை இசுரவேல் தடுத்து வைத்துள்ளதால் காஸா மற்றும் ராஃபா நகரத்தில் தாக்குதல்களால் படுகாயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சையும் நிவாரணப் பொருட்களும் கிடைக்காத சூழல் நிலவுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இசுர வேல் நடத்திய தாக்குதலில் 101 பாலஸ்தீனிய பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் ஐநாவின் பாலஸ்தீன நிவாரண பிரிவான UNRWA தலைவர் பிலிப் லசாரினி அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரம் ஒன்றை வெளி யிட்டுள்ளார. அதாவது, காஸாவில் சராசரியாக தினமும் 10 குழந்தைகள் தங்களது ஒன்று அல்லது இரண்டு கால்களையும் இழக்கின்றனர் என்று தெரிவித் துள்ளார்.

ஒரு நாளைக்கு 10 குழந்தைகள் எனில் 260 நாட்களாக நடந்து வரும் இந்த போரில் காசாவில் சுமார் 2,000 குழந்தைகள் தங்களின் கால்களை இழந்துள்ளனர் .



மேலும் தாக்குதலால் படுகாயமடைந்த குழந்தை களின் கால்களை அகற்றும்போது சில சமயங் களில் மயக்க மருந்து கூட செலுத்துவதற்கு இல்லாத சூழ்நிலை இருப்பதாக பிலிப் லசாரினி தெரிவிக்கிறார். இந்த மொத்த போரிலும் இதுவரை சுமார் 21,000 குழந்தைகள் பெற்றோர் களிடமிருந்து காணாமல் போயுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.







# சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# தியாகத்தின் இமயத்தைத் தொட்ட இலட்சிய வீரர்கள் கரும்புலிகள்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தலைமச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
05.07.1993

எனது அன்புக்குரியவர்களே!

கரும்புலிகள் நாளாகிய இன்றைய தினத்தில், கரும்புலி வீரர்களாகிய உங்கள் மத்தியில், கரும்புலிகள் பற்றிப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர் ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக் கவைத்தான்.

இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றி யமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது. தனிமனிதனாக, எமது போராளி ஒருவன் தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புத்தைப் பதிவு செய்து கொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர்வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத, தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும், மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்கு குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்தவேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்துபோவதைத் தவிர்க்க முடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதை யின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழவேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழ விரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு; இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்குதன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன்பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்கவேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ளவேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங் களிலிருந்தும் தன்னை விடுதலை செய்துகொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது; துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு; கோழைத்தனத்தின் தோழன்; உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம், இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான்; அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து




விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

"கரும்புலி" என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும் உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக் குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே "கரும்புலி" என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது.

இந்த இரகசியத்தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தனித்துவத்திற்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகறிது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாம தேயமாக உறங்கியபோதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றிக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்து விட்ட இந்த சரித்திரநாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தை தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித வடிவை நோக்கி நகரும் உந்துசக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம் புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள் கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைப் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக் கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்கு முறை யாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

**இது கரும்புலிகளின் சகாப்தம்! இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டு விட்ட காலம்.**

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும், சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள்; எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், விரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும், எமது வாழ்வுக்காக தமது வாழ்வை துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக…!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்ப: [கரும்புலிகள் – பத்தாம் ஆண்டு நினைவெழுச்சி நாளையொட்டி [05.07.1997], 1993ஆம் ஆண்டு கரும்புலிகள் நாளின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பிரிவில் கரும்புலி வீரர்கள் மத்தியில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு மேதகு வேலுப்பிள்ளை பிரகாபரன் அவர்கள் ஆற்றிய உரையை இங்கு தருகிறோம்.



**எங்களின் நெருப்புக் குழந்தைகளுக்காக ஒரு கணம் தலைகளைக் குனிந்து வணங்குவோம். தரை, கடல், வான், மறைமுகம் என காற்றோடு கலந்தவர்களுக்காக பூச் சூடி விளக்கேற்றி அவர்களை ஒரு கணமாவது நினைவேந்துவோம்.**

# என்னரிய தமிழினமே எழுந்தொருக்காற் செவிதருவாய்!



கருமை படிந்த தமிழனின் வாழ்விற்
கதிரொளி யாகி உதித்த புலிகளின்
பெருமை நிறைந்த போர் வரலாற்றிற்
பதிந்த வரிகளாம் கரும்புலி மறவரே!

சேதமும் தாய் மண்ணும்
தேசியமும் உயிர் வாழப்
பாசத்தைப் படிப்பைப்
பாதியிலே அடக்கி வைத்து...
ஆசைகளை யெல்லாம்
ஆழத்திற் புதைத்துவிட்டு
வீசும் காற்றோடும்
விண்ணோடும் மண்ணோடும்
மூசி எழுமலையில்
மூழ்கி நிற்கும் கடலோடும்
பேசி நடக்கின்ற
பெரியவரே யும்பாதம்
பூசிக்கும் மக்கள்
போராட்டப் பயணத்தை
நேசிக்கும் நெஞ்சோடு
நின்று கவி சொல்வேன்!

குருதிக் கடலிற் கண்ணீரில் மரணத்தின்
பிரிவிற் பிணியிற் பெருந்துயரில் நாளிரவைத்
துருவிக் கழிக்கும் எம்மக்கள் குரல் உலகின்
இருளைக் கிழித்து அநீதிக்கு முற்றுவைக்கப்
பெருகும் ஆர்வத்தாற் பிரார்த்தித்து
நந்தலைமைப்
பரிதிக்கு முத்தமிட்டுப் பாடி உளம் தணிவேன்!
உருகும் பனிப்படலம் உடைந்துவிடும்
பகைச்சடலம்
கருதியது கூடுமெனும் உறுதியுடன் கவலை
வெல்வேன்!

ஆலய முன்றலில் அமைதியாய் நின்று
ஆண்டவன் ஆருளினுக் கேங்கிய கூட்டமாய்
கோலமும் குறிகளும் கொண்டு தம்மயலுடன்
கூடிக் களித்துக் குலவிய மக்களைச்...
சேலையும் பூவுமாய்ச் செந்நிறப் பொட்டுடன்
சித்திரம் சிற்பமாய் உலவிய மக்களை...
வேலையும் வீடும் விழாக்கள் பண்டிகையென
வாழ்வினை அழகாய் வரைந்து நன்மக்களை...
"ஆயுதம் எடு" எனப் பணித்தது சிங்களம்!
"வா யுத்தக் கள" மென வலிந்து அழைத்தது!
"சா நிதம்" என்ற சரிதையைத் தமிழன்
சந்ததி தலையிலே பதித்தது பௌத்தம்!

அந்நியன் பாதம் ஆடிய தாண்டவத்தால்
அன்னை அழுதாள், அப்பன் துடித்தெரிந்தான்!
சின்னமகள் செத்தள், செல்வ மகன்
சிரசிழந்தான்!
திண்ணையிலே படுத்துத் துங்கியவர்
துண்டானார்!
"அண்ணா" எனக் கதறி அன்புத் தங்கை
உணர்விழந்தாள்
முன்னால் நடந்த முழுக்கொடுமை
தாங்காமல்
தன்னாவி போக்கித் தரைவிழ்ந்தாள் அக்கா!

பள்ளிக்குப் போன பிள்ளை
பாதியிலே உயிர்பிரிந்தான்
பாடசாலைக் குஞ்சுகள் மேல்
பாவி குண்டுமழை பொழிந்தான்!
மச்சானோ முற்றத்தில்
மார்பு பிளந்துருண்டான்!
மாமனோ தன் காலைக்
காணாது தேடிநின்றார்!
குற்றாவியோடு
கோடியிலே மூதாட்டி
செத்தாளைப் போல
செந்நீரிற் புரண்டிருந்தாள்!

தாம் பிறந்த மண்ணிற்
தாம் வாழ வழியின்றித்
தேம்பியமுதார்கள்
தெருத் தெருவாய் அலைந்தார்கள்!
இன்ன நிலைகண்டு இதயம் வெடித்தெரியச்
சின்னக்கரம் உயர்த்திச் செங்களத்தின்
வழிநடந்தார்

முன்னைப் பிறப்பின் முடிச்சோழர், முழுவங்க
மன்னர், மறவர்கள், மணித்தமிழின் வீரர்கள்!
இன்னும் அடிமையென எம்தேசம்
விலங்கோடு
கண்ணீர் விடுவதுவோ?
கலங்குவதோ? எனக்கேட்டு
தன்னாட்சி கொண்டு தலைநிமிரப்
புறப்பட்டார்
முன்னாள் வரலாற்றின் மீட்புக்கு முற்றபட்டார்!

நாவீரம் நகர...
பாவீரப் பரணியும் பயனற்றுப் போக...
"சா - ஈரம்" தாங்காது தாய்நிலம் நோக...
"மாவீர வரலாறு" மடிப்பிச்சை போட்டது!
பொறுமையின் எல்லையிற்
போர்ப்பறை சாற்றிய
பெருவரலாறு
கொண்ட எம்மினத்தின்
உறுதியைக் கண்டு
உலகமே அதிர்ந்தது!
உண்மையும் தர்மமும்
உறுமிடக் கண்டது!

"கரும்புலி" என்றொரு
காவியப் பாத்திரம்
கன்னித் தமிழ்மகள்
ஈன்றனள் மண்ணிலே!
குறுமுனி அகத்தியன்
தலைமையில் அவனுடன்
பன்னூறு படைஞரைப்
பாருக்கு அளித்தனர்!
"கொடும்பலி" தந்தும்
கொள்ளுவம் விடுதலை!
என்னும் இளையவர்
எம்மிடை எழுந்தனர்!
அருந்திறன் ஆற்றலும்
ஆள்திறன் ஏற்றமும்
கொண்டவர் கொள்கையால்
வேங்கையராயினர்!

குடும்ப நல்வாழ்வின்
குடைதனை நீங்கியே
கூட்டம் கூட்டமாய்
பெரும் படையாகினர்!
கடும் பசி தாகம்
நித்திரை மறந்து
காலத்தின் கையிலோர்
காவியமாகினர்!

நேரிய பார்வையும்
நீதியின் பார்வையும்
காரியம் இலக்காய்க்
கண்டிடும் பான்மையும்
வேரென விடுதலை
விளைந்திடும் மேன்மையும்
கூரிய சிந்தையும்
கொள்கையில் மானமும்
போரிடும் வீரமும்
புதுமையின் ஈரமும்
ஊறிடும் நேயமும்
உரியவராயினர்!

கடின உழைப்பால்
கடுந்தவம் பயிற்சியினால்
நெடிய நடையால்
நீச்சலாற் பாய்ச்சலால்
உடலில் உயிரில்
உணர்வில் விசையேற்றி
இடியாய் மின்னலாய்
எரியாய் உருவெடுத்தார்!
பொடியாய்ப் பகைவன்
போக அவன்முன்னே
வெடியாகி வெடித்தனர்
விடிவுக்கு வித்தானார்!

பதுங்கித் தாக்கிடும்
போர்முறை தாண்டி
நெருங்கிப் போரிடும்
நெறிதனில் இறங்கினர்!

உலகத்துப் படையெல்லாம்
ஒன்றாகத் திரட்டிவந்து
வலைபோட்டுப் பிடிக்க
வட்டமிட்டார் சிங்களத்தார்!
தலைகெட்டுப் போன
அமெரிக்கர் தர்மத்தை
விலைகேட்டு வாங்க
விஷமத்தனம் புரிந்தார்
உலைவைக்க நின்ற
ஒட்டுமொத்தச் சக்திகளை
தலைவைத்துப் படுக்காதீர்
என்றே தமிழ்வீரர்
முலைமுட்டப் பருக்கி
மறுதிசைக்கு அனுப்பிவைத்தார்!

சிங்களப் பகைவன் சிரசிலே கால்பட்ட
மங்களம் பாடி
மறுபக்கம் ஓடினான்!

இத்துணை வேள்வியும்
எம்மண்ணில் நடக்கையில்
கத்தி பொல் வாளுடன்
கையிலே துவக்குடன்
மற்றவர் மண்ணிலே
மது உண்ட மயக்கத்தில்
சுற்றியே மோதிடும்
இளைஞரை நினைக்கையில்
பற்றியே நெஞ்சம்
பஞ்சென எரியுதாம்!

எத்துணை ஆழம்
எமக்காக அன்பிருந்தால்
அத்தனையும் துறந்து
எமக்காகத் தம்வாழ்வை
வைத்திருப்பார் பணயம்?
வகுத்திருப்பார் போர்ப்பயணம்?
உத்தமர்கள் இவரின்
இதயத்தின் தூய்மையாக
எத்தொடரால் விபரிப்போம்?
எதுசெய்து கடன் தீர்ப்போம்?

என்னரிய தமிழினமே!
எழுந்தொருக்காற் செவிதருவாய்!
மண்ணுரிமை பெற்று
விண்ணிலெங்கள் கொடிபறந்தால்
அன்றியெமக் கிந்த
அவனியிலே பெருமையில்லை!
அன்னையங்கே யாடையின்றி
அடிவயிற்றுக் கஞ்சியின்றிக்
கண்ணீரில் வாடுகையில்
கோடிசெல்வம் ஏதுசெய்யும்?

மண்ணுக்கு வித்தாகும்
மான விளக்குகளை
இன்னும் இழந்தால்
எமையாள யாரிருப்பார்?
அன்னை தமிழீழம்
ஆட்சியுடன் மீண்டும்
மின்னட்டும் என்று
விழப்போடு பணிசெய்வோம்!
எண்ணத் துயர்ந்த
எம்தலைவன் தலைமையிலே
பின்னின் றுழைப்போம்!
வெருவெற்றி கண்டுவோம்!

-புலவர்
05-07-1998, கரும்புலிகள் நனைவு நாளையொட்டிய
விசேட கவிதை
களத்தில் 01.07.1998




# கரும்புலி கப்டன் மில்லர்

## 05-07-1987 அன்று முதலாவது கரும்புலித்தாக்குதல் எவ்வாறு நடத் தப்பட்டது !



**"Black Tigers"** என்பது தற்கொடைப்பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கொள்ளப்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருக்குமே தன்னுடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்க்கு எப்பொழுதுமே தயாராய் இருக்கின்றனர்.

இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகனை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப் படையவிடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

### தெய்வப் பிறவிகள்தான் கரும்புலிகள்



ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து, அதைவிட தமது உயிரை கொடுத்து சில நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். அரிதாக, மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும் போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத்தயாராகவே இருப்பர். இப்படியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்கொடைத் தாக்குதலில் முதலில் வீரச் சாவடைந்த கப்டன் மில்லரால் நடாத்தி முடிக்கப்பட்ட தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை பற்றி சற்றுப் பார்போம்.

மில்லர் வடமராட்சியின் துன்னாலைப் பகுதியைப் பிறப்பிடமாக கொண்டவன். அவனுடைய தந்தை இலங்தை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க அவன் எப்போதும் சித்தமாக இருந்தான். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத் துடன் மோதியிருக்கிறான். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பை பெற்றவன்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றிகையிட்ட போது பிரபாவின் அணியின்ரோடு சேர்ந்து பதில் தாக்குதலில் ஈடுபட்டான். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்க்கு பின் வடமராட்சியை இராணுவத்தினர் வடமராட்சி பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். வடமராட்சி பகுதியை திரும்ப மீட்க வேண்டுமென்பதில் மில்லர் துடியாய் துடித்தான்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார் பிராந்தியத்தில் விக்ரருடன் பணியாற்றியவன்) மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்க்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடி மருந்தையும் பெற்று கொண்டனர். ஒன்றன் பின் ஒன்றாக இரு வண்டிகள் விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும் அதன் பின் வண்டியை, அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன்வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமிக்குள் வண்டிகளை விடுவது என்றும் ஏனேன்றால் இராணுவத்தினர் இரவு பத்து மணிக்குப் பின்னர் முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கிவிடுவார்கள் என்பதால் அதற்கு முன்னர் வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்பட வேண்டும்.

வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப் பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுபெடுத்துக் கொண்டான். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப் பட்டு முகாமுக்கு அருகில் கொண்டு வரப்பட்டு இருக்கும்.

சரியான நேரம் நெரிங்கியதும் எம்தோழர்கள் முகாமைத் தம்முடைய துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள். அந்தச் சந்தர்பத்தில் கமலும் அவனுடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரப்பிய வாகனங்கள் முகாமை சென்றடையும். இதுதான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக கொண்டவன். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டு எடுக்க சரியான தீர்வாகது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்து கொண்டு போரடத் தொடங்கினான்.

பயிற்சியை முடித்து விட்டு மட்டக்கிளப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றிந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்கிளப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தினர் ஆக்கிரமிப்புகுள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாக கொண்டுவந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூட நான் அடுத்த நாள் இறக்க போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை.

கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவனிடம் காண முடியவில்லை. வெடிமருந்துகளை ட்றக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புகளை கொடுத்து தன்னுடைய சவப்பெட்டிகளை தானே தயாரித்து கொண்டு இருந்தான்.

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டு வரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்லத் வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். எனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

பொறுபாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிககப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள்.

மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்றக் வண்டியை ஸ்ராட் செய்து எஞ்சினை உறுமி விட்டு அமைதிப் படுத்தினான். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவுக்காக காத்திருந்தான். அப்போது கூட பக்கத்தில் இருந்த பிரபுவோடு ஏதோ யோக் அடித்து கொண்டு சிரித்து கொண்டு இருந்தான்.







முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப் பட்டு இருந்தன.

தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்து விட்டு விலகி மறைவில் படுத்து கொண்டான். வெடி மருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப் பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப் பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெசின்கன்கள் வெடிக்க தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கிடோக்கியில் அறிவித்தான். “தடைகள் அகற்றப்பட்டு விட்டது” ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகிறது. சற்றுப் பொறு. மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறிவிப்பு தெளிவாக கேட்டது.

அதைக் கேட்ட மில்லர் “பிரபா பரவாயில்லை. வாகனத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காத படி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்.” என்றான்.

மில்லர் சற்று பொறுத்துக் கொள் அந்தப் பங்கர் உடைக்கப் பட்டதும் நீ போகலாம். மிக விரைவாக வண்டியை செலுத்தி விட்டு விட்டு. நீ இறங்கி ஓடி வந்து விடு. என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சற்று சிரித்து கொண்டான். ஏனேன்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவிற்கு கேட்க மனம் துணிய வில்லை. “பிரபா முன்பு ஒரு முறை யாழ்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிதானமாகவே வாகனத்தைச் செலுத்துவேன். எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தை கொண்டு செல்வேன்” என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் ரொக்கட் லோஞ்சர் வைத்திருப்பவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற ரொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட ரொக்கட் பங்கரை தாக்கியது. மணல் முட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலை தெரிவித்தான். பொறுபாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவிற்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை ஸ்ராட் செய்து மெதுவாக செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான் கருவி இயங்கத் தொடங்கியது.

மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான் பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்த ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து “மில்லர் எப்படியும் திரும்பி வந்து விடு” மில்லர் அதை புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது..

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்கு செல்ல. சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாம் நோக்கி முன்னேறினார்கள்.

இராணுத்தினர் தங்கியிருந்த சற்று முன்னர் கூட இராணுத்



தினர் நின்று துப்பாக்கி பிரியோகம் செய்த மிகப் பெரிய மாடிக் கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத் தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள்.

மில்லரின் தாக்குதலை தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகளோடு சங்கமாகி அதிர் வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தான்.

– உயிராயுதிலிருந்து …




மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
ல்ஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி




# கிண்ணியடி படுகொலை 12 யூலை 1991



மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பிரதேசசெயலர் பிரிவினுள் வாழைச்சேனையிலிருந்து 4.5கி.மீ. மேற்காகக் கிண்ணியடிக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழில்கள் விறகு வெட்டி விற்றல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் என்பனவாகும்.

12.07.1991 அன்று கும்புறுமுனை, வாழைச்சேனை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் கிண்ணியடிக் கிராமத்தைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பதின்மூன்று பொதுமக்களைக் கைதுசெய்த இராணுவம் அவர்களைக் கூரிய ஆயுதங்களினால் வெட்டிப் படுகொலை செய்தபின் அருகிலிருந்த ஆற்றில் வீசினார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995

நவாலிக்கிராமம் யாழ். மாவட்டத்தின் தென்மேற்கே சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. நவாலிப் பகுதியில் பழைமை வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததுமாக கத்தோலிக்க மக்களின் புனித வழிபாட்டுத்தலமாக சென்.பீற்றர்ஸ் தேவாலயம் உள்ளது.

09.07.1995 அன்று இராணுவத்தினர் "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயரில் யாழ். குடாநாட் டின் வலிகாமம் மேற்குப்பதியை இலக்காகக் கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட வேளை மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள். இராணுவ நடவடிக்கை காரணமாக சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டிலடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் ஒரு பகுதியினரில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு பொதுமக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அத்தேவாலயத்தை அண்டிய




பகுதிகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

1995.07.09 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணியளவில் விமானப்படையினரின் ஆஜன்ரீனா நாட்டுத் தயாரிப்பான "புக்காரா" விமானம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதும் அதன் சுற்றுப் புறத்திலுமாக ஒரே நேரத்தில் எட்டு றொக்கட் குண்டுகளை வீசியது. விமானத்தாக்குதலினால் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், சிறார்கள், தாய்மார்கள் உட்பட நூற்றிஜம்பதிற்கும் மேற˙பட்ட பொதுமக் கள் உடல்கள் சிதறுண்டு சம்பவ இடத்தில் உயிரிழக்க இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களிற் பலர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். உயிரிழந்த பொதுமக்களின் உடல்களை அப்புறப்படுத்துவதிலும் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும் ஊர் மக்கள் ஈடுபட்டனர். அன்று இரவு, மறுநாட் காலையென உயிரிழந்தவர்களின் உடல்கள் உழவு இயந்திரங்களிலும் வாகனங்களிலும் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டன. மூன்று தினங்கள் கழிந்த நிலையிலும் சடலங்களைத் தேடும் பணி நின்றுவிடவில்லை.

11.07.1995 செய்வாய்க்கிழமை உறவினர்களால் அடையாளம் காணமுடியாத இருபத்துநான்கு சடலங்களை யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். நோயாளர் நலன்புரி நிலையமும் இணைந்து சமய முறைப்படி அரியாலை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்தன. இத்தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க மத புனித திருத்தந்தை பெருமதிப்பிற்குரிய "இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்" அவரது அதிர்ச்சியையும் தெரிவித்ததோடு, ஆலயத்தில் நடந்த அனர்த்தத்திற்கு வருத்தமும் தெரிவித்திருந்தார்.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் உயிரிழந்த நூற்றிஜம்பத்தைந்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவாக, நவாலி மக்கள் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக நினைவுத்தூபி ஒன்றை அமைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

மனைவியை இழுந்த் மானிப்பாய் கிழக்கைச்சேர்ந்த கமலநாதன் தெரிவிக்கையில்,
"மாலை 4:30 மணிபோல் பெரிய குண்டுச் சத்தமும் புகை மண்டலமும் வயலுக்குள் நின்று பார்க்கும்போது நவாலிப் பக்கமாகத் தெரிந்தது. உடனே மகனையும் கூட்டிக்கொண்டு ஓடோடி வந்து பார்த்தால் எனது வீட்டிற்குள் போகமுடியவில்லை. கட்டட இடிபாடுகளும் முறிந்த மரங்களுமாக வீதியெங்கும் இருந்தது. அதையும் தாண்டிவளவிற்குள் வந்து பார்த்தபோது எனது மனைவிக்கு நெஞ்சிற் காயம்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. மகளிற்கு தலையிலும் கையிலும் காயம். இருவரும் சாய்ந்தபடி இருந்தார்கள். அவர்களைத் தாண்டி சற்றுத் தள்ளிப்பார்த்தபோது எனது மைத்துனர் குணரட்ணம் குடும்பத்தில் அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் முற்றத்திலேயே இறந்து கிடந்தார்கள். மனைவிக்கும் மகளுக்கும் துணியாற் காயத்திற்குக் கட்டுப் போட்டுவிட்டு அருகிலிருந்த சகோதரி என்ன ஆகியிருப்பாரெனப் பயந்து போய்ப் பார்த்தபோது எனது மைத்துனர் கணேசலிங்கம் அழுது கொண்டு மனைவி இறந்துவிட்டார். உங்களுடைய குடும்பத்தைப் போய்ப் பாருங்கோ என்று சொல்லியபடி சகோதரியைத் தூக்கிக் கொண்டு வந்தார். அந்தநேரம் வந்த அம்புலன்ஸ் வண்டியில் மனைவியையும் மகளையும் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குக் சென்றுகொண்டிருந்தோம். போகும் போது மனைவியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அங்கு கொண்டுபோய்ச் சேர்த்தபோது அன்றையதினம் ஞாயிற்றுக் கிழமை என்பதால், பிரதான வைத்தியர்கள் இருக்கவில்லை. இருந்தவர்கள் எல்லோரும் வந்து தொட்டுப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அப்போது அவருடைய கை திடீரெனக் கீழே விழுந்தது. அந்தவேளை "அப்பா பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்றதோடு அவரின் உயிரும் பிரிந்து விட்டது."
இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைதாசன் மேரிசசிகலா மாணவி 18
02. இதயசாந்தினி - -
03. இம்மானுவேல் டுசிந்தா - மாணவி - 14
04. இராமு வீரசிங்கம் - கடற்றொழில் - 43
05. இராசகுலசிங்கம் இராஜ்மோகன் - மாணவன் - 16
06. இராசதுரை மகேஸ்வரி - 34
07. ,ராசதுரை சந்திரகாந்தன் மாணவன் 13
08. இராசதுரை சுதா - மாணவன் - 09
09. இராசரத்தினம் ஆனந்தராசா லிகிதர் - 34
10. ஜீவராஜ் பிரதீபன் - மாணவன் - 13
11. உதயகுமார் - -
12. உதயகுமார் உசாந்தினி - மாணவி - 12
13. உதயகுமார் சதீஸ்குமார் - மாணவன் - 13
14. ந.முருகதாஸ் - -
15. ந.அபிராமி - -

# நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995




16. நவசந்தமலா - -
17. நாகலிங்கம் சரவணமுத்து - கமம் - 60
18. நாகேஸ் கோபாலகிருஸ்ணன் - கடற்றொழில் - 29
19. நடராசா கணாதீபன் - மாணவன் - 05
20. நடராசா சின்னத்துரை - கமம் - 65
21. நடராசா ரவி - சீவற்றொழில் - 22
22. நடேசு சித்திரபாலு - தச்சுவேலை - 51
23. நடேசன் விஜயகுமார் - மாணவன் - 18
24. நீக்கிலாப்பிள்ளை திருச்செல்வம் - அரசஊழியர் - 54
25. நித்தியானந்தம் அன்னலட்சுமி - 57
26. நவரத்தினம் ஜெயதா - மாணவி - 21
27. நல்லையா நீலாவதி - வீட்டுப்பணி - 50
28. கனகசபாபதி தவலட்சுமி - வியாபாரம் - 42
29. கனகசிங்கம் நாராயணசிங்கம் - சுயதொழில் - 50
30. கனகரத்தினம் உசாநந்தன் - தொழிலாளி - 20
31. கனகரத்தினம் சுதாகரன் - மாணவன் - 22
32. கனகரத்தினம் வசிகரன் - மாணவன் - 18
66. தனலட்சுமி - -
67. தர்மகுலசிங்கம் சுஜீபா - மாணவி - 17
68. தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி - 63
69. துரைராசா - -
70. தம்பிப்பிள்ளை தியாகராசா - சுருட்டுத்தொழில் - 54
71. தம்பிராசா துவாரகாதேவி - மாணவி - 20
72. தங்கராசா தற்சுதன் - மாணவன் - 10
73. தவம் பாஸ்கரன் - தொழிலாளி - 19
74. மாயராசா ஆனந்தபுவனன் - மாணவன் - 16
75. மாயராசா செல்வநாயகி - வீட்டுப்பணி - 53
76. மாதன் பரராசசிங்கம் - மேசன் - 48
77. மகேஸ்வரன் தயாளன் - தொழிலாளி - 20
78. மகேந்திரன் மதுகரன் - மாணவன் - 17
79. மகேந்திரன் வசந்தகுமாரி - 25
80. முருகன் சரசு - 69
81. முருகேசு பொன்னம்பலம் - தச்சுவேலை - 47
82. முருகேசு செல்வரட்ணம் - வர்ணம் பூசுபவர் - 65
83. அ.தனுஸ்ரலா - மாணவி - 8
84. ஆனந்தராசா யோகேஸ்வரி - 35
85. அந்தோனிப்பிள்ளை குரூஸ் குமுதினி - மாணவி - 18
86. ஆறுமுகம் கனகலிங்கம் - வியாபாரம் - 40
87. ஆறுமுகம் குணரத்தினம் - மெக்கானிக் - 40
88. ஜெயசீலன் கனிஸ்ரன் - மாணவன் - 17
89. ஜெகதீபன் - -
90. ஜெகசோதி விமலாதேவி - வியாபாரம் - 42
91. ஜெகசோதி ரதிமலர் - மாணவி - 17
92. யோகேஸ்வரி - -
93. நேசராஜா தவரஜனி - 28
94. கோபாலகிருஸ்ணன் கபில்ராஜ்- மாணவன் - 7
95. கோபாலகிருஸ்ணன் பிரதீபன் - மாணவன் - 07
129. சின்னையா சரஸ்வதி - 62
130. சித்திரபாலு நாகேஸ்வரி - வியாபாரம் - 44
131. சித்திரபாலு பிரபாகரன் - மாணவன் - 21
132. சித்திரபாலு தனேஸ்வரி - மாணவி - 17
133. சித்திரபாலு மகேந்திரா - தச்சுவேலை - 25
134. சித்திரபாலு ஜெயபாலினி - மாணவி - 12
135. சித்திரபாலு ஜெயமதி - 27
136. சிவகுமாரன் சுரேக்கா - மாணவி - 12
137. சிவசோதிராஜா பிரசன்னா - மாணவன் - 10
138. சிவலிங்கராசா ரஞ்சினி - மாணவி - 11
139. சிறீஸ்கந்தராசா கோபிகன் - மாணவன் - 13
140. சசிகலா - -
141. சுவாமிநாதர் சிவபாலசுப்பிரமணியன் - ஆசிரியர் - 50
142. சரவணபவான் பராசக்தி - 27
143. சரவணமுத்து சிவமணி - பூசகர் - 63
144. சண்முகநாதன் - -
145. வன்னியசிங்கம் - -
146. வீரசிங்கம் சற்குணராசா - கடற்றொழில் - 30
147. வரதராசா கிருஸ்ணகுமார் - குழந்தை — 15 மாதம்
148. ரவிச்சந்திரன் தனுசியா - மாணவி - 8
149. எஸ்.பிரதீபா - மாணவி - 11
150. எஸ்.கேதீஸ்வரன் - -
151. எஸ்.கேமலதா கிராமசேவையாளர் - 27
152. லூக்காஸ் யூட்மோகனதாஸ் - தச்சுவேலை - 24

## இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ந.கயிலைநாதன் - சாரதி - 46
02. நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 49
03. க.இரத்தினதேவி - வீட்டுப்பணி - 19
04. கு.உதயப்பிரபா - மாணவி - 19





33. கந்தையா நல்லையா - கடற்றொழில் - 55
34. கந்தன் ஞானசேகரம் - மாணவன் - 17
35. கந்தசாமி அஞ்சலாதேவி - 36
36. கந்தசாமி தேனுகா - மாணவி - 2
37. கந்தசாமி தேவகுலசிங்கம் - தொழிலாளி - 36
38. கார்த்திகேசு தவச்செல்வி - மாணவி - 12
39. காத்தான் கந்தசாமி - சீவற்றொழில் - 42
40. கதிரவேலு துரைராசா - விவசாயம் - 55
41. குமாரசாமி பத்மநாதன் - கமம் - 24
42. கமலநாதன் சாவித்திரி - 45
43. கணேசவேல் தேவகணேசன் - மாணவன் - 15
44. கணேசலிங்கம் கமலாதேவி - கணக்கு உதவியாளர் - 45
45. குமரசாமி மகேஸ்வரி - ஆசிரியர் - 54
46. குணரத்தினம் பிரணவன் - மாணவன் - 05
47. குணரத்தினம் தர்சினி - மாணவி - 14
48. குணரத்தினம் ரோகினி - குடும்பத்தலைவி - 35
49. குணரத்தினம் விதுசன் - மாணவன் - 07
50. ப.இந்திரகுமார் - -
51. ப.சாந்தன் - -
52. புஸ்பராணி - -
53. பாலசிங்கம் உதயராசா - தச்சுவேலை - 23
54. பாலசிங்கம் செல்லம்மா - 33
55. பத்மநாதன் பாலயோகினி - 40
56. பத்மநாதன் மலர்விழி - மாணவி - 13
57. பத்மகுமாரன் கோமதி - வீட்டுப்பணி - 28
58. பிரான்சிஸ் கிங்ஸ்லி - எழுதுவினைஞர் - 27
59. பிலிப்பிள்ளை கபிரியேற்பிள்ளை - கிராமசேவையாளர் - 54
60. பரராசசிங்கம் செல்வரத்தினம் - வியாபாரம் - 48
61. புண்ணியமூர்த்தி சயந்தன் - மாணவன் - 09
62. வைத்தியலிங்கம் ஜெயசிங்கம் - அரசஊழியர் - 56
63. வைரமுத்து சிவராசா - தொழிலாளி - 39
64. த.குலசிங்கம் - -
65. த.புஸ்பராணி - -
96. கோபாலகிருஸ்ணன் மதிவதனன் - 22
97. கோபாலகிருஸ்ணன் ரேவதி - 36
98. கோபாலகிருஸ்ணன் சயந்தன் - மாணவன் - 09
99. கோபாலகிருஸ்ணன் விநோபா - குழந்தை - 05
100. கோபிநாத் - -
101. பொன்னர் நாகமுத்து - 75
102. பொன்னார் உதயகுமார் - மீன்வியாபாரம் - 35
103. தொம்மைப்பிள்ளை ஜேசுதாசன் - வியாபாரம் - 21
104. தேவநாயகம் சைலஜா - மாணவி - 13
105. தேவநாயகம் தவபாலசரஸ்வதி - 45
106. தேவநாயகம் மனோதிகா - மாணவி - 08
107. தேவநாயகம் லாவன்யன் - மாணவன் - 11
108. தேவதாஸ் நரேஸ்குமார் மாணவன் 11
109. தேவதாஸ் பிரிந்தினி - மாணவி - 07
110. செ.தவராணி - -
111. செல்லையா இராசதுரை - கடற்றொழில் - 35
112. செல்லையா கிருஸ்ணரூபன் - கடற்றொழில் - 19
113. செல்வராசா பிரதீஸ் - 16
114. செல்வரட்ணம் சிவசுப்பிரமணியம் - 46
115. செல்லத்துரை இராசம்மா - 56
116. வேலு இராமலிங்கம் - தொழிலாளி - 22
117. வேலுப்பிள்ளை நடேஸ்வரன் - மாணவன் - 19
118. வேலாயுதம் லலிதாதேவி - 35
119. ஞானலட்சுமிபாலன் சீவரத்தினம் - தொழிலாளி - 47
120. சக்கரியால் ஜெகதீபன் ஜீவாதாஸ் - மாணவன் - 17
121. சுப்பையா தேவநாயகம் - தொழிலாளி - 47
122. சத்தியநாதன் - -
123. சதீஸ்குமார் - -
124. சி.மகேஸ்வரி - -
125. சின்னத்துரை நாகரத்தினம் - 60
126. சின்னத்தம்பி இன்பமலர் - மாணவி - 10
127. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் - கடற்றொழில் - 46
128. சின்னையா யோகசுந்தரம் - விவசாயம் -39
05. க.ரஞ்சினி - மாணவி - 09
06. கந்தமூர்த்தி செல்லம்மா - வீட்டுப்பணி - 35
07. கந்தமூர்த்தி ரஜனி - மாணவி - 07
08. கந்தமூர்த்தி ஜமுனா - மாணவி - 12
09. கந்தசாமி அமுதன் - மாணவன் - 16
10. கந்தசாமி சாமினி - வீட்டுப்பணி - 29
11. கா.தவராசா - கடற்றொழில் - 38
12. கார்த்திகேசு பேபிசாளினி - மாணவி - 08
13. கார்த்திகேசு சிவயோகராஜபுஸ்பம் - வீட்டுப்பணி - 44
14. கீ.தர்மஜெயன் - தொழிலாளி - 27
15. கி.பெளளின் - தச்சுவேலை - 51
16. ப.தயாளினி - மாணவி - 09
17. ப.சிவரூபன் - மாணவன் - 16
18. பாலச்சந்திரன் மகேஸ்வரி - வீட்டுப்பணி - 35
19. புலேந்திரன் ஜெயகரன் - மாணவன் - 15
20. துரைராசா நவரத்தினராசா - மாணவன் - 17
21. தி.கென்றிஜெயாகர் - தொழிலாளி - 18
22. தங்கராசா கௌசலா - குழந்தை - 02
23. தவராசா தேவகுமாரி — வீட்டுப்பணி - 45
24. தவராசா சிறிகரன் - 36
25. மு.கிளாடிஸ் நிர்மலா - மாணவி - 26
26. மயில்வாகனம் சசிகரன் - மாணவன் - 17
27. மார்க்கண்டு கந்தசாமி - கடற்றொழில் - 45
28. மார்க்கண்டு பேரின்பகுமார் - மாணவன் - 19
29. ஆ.முருகதாஸ் - தொழிலாளி - 30
30. அ.ஆரோக்கியம் - வீட்டுப்பணி - 59
31. அ.அருள்சீலி - மாணவி - 19
32. அ.ஜெயக்குமார் - அதிபர் - 45
33. அ.ஜெயவீரசிங்கம் - தொழிலாளி - 32
34. அ.லூத்துமேரி - வீட்டுப்பணி - 45
35. அன்ரன் ரஞ்சன் - மாணவன் - 19
36. அரசரட்ணம் குமுதினி - மாணவி - 16
37. அரசரட்ணம் மல்லிகாதேவி - வீட்டுப்பணி - 46
38. நேசராஜா ஆர்த்தி - குழந்தை - 5 மாதம்

# நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995









39. கோ.இராகுலன் - மாணவன் - 12
40. பே.சிவயோகநாதன் - கமம் - 44
41. பெனடிற் ரஞ்சினிதேவி - வீட்டுப்பணி - 20
42. தே.ஜெயராணி 38
43. தே.ரஜிதா - மாணவி - 08
44. மேனகா - மாணவி - 14
45. மோ.சாந்தி - வீட்டுப்பணி - 30
46. செ.முருகானந்தன் - மாணவன் - 15
47. செ.தேவமலர் - வீட்டுப்பணி - 16
48. செ.சுமித்திரா - மாணவி - 13
49. ச.நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 65
50. சு.தங்கப்பட்டு - வீட்டுப்பணி - 19
51. சு.மகாதேவி - மாணவி - 15
52. ச.அருட்செல்வி - வீட்டுப்பணி - 26
53. ச.வசந்தி - மாணவி - 14
54. சி.பிரதீபா - மாணவி - 26
55. சி.திருச்செல்வி - மாணவி - 12
56. சி.யொனிசங்கர் - மாணவன் - 18
57. சி.சுதாகரன் - மாணவன் - 17
58. சி.சிவமலர் - வீட்டுப்பணி - 33
59. சி.சிவசீலன் - மாணவன் - 14
60. விஜயகுமார் புவனேஸ்வரி - வீட்டுப்பணி – 8

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)







# நவாலி தேவாலயப் படுகொலை

**09 யூலை 1995**




















# பன்னங்கண்டி படுகொலைகள்
# 05 யூலை 1997



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள மிகச்சிறிய கிராமம் பன்னங்கண்டியாகும். இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் மந்தை வளர்ப்பும் உள்ளது. இக்கிராம மக்கள் வயலும் வயல்சார்ந்த பிரதேசத்தில் தங்கள் குடும்ப உறவினர் களுடன் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

1996ஆம் ஆண்டு காலத்தில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் என்பவற்றை நடத்திய வண்ணம் முன்னேறி வந்தனர். இதனால் இப்பிரதேச மக்கள் அன்று தங்கள் உடமைகள், வீடுகள் என்பவற்றைக் கைவிட்டு செய்வதறியாது இடம்பெயரத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வட்டக்கச்சியில் உறவினர் வீடுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்தும், பொது மண்டபங்களிலும் தங்கியிருந்தார்கள்.

வ்வாறு வட்டக்கச்சியில் துயருடன் இருக்கும் வேளையில், தங்கள் வீடுகளிலுள்ள பொருட் களை எடுப்பதற்காகவும், மந்தைகளைக் கொண்டுவருவதற்காகவும் சென்ற பொது மக்களை பன்னங்கண்டி மூன்றாம் வாய்க் கால் பிள்ளையார் கோயிலடியில் நின்ற படை யினர் கைதுசெய்தனர். பின்னர் அவர்களின் கண்களையும், கைகளையும் கட்டி ஆயுதங் களாலும், தடிகளாலும் கடுமையாகத் தாக் கினார்கள். அப்போது அவர்கள் தாங்கள் பொதுமக்கள் என்றும் தங்களைத் திரும்பிப் போக விடும்படியும் இராணுவத்தினரைக் கும்பிட்டும், கெஞ்சியும் கேட்டார்கள். ஆனால் படையினர் அவர்களை அதே இடத்திலுள்ள இராசதுரை என்பவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே வைத்து அடித்துக் கொலைசெய்த பின்னர் அவ்வீட்டின் மலசல கூட குழியினுள் நால்வரினது சடலங் களையும் போட்டு மூடினர்.

2000ஆம ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமரச் சென்றபோது தங்களது வீடுகளையும் காணிகளையும் துப்பரவு செய்தார்கள். அப்போது இராசதுரை வீட்டு மலசலகூடக் குழியினிலிருந்து நான்கு பேரினது எலும்புக்கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் ஆடைகள் இரத்தக் கறைபடிந்த நிலையிலும் மீட்கப்பட்டன. பின்னர் ஆடை களை ஆதாரமாகக கொணடு மூன்று பேர் அடையாளங் காணப்பட்டனர். ஒருவர் இன்று வரை அடையாளங்காணப்பட வில்லை. இது ஒரு சிறுவனுடையதாக இருக்கலாமென மருத்துவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவர்களைப் போன்றே இராணுவத்தினராற் கைப்பற்றிய பகுதிகளில் தங்களது வீடுகளைப் பார்ப்பதற் காகச் சென்று இன்றுவரை திரும்பிவர வில்லையென காணாமற் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். கணவரை யிழந்த பன்னங்கண்டியைச் சேர்ந்த சீதாலட்சுமி தெரிவிக்கையில்,

"ஒருநாள் வீட்டைப் பார்த்து விட்டு நாங்கள் வளர்த்த மாட்டையும் பிடித்துக்கொண்டு வரு வோம் என்று சொல்லிவிட்டு சிநேகிதர் களான முத்து, குமார் என்வர்களுடன் மற்றும் ஒரு பதினாறு வயதுப் பையனுடனும் நாலுபேராக வீடு பார்க்கச் சென்றார்கள். பின்பு 200ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் மலக்குழி ஒன்றி லிருந்து நான்கு பேரின் எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டன. அப்போது இது சம் பந்தமாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரம் நாங்கள் அக்கராயனில் வசித்து வந் தோம். அப்போது எடுத்த எலும்புக்கூடு களையும் உடுப்புக்களையும் அக்கராணயன் காவல் நிலையத்தில் காட்டினார்கள். அதில் என் கணவர் போட்டிருந்த உள்ளுடுப்புக்களை வைத்து அவரின் உடலை அடையாளம் காட்டினேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இடம்பெயர்ந்து இனிமேல் இல்லையென்று கஸ்ரத்தின் மத்தியிற் சீவித்து வந்த நேரம் எனது கணவரும் இராணுவத்தாற் கொல்லப் பட்டு விட்டார். மிகப் பெரிய சிரமத்தின் மத் தியில் பிள்ளைகளைப் படிப்பித்து வளர்த்து வரு கின்றேன். எங்களுக்கு எவரும் உதவ முன் வரமாட்டார்கள். அப்படியிருந்தும் யாரிடமாவது கடன்பெற்றாலும் எம்மாற் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். அநியாயமாக எனது கணவரை சிறீலங்கா இராணுவம் கொன்றதால் தான் எனக்கு இந்த கஷ்டநிலை" என்றார்.

இச்சப்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. சீனிவாசகம் பன்னீர்ச்செல்வம் - தொழிலாளி — 37
2. பெருமாள் சசிக்குமார் - தொழிலாளி — 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# வள்ளல்களும் தமிழரசியலும்!

19.06.2024

இலவசமாகக் கிடைப்பதைப் பெரும்பாலானவர்கள் கைவிட மாட்டார்கள். இது பெரும்பாலான எல்லாச் சமூகங்களிலும் காணப்படும் ஒரியல்பு.அதிலும் குறிப்பாக ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தில், கூட்டுக் காயங்களிலும் கூட்டு மன வடுக்களிலும் அழுந்திக் கிடக்கும் ஒரு சமூகத்தில், உதவிக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். கடந்த 15 ஆண்டு கால ஈழத்தமிழ் அரசியலானது அவ்வாறு உதவிக்காக காத்திருப்பவர்களுக்கு பொருத்தமான நிவாரணத் திட்டங்களையும் கட்டமைப்புக்களையும் உருவாக்கத் தவறிவிட்டது.

2009இல் காணாமல்போன தனது இளம் கணவனுக்காக போராடிய இளம் மனைவி இப்பொழுது முதுமையின் வாசலை அடைந்து விட்டாள். அவளுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. அப்படித்தான் காயப்பட்டவர்கள், அவயங்களை இழந்தவர்கள், மிகக்குறிப்பாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், கழுத்துக்குக் கீழ் இயங்க முடியாதவர்கள், இரு கண்களையும் இழந்தவர்கள், இரு கால்களையும் இழந்தவர்கள்... போன்றவர்களுக்கு உதவுவதற்கு ஒரு மையத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட எத்தனை கட்டமைப்புகள் உண்டு? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாக உள்ள பெண்களின் கண்ணீரை வைத்து அரசியல் செய்யும் ஒரு சமூகம், அப்பெண்கள் மத்தியில் காணப்படுகின்ற இளவயதினருக்குப் புதிய வாழ்வைக் கொடுக்கத் தவறிவிட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ள ஒரு சமூகத்தில் பிறரிடம் இருந்து கிடைக்கக்கூடிய உதவிக்காக காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். தமிழ்ச் சமூகத்தில் பிறர் உதவியில் தங்கியிருக்கும் தொகையினரை கடந்த 15 ஆண்டுகளாக அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள தனி நபர்கள், தன்னார்வ அமைப்புக்கள், இவைதவிர நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள வள்ளல்கள், கொடையாளிகள் போன்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அரவணைத்து வருகிறார்கள்.

மேற்சொன்ன ஒவ்வொரு தரப்பும் அவரவர் நோக்கு நிலையில் இருந்துதான் அந்த மக்கள் கூட்டத்தை அரவணைக்கிறார்கள். அதனால் தேவை நாடிகளாக இருப்பவர்களுக்கு ஏதோ ஒரு விகிதமளவு நிவாரணம் கிடைக்கிறது. உதவிகள் கிடைக்கின்றன. உளவளத் துணையும் கிடைக்கின்றது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு செய்பவர்கள் தானம் செய்பவர்கள் முதலாவதாக, நல்லதைத்தான் செய்கிறார்கள். ஆனால் தொண்டும் தானமும் மட்டும் ஒரு சமூகத்தை அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழ வைக்க உதவாது. அந்த மக்களைக் கையேந்தி மக்களாக வைத்திருப்பதற்கும் அப்பால் அவர்களை வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் கொண்டவர்களாக, விடாமுயற்சி உள்ள உழைப்பாளர்களாக மாற்ற வேண்டும்.

அது தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தானமும் தொண்டும் கருணையின் பாற்பட்ட செயல்கள் மட்டுமல்ல. அவை தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஒரு பகுதி. அவை தேசியக் கடமைகள். காயத்தில், துக்கத்தில், இழப்பில், தனிமையில் விழுந்து கிடப்பவர்களுக்குக் கைகொடுப்பது, அவர்களைத் தூக்கி நிறுத்துவது, அவர்களின் காயங்களை ஆற்றுவது, போன்றன ஒப்பீட்டளவில் "செட்டில்ட்" ஆன தமிழ் மக்களின் தேசியக் கடமைகள்.

அதற்கு ஓர் அரசியல் தலைமைத்துவம்தான் முழுமையான பொருளில் வழி நடத்த முடியும். ஓரளவுக்குச் சமூகத் தலைமைத்துவமும் மதத் தலைமைத்துவமும் செயற்பாட்டு அமைப்புக்களும் செய்யலாம்.

ஆனால் அப்படிப்பட்ட செய்முறைகள் கடந்த 15 ஆண்டுகளாக மிகக்குறைந்த அளவில்தான் நடந்திருக்கின்றன. மிகக் குறைந்த தொகையினர்தான் அவ்வாறு வலுவூட்டப்பட்டிருக்கிறார்கள். பெருந்தொகையானவர்கள் தொடர்ந்தும் கையேந்திகளாகவும் நிவாரணங்களுக்காகக் காத்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின்னணியை வள்ளல்களும் கொடையாளிகளும் தமக்கு வசதியாகக் கையாளப் பார்க்கிறார்கள்.

கடந்த வியாழக்கிழமை அப்படி ஒரு சம்பவம் நடந்தது. அன்று கொழும்புக்கான ஜநாவின் இணைப்பாளர், ஜநா அலுவலகம் ஒன்றில் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதாக இருந்தார். ஆனால் அவருடைய பயணம் சிறிது நேரம் தாமதம் ஆகியது. ஏனென்றால் அவர் வரும் வழியில் நாவலர் வீதியில் ஒரு பல்பொருள் அங்காடியைச் சூழ உள்ள பிரதேசத்தில் அசாதாரணமாக போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. அங்குள்ள ஒரு பல்பொருள் அங்காடி உரிமையாளரின் பெருமெடுப்பிலான தான நிகழ்வே அந்த நெரிசலுக்குக் காரணம். அங்கே போலீசாரும் படை வீரர்களும் காணப்பட்டார்கள். எனினும் அங்கு பெருகிய மக்களைக் கட்டுப்படுத்த யாராலும் முடியவில்லை. அதனால் ஜநாவின் பிரதிநிதி சிறிது கால தாமதமாக சந்திப்புக்கு வந்தார்.



மேற்சொன்ன பல்பொருள் அங்காடியின் முதலாளி ஏற்கனவே அதுபோன்ற தான நடவடிக்கைகளுக்காக மிகவும் பிரபல்யமானவர். உதவி தேவைப்படுகிறவர்களுக்கு அவர் காசை அள்ளி வீசுவார். அன்றைய தான நிகழ்வுக்கு வெளியிடங்களில் இருந்து குறிப்பாக தூர இடங்களில் இருந்து மக்கள் முதல்நாளே இரவு பயணம் செய்து அங்கு வந்திருந்தார்கள். வயோதிபர்கள், நோயாளிகள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் என்று பல வகைப்பட்டவர்களும் அங்கே இருந்தார்கள். அவர்களைக் கௌரவமான விதத்தில் ஒழுங்குபடுத்தி அதை ஒரு கௌரவமான தான நிகழ்வாகச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு இருந்திருந்தால், அன்றைக்கு அந்த நெரிசலைத் தவிர்த்து இருந்திருக்கலாம். அல்லது அது ஒரு கட்டுப்படுத்த முடியாத பெரும் விழாவாக வெளியில் தெரிவதை அந்த முதலாளி விரும்பினாரோ தெரியவில்லை.

கொடையாளிகள் அல்லது வள்ளல்கள் எல்லாச் சமூகங்களிலுமே போற்றப்படுகின்றார்கள். எல்லா மதங்களிலுமே அவர்களுக்கு உயர்வான இடம் உண்டு. குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் புராண நாயகனாகிய கர்ணன், முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த மன்னன் பாரி போன்றவர்கள் உதாரணங்களாகக் கூறப்படுவதுண்டு. நவீன வரலாற்றிலும் கோடீஸ்வரர்களும் உலகப் பெரு முதலாளிகளும் தாம் திரட்டிய செல்வத்தின் ஒரு பகுதியைத் தானம் செய்கிறார்கள். அல்லது தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கிறார்கள். அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழராகிய ராஜ் இராஜரத்தினம் அவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய்களை பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். தானம் செய்வதற்கு உழைக்க வேண்டும். உழைத்தால்தான், செல்வத்தைத் திரட்டினால் தான், தானமாகக் கொடுக்கலாம் என்ற பொருள்பட அவர் தன்னுடைய "சமனற்ற நீதி" என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

தொண்டு செய்வது நல்லது. வள்ளல்கள் போற்றுதற்குரியவர்கள். ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியலில் இறங்கலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு எங்கிருந்து வருகிறது ?

தமிழகத்தில் எம்ஜிஆர், விஜயகாந்த் போன்றவர்கள் வள்ளல்களாக போற்றப்படுகிறார்கள். அதனால் இலட்சக்கணக்கான ஆதரவாளர்களை அவர்கள் சம்பாதித்தார்கள். ஈழத்தமிழர்கள் மத்தியில் அவ்வாறு வள்ளல்கள் அரசியலில் ஈடுபடும் ஒரு போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. வள்ளல்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று இக்கட்டுரை கூறவரவில்லை.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் அரசியல் போக்கெனப்படுவது வள்ளல்களுக்கும் கொடையாளிகளுக்கும் வசதியான ஒன்றுதான். கொடைகளின் மூலம் வள்ளல்கள் சமூகத்தில் இயல்பாகவே அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் பெற்று விடுகிறார்கள். அதை அவர்கள் அரசியலில் முதலீடு செய்வது இலகுவானது. ஏற்கனவே தமது தொழில்சார் திறமைகள் காரணமாக புகழடைந்த, செல்வந்தர்களாகிய சிலர் தமிழரசியலில் இறங்கி விட்டார்கள். செல்வந்தர்களாகவும் பிரபல்யங்களாகவும் இருக்கும் பலர் இறங்கத் துடிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஓர் அரசியல் சூழலில் வள்ளல்கள் இலகுவாக அரசியலில் நுழையலாம். இது அரசியல்வாதியாக இருப்பதற்குரிய தகைமை என்ன என்ற தமிழ்ச் சமூகத்தின் அளவுகோல்களைக் காட்டுகிறது என்று எடுத்துக் கொள்ளலாமா?



அதுமட்டுமல்ல தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை முன் னெடுக்கத் தவறிய ஒரு வெற்றிடத்தில்தான் வள்ளல்கள் ஒரு தேசியக் கடமையை தனிப்பட்ட தானமாகவும் கருணை யாகவும் கருதி அதன் ஊடாக அரசியலில் பிரவேசிக்க முயற்சிக் கிறார்களா?

கூட்டு மனவடுகளோடும் ஆறாத கூட்டுக்காயங்களோடும், அவநம்பிக்கைகளோடும் காணப்படும் ஒரு சமூகத்தை பண்புருமாற்றத்தின் ஊடாகக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு 2009க்குப் பின் வந்த எல்லாத் தலைவர்களுக்கும் இருந்தது. ஆனால் அது பொருத்தமான விதத்தில் முன்னெடுக்கப்படவில்லை. அதன் விளைவாக விழுந்த வெற்றிடத்தில்தான் வள்ளல்கள் தலைவர்களாக வர முயற்சிக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்துக்கு இப்பொழுது தேவையாக இருப்பது 15 ஆண்டுகளின் பின்னரும் கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஒரு கூட்டு அரசியல் செயல்பாடுதான். ஆனால் அவ்வாறு கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல அரசியலை முன்னெடுக்கவல்ல ஆளுமை மிகுந்த தலைவர்கள் எத்தனை பேர் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு?

மக்களுக்கு நிவாரணம் வேண்டும். உதவிகள் வேண்டும். நிதிவளம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் காசை என்ன செய்வது என்று தெரியாமல் கோவில்களில் கொண்டு போய்க் கொட்டுகின்றது. அந்தக் காசைப் பயன் பெறுமதி மிக்கதாக மாற்றலாம். அதற்கு 2009க்குப் பின்னரான தமிழ் அரசியலைக் குறித்த பொருத்தமான அரசியல் தரிசனமும் பொருளாதார தரிசனமும் நிவாரண தரிசனமும் இருக்க வேண்டும். வள்ளல்களுக்கு அவ்வாறான தரிசனம் இருக்குமாக இருந்தால் பிரச்சினை இல்லை.

ஆனால் வள்ளல்கள் தங்களை புதிய எம்ஜிஆர்களாகக் கற்பனை செய்து கொண்டு, தான நிகழ்வை நாடகத்தனமாக ஒழுங்குபடுத்தி, பாட்டுக்கு எம்ஜிஆர் போல ஆடி, யுடியுப்பர்களுக்குச் செய்தியாக மாறும் போதுதான், அது விவகாரமாகிறது. தொண்டு நல்லது. தானம் நல்லது. ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியல்வாதிகளாக வர விரும்பினால் அதற்குரிய ஒழுக்கமும் தரிசனமும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும். தானம் ஒரு அர்ப்பணிப்புத்தான். ஆனால் அது மட்டும் போதாது. பொருத்தமான அரசியல் தரிசனம் இருக்க வேண்டும். அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அதை ஒரு தேசியக் கடமையாக செய்ய வேண்டும்.

அற்புதமான ஒரு தமிழ்ப் பழமொழி உண்டு. ஒரு கை கொடுப்பது மறுகைக்குத் தெரியக்கூடாது என்று. தானம் செய்வதால் தனக்குக் கிடைக்கும் புகழையும் பிரபல்யத்தையுங் கூடத் தானம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மகாபாரதத்தில் கர்ணன் இறக்கும் தறுவாயில் அவனுடைய தர்மமே அவனுக்குப் பாரமாக இருந்தது. அதனால் கர்ணன் தானம் செய்து தான் சம்பாதித்த புண்ணியத்தையும் தானம் செய்தான். அது புராண கால கர்ணன். அவனுக்குத் தலைகாத்த தர்மம் ஒரு பாரம். நவீன அரசியலில் தர்மம் ஒரு முதலீடா?

நன்றி: நிலாந்தன்

# கரும்புலிகள்...! எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்!

யூலை 05....



**கரும்புலி மில்லர்... நீ...! காலனும் கலங்கிய காவியம் காலத்தால் அழியாத ஓவியம்**

1987 ஆம் ஆண்டு இந்நாளில்தான், "கரும்புலி" கப்டன் "மில்லர்" முதலாவது கரும்புலித் தாக்குதலை சிறீலங்கா இராணுவம் முகாமிட்டிருந்த நெல்லியடி மகாவித்தியாலத்தின் மீது நடத்தினான். கப்டன் மில்லருடன் ஆரம்பமான "கரும்புலிகள் சகாப்தம்" இன்றுடன் முப்பத்தி ஏழு ஆண்டு கால வீர வரலாற்றை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆழமாகப் பதிவு செய்கின்றது. இந்த மூன்று தசாப்தத்திற்கு மேலாக தரையிலும், கடலிலும், வானிலுமென கரும்புலிகள், உலகை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியதும் சிறீலங்கா அயுதப்படையினரை கதிகலங்க வைத்ததுமான பல கரும்புலித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் வலுவான போர் வடிவமாக மாறியுள்ள கரும்புலிகள், ஓர் சிறுபான்மை இனமாக இன அழிவை எதிர்கொண்டுள்ள தமிழ் மக்கள் கூட்டத்தின் காப்பரணாக இன்று உருவாகி உள்ளார்கள்.

உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது தனித்துவமானது. அதன் வழிமுறைகளும் தனித்துவமானவை. இத் தனித்துவமே விடுதலைப் புலிகளின் வீரசாதனைகளுக்கும் உலகம் வியக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் இராணுவ வெற்றிகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்து அனைவருமே கரும்புலிகள் போன்றவர்கள்தான். அவர்கள் எவ்வேளையிலும் தமது மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தம் இன்னுயிரை ஈகம் செய்யத் தயாராகவே உள்ளனர். இவ்வாறு பல ஆயிரம் வீரர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்தும் உள்ளனர்.

இந்தவகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஈகத்திற்கு முன்னுதாரணமானவர்கள்தான் என்றாலும், கரும்புலிகளின் ஈகமானது இவர்களில் இருந்தும் வேறுபட்டதாகும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இலக்கில் தன்னுயிர் இழக்கப்படும் என்ற நிலையிலும் தமது இலட்சியம், குறிக்கோள் என்பவற்றில் எதுவித தளம்பலும் இன்றி உறுதியுடன் செயற்படுபவனே கரும்புலியாவான்.

ஆனால், இதனைச் சாதாரண மனிதர்கள் எல்லோராலும் செய்துவிட முடியாது. இது அவரின் சிந்தனைக்கே அப்பாற்பட்டது. இதனைச் செய்வதற்கு மரணத்தை மிஞ்சிய ஆத்மீக பலமும் மனோதிடமும் தேவையாகும். இது மரணத்தை மறந்து, தனது குறிக்கோளை அடைய முனையும் ஓர் இலட்சியவாதியின் உன்னத போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், கரும்புலிகளின் சாதனை மகத்தானதாகும். அவர்கள் புரிந்த ஒவ்வொரு தாக்குதலிலும் சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் ஆட்டம் கண்டது. அரசியல் வரலாறு பாதிப்புக்குள்ளானது. அத்தோடு, இது சிறீலங்கா அரசின் உள்நாட்டு அரசியலை மட்டும் பாதிப்பதாக அமைவதில்லை. சிறீலங்கா அரசின் வெளியுறவுக் சொள்கையையே மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்ததாகவே இருந்தது.

இவ்வுன்னத தியாகத்திற்குத் தனியாக ஆண்கள்தான் உரியவர்கள் என்பதல்ல. பெண் கரும்புலிகளும் கடற்பரப்பில் மேற்கொண்ட மகத்தான சாதனைகள் உலக இராணுவ வரலாற்றில் புறந்தள்ள முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டவை. முதற் கரும்புலி கப்டன் மில்லர் சிறீலங்காப் படையினரை தமிழீழ மண்ணில் அதிர வைத்து காவியமானான். முதல் பெண் கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி சிறீலங்காக் கடற்படையினரை தமிழீழக் கடலில் அதிர வைத்து எம் கண்களில் நிறைந்தாள்.

கடலில் பெண் கரும்புலிகள் ஆற்றிய மகத்தான சாதனைகள், சிறீலங்காக் கடற்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் பெரும் பங்காற்றியுள்ளன.

இப்போராட்ட வடிவமானது, உலகத்தைப் பொறுத்த தனித்துவமான மட்டுமல்ல, அந்நியர்களினால் புரிந்துகொள்ள முடியாதவையுமாகும். கரும்புலிகளின் துணிவும், மனோபலமும், அர்ப்பணிப்பும் அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. சில ஆய்வாளர்கள், கரும்புலிகளுக்கு இம் மனோபலம் எங்கிருந்து கிடைக்கின்றது எனக்கண்டறிய பெரும் ஆவலாய் உள்ளனர்.

ஆனால், கரும்புலிகளின் இம் மனோபலத்தை அந்நியர் எவராலும் புரிந்துகொள்ளவோ, விளங்கிக்கொள்ளவோ முடியாது. ஏனெனில், இது ஒரு இனத்தின் இலட்சியப் பயணத்தின் தூண்டுதலால் உருவானது. இது இம்மண்ணிற்கே உரியது. இது இம்மண்ணின் மைந்தர்களுக்கே உரிய தனித்துவமானது.




இத்தனித்துவமான பேராயுதமே இன்று சிங்களப் பேரினவாதத்திலும் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முக்கிய ஆயதமாகவும் உள்ளது. இந்நிலையில் தலைவர் பிரபாகரன், "கரும்புலிகள் எமது இயக்கத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்" எனக் குறிப்பிட்டமை முற்றிலும் பொருத்தமானதே.



**அங்கையற்கண்ணி... அனல்வழி திறந்தாள் அலைகடல் ஏறிடும் கடற்புலி ஆனாள் கரும்புலி ஆகியே கப்பலைத் தகர்த்தாள்**

இவ்வாறாக, கரும்புலிகள் மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தமது சாவையே தம் மடியில் சுமந்துசெல்லும் உன்னத புருஷர்கள். இவர்கள் அர்ப்பணிப்புக்கள் ஒப்புவமை அற்றவை. மரணத்தை வென்ற இம்மாவீரர்கள் வணக்கத்திற்குரியவர்கள். தமிழினம் உள்ளவரை இவர்கள் நாமம் போற்றப்படும்.

- களத்தில் 02.07.1997

## ஈடிணையில்லார் - இவர் சாகார்!

காவி உடுத்து, காடு திரிந்து,
காய்கனி உண்டார் - ஒரு சாரார்
மாளிகை கட்டி மாதொடு மக்கள்
சூழ இருந்தார் - ஒரு சாரார்
நீடுலகத்தில் வாழும் நினைப்பில்
நேரம் இழந்தார் - ஒரு சாரார்
நேசமும் பந்த பாசமும் உந்த
நீதி மறந்தார் - ஒரு சாரார்
போரெனெ அஞ்சி நாடு துறந்து
போய் விடுகின்றார் - ஒரு சாரார்
போரிடை நின்று வாணிபம் செய்யும்
வாழ்வை மகிழ்ந்தார் - ஒரு சாரார்
மேடை அமர்ந்து மாலை அணிந்து
மேன்மை அடைந்தார் - ஒரு சாரார்
ஆணை செலுத்தி ஆரும் நடுங்க
ஆள நினைத்தார் - ஒரு சாரார்

தீயுமிழ் கின்ற ஊர்தி சுமந்து
தேகம் கதைந்தார் - சில வீரர்
தேசவிலங்கு தூள்பட, ஓங்கு
தீயினுள் பாய்ந்தார் - சில வீரர்
ஆழ்கடலூடு ஓர்வெடி யோடு
ஆவி இழந்தார் - சில வீரர்
ஆரும் நெருங்கவே முடியாத
பேரரண் யாவும் பெடியாக
மோதி இனத்தின் மானம் நிறுத்தி
வீரன், நம் மில்லர், வெடியானான்!
மூலபலத்து இராணுவம் ஓடி



வீழ, ஒரு "போர்க்" பொடியானான்!
நோய் நொடி என்று பாயில் விழுந்து
போய் நலிவுண்டா இவர் போனார்?
நோவுகள் கண்டு ஓடி ஒளிந்து
நூறு திசைக்கா இவர் போனார்?
ஆழிமுழக்கம் சூழ ஒலிக்கும்
நாள் வரை வீரர் - இவர் சாகார்!
ஈழ நினைப்பு மூள எழுந்த
ஈடிணையில்லார் - இவர் சாகார்!


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க
அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# ஆனைக்கோட்டையில் 40 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி!

யூன் 21, 2024

1980ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் முன்னாள் பேராசிரியர்களான பொ.இரகுபதி மற்றும் கா.இந்திரபாலா ஆகியோர் முன்னெடுத்த தொல்பொருள் அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய பெருங்கற்கால பண்பாடு மையம் என உறுதிப்படுத்தும் வகையில் அடையாளப்படுத்தப்பட்ட தொல்பொருட் சான்றுகள் ஏறாளமாக கிடைக்கப்பெற்ற ஆனைக்கோட்டை அகழ்வாய்வு இன்று மீண்டும் 40 ஆண்டுகளுக்கு பின்னர் ஆரம்பமாகியது.



புலம்பெயர் நிதிப்பங்களிப்புடனும், யாழ்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடன் அதன் தலைவர் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் இன்று ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் தென்னிலங்கை தொல்லியல்துறை பேராசிரியரான நிமல் பெரேரா, மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் மகேஸ்வரக்குருக்கள் சரவணபவஐயர், யாழ். பல்கலைக்கழக வரலாற்று துறைத்தலைவர் சிரேஸ்ட விரிவுரையாளர் சாந்தினி அருளானந்தம், பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஜே.ஜெயதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்களான சிவரூபி சஜிதரன், தி.துளசிகா, தற்காலிக உதவி விரிவுரையாளர் திருச்



செல்வம், யாழ் தொல்லியல் திணைக்கள அகழ்வாய்வுப் பொறுப்பதிகாரி திரு.வி.மணிமாறன், யாழ் கோட்டையின் நிலைய பொறுப்பதிகாரி திரு.பா.கபிலன், யாழ் தொல்லியல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க, யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் பொருளாளரும் யாழ் பல்கலைக்கழக சிரேஸ்ட பதிவாளருமான இ.ரமேஷ், உறுப்பினர் வ.பார்த்திபன் மற்றும் முன்னாள் வலி தவிசாளர் அ.ஜெபநேசன் தொல்லியல் பட்டதாரிகளான க.கிரிகரன், ஜனனி ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல்த்துறை நான்காம் வருட இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் சமூக நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்குகொண்டனர்.

ஆனைக்கோட்டை வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய பெருங்கற்கால மையமாகும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஊராகும்.

நாவாந்துறைப் பகுதியைச் சீர்செய்வதற்காக கரையாம்பிட்டி மண்மேடு வெட்டப்பட்ட பொழுது அங்கு காணப்பட்ட பண்பாட்டு எச்சங்களை மையமாக கொண்டு 1980ல் பேராசிரியர்களான கா.இந்திரபாலா, பொ.இரகுபதி ஆகியோர் தலைமையில் அகழ்வுகள் இடம்பெற்றது இவ்வகழ்வில் இரண்டு சதுர மைல் பரப்பில் ஆறு குடியிருப்பு மையங்களும் இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அகழ்வின் போது இரு இடங்களில் பெருங்கற்கால மக்களது ஈமசின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விரு ஈமசின்னமையங்களும் பத்து அடி இடைவெளியில் நான்கு அடி உயரம் கொண்ட மண் மேட்டில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஈமசின்னமையங்களில் 5 அடி உயரமுடைய இரு மனித எலும்புக் கூடுகள் கிழக்கு மேற்கு திசையை நோக்கிய வண்ணமாக அடக்கம் செய்யப்படிருந்தன. இதில் இரு கைகளும் கட்டப்பட்ட எலும்புக்கூட்டைச் சுற்றிவைக்கப்பட்ட மட்பாண்டங்களில் கருப்பு சிவப்பு, தனி கறுப்பு சிவப்பு நிறகிண்ணங்கள் வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில மட்பாண்டங்களில் சுறா மீன், மிருக எலும்புகள் நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி , சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. இப்பண்பாட்டு இங்கு இரும்பின் பயன்பாடு புழக்கத்தில் வந்ததனை உறுதிப்படுத்த இரும்புக் கருவிகளும், கழிவிரும்புகளும் கிடைத்துள்ளன.



சிற்பி , சங்கு சுறா மீன் எலும்புகள் இலங்கைப்பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலை மரபுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனைக்கோட்டையில் பிராமி எழுத்து பொறித்த மட்பாண்டம் லட்சுமி நாணயம் உரோம மட்பாண்டம் என்பவற்றை ஆதாரமாக கொண்டு இரு ஈமசின்னங்களும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால மக்களுக்குரியது என உறுதிபடுத்த முடிகின்றது.

எலும்புக்கூட்டின் தலை மாட்டின் அருகில் கிடைக்கப்பெற்ற



கோவேத முத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது இதன் காலம் கி.மு 3 நூற்றாண்டு 1.7 , 1.5 cm நீள அகலம் உடையது .இதன் மேல் வரிசையில் 3 குறியீடுகளும் கீழ் வரிசையில் 3 பிராமி எழுத்துக்களும் உள்ளன. இது மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்டுகின்றது.

இவ் கோவேத முத்திரை பற்றி பொ.இரகுபதி (1987), இந்திரபாலா (1981), ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி. பத்மநாதனும் (2006), பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் (2023)ஆகியோர் ஆதாரபூர்வமான கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

ஆனைக்கோட்டையில் பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞான பூர்வமாக நிறுபிக்கக்கூடிய தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெறும் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இன்று 20.06.2024 காலை 9.00 மணியளவில் 40 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

**கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில் உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப்புகழ் பெற்று வாழும்.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்







விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

உலக வணிகம் ULAGA VANIKAM

2025



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# காகக்கூடு!





கணபதிப்பிள்ளைக்குள் இருந்த காகம் திடீரென்று சிலிர்த் தெழுந்து கொண்டது. அதன் தூக்கம் கலைந்து சிறகுளை அடிக்கத் தொடங்கியது. கணபதிப்பிள்ளை அதைக் கொஞ்சங் கூட எதிர்ப்பார்க்கவில்லை.

காகம் என்று கணபதிப்பிள்ளை அழைக்கின்ற அந்த இனம் புரியாத பயங்கரம் அவரை ஆட்கொண்டு நீண்ட காலமாகிறது. அது ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருக்கும். உசுப்பி விடப் படுகின்ற சில கணங்களில் ஆக்ரோஷமாய் அது சிலிர்த் தொழுகின்றபோது அவர் தன்னை இழந்து விடுவார். அதன் கூரிய அலகும் நகங்களும் தன்னுள்ளே கீறி இர்த்தம் சொட் டுகின்ற தளர்ந்த நிலைக்கு செல்வதை அவர் உணர்வார். சிறகுகள் படபடப்பதுபோல் இதயம் துடிக்கும். அதன் கருமை பரவி அவரை விழுங்கி விடுவதாகவும் அதனால் அறிவு கெட்டு மயங்கிப் போவதாகவும் அவர் அந்தக் கணங்கள் பற்றி தன் நண்பர்களிடம் சொல்லிக் கொள்ளுவார்.

இன்று எதிர்பாராத விதமாக அந்தக் காகம் விழித்துக் கொண்டு விட்டது.

மலர்ச் செடிகளும் குன்றும் புற்றரைகளும் நீர்ச்சுனைகளுமாக இருந்த அந்த பூங்காவில் இவர் உலாவிக் கொண்டிருந்தார். அவரது கைகளை பற்றியபடி துள்ளலுடன் அவருடன் நடந்து கொண்டிருந்தான் அவரது பேரன் சசி. இளை ஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள், சிறார்கள் என பலதரப்பட்ட வயதினரும் தங்கள் கவலைகளை மறந்து குதூகலமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கலகலப்பும் உற்சாகமும் இவரையும் தொற்றிக்கொண்டது. ஒரு குழந்தை போல பூங்காவை வலம் வந்து கொண்டிருந்தவர் ஒரு மூலை யில் சாதுவாக நின்றிருந்த அந்தப் பச்சை உருவத்தை கண்டு விட்டார்.

ஆக்கிரமிப்பின் சின்னமாக உருக்குலைந்த நிலையிலிருந்த அந்த டாங்கியின் பெரிய குழாய் நீண்டிருந்தது அதனை அகன்ற கண்களுடன் பார்த்தார். அது அவரைக் குறிவைப்பது போலத் தோன்றியது. அப்போதுதான் அந்தக் காகம் விழித்துக் கொண்டது.

தாத்தாவின் திடீர் மாற்றம் பேரனுக்குப் புரியவில்லை. “என்ன தாத்தா டாங்கியைப் பாக்கவிடேல்லை அதுக்குள்ளே போவமன் டிறியள்”

பூங்காவிலிருந்து அவனை இழுத்துக்கொண்டு அவர் வெளி யேறியபோது சசி கேட்டான்.

“எனக்கு வயித்துக்குள்ளை ஏதோ செய்யுது கெதியன வீட்டை போவம்”.

சைக்கிளில் ஏறியபோது இரு போராளிகள் அவர்களை கடந்து சென்றார்கள். அவர்கள் “தோள்களில் றைபிள்கள் தொங்கின. கணபதிப்பள்ளை முகத்தை திருப்பிக் கொண்டார்.

“அவையள் கொண்டு போறது T-81 தானே தாத்தா?” தாத்தா பேசாமல் சைக்கிளை மிதித்தார்.

“தாத்தா ஏகே எண்டு ஏன் சொல்லுறது?”

“கொஞ்சம் பேசாம வாமேனை தலையிடிக்குது”

தாத்தாவும் பேரனும் மௌனமாக சென்றார்கள்.

நல்லூர் கோயிலை கடந்த போது கந்தனை மனதுள் வழி பட்டார், முருகா என்னை இந்த வேதனையிலிருந்து காப்பாற்று அவமானத்தை துடை முருகா”.

அவர்கள் வீட்டை அடைந்த போது சூரியன் மேற்கில் நன்கு இறங்கிவிட்டான். சசி கைக்கிளிலிருந்து குதித்து கேற்றைத் திறந்துவிட்டான். முற்றத்தில் இரண்டு சைக்கிள்கள் நின்றி ருந்தன.

“யாரோ வந்திருக்கினம்” சொல்லிக் கொண்டு சசி உள்ளே ஓடினான்.

கணபதிப்பிள்ளை பெருமூச்சு ஒன்றை விட்டுக்கொண்டார் அவரது பதற்றம் நன்கு குறைந்து விட்டது.

முன்னறையில் தூயவனும் இன்னொரு போராளியும் அமர்ந் திருந்தனர். அவரது மனைவி சுவரோடு சாய்ந்து நின்று கொண் டிருந்தாள். சசி தூயவனின் மடியில் அமர்ந்திருந்தான். சுருட்டை முடியுடன் நிமிர்ந்து உட்காந்திருந்த மற்றைய போராளியின் மடியில் றைபிள் ஒன்று கிடந்தது. அதன் கரிய குழல் இவர் நின்ற திசையை நோக்கியிருந்தது. கணபதிப்பிள்ளையின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

அவர்கள் இவரைப் பார்த்து சிரித்தார்கள், அவர் எதையும் பாராமல் கால்களை எட்டி வைத்து வேகமாக அவர்களை கடந்து அறைக்குள் புகுந்து கொண்டார்.

“தம்பி இருங்கோவாறன்” மனைவி அவரை பின் தொடர்ந்தாள். “மாமா ஏகே எண்டால் என்ன அர்த்தம்?” சசி அவர்களைக் கேட்டான்.

“என்னப்பா ஆமிக்காரனைக் கண்டது மாதிரி ஓடிவந்து ஒளியி றியள் அதுகள் என்ன நினைக்குங்கள்”

அறைக்குள் மனைவி மெல்லிய குரலில் கேட்டாள். குரலில் கோபம் தெரிந்தது.

“எனக்கு அந்த துவக்கை காண…”

அவர் தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டார். சரி சரி எவ் வளவு நாளைக்கு உப்பிடி ஒளியப் போறியள்” கொஞ்ச நேரத் தாலை வந்து அந்தப் பக்கம் பாராம இருங்கோவன், நான் பொடியளுக்குச் சொல்லிறன்.

அவள் வெளியே போய் விட்டாள்.

கறுத்த நீண்டிருக்கிற துப்பாக்கிகுழலைக் காண்டால் அவருக்கு இப்படிப் பதற்றம் வந்து விடும். இரண்டு வருடங்களாக அதுவம் அந்த பயங்கர சம்பவத்துக்கு பிறகுதான் அவருக்கு இப்படி ஏற்படத்தொடங்கியது.

அப்போது அவர் அரசு அலுவலகத்தில் லிகதராக வேலை பார்த்தார். அலுவலகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு மாலைப் பொழுதில் சில வெடிச்சத்தங்களுக்குப் பிறகு நடந்த சுற்றிவளைப்பில் மற்றவர்களுடன் இவரும் மாட்டிக் கொண்டார் வயோதிபர்கள் இளைஞர்கள் எல்லோருடனும் இவரும் வரி சையில் நிறுத்தப்பட்டார். துப்பாக்கி நீண்டன இவர் மனைவி மக் களை ஒரு கணம் நினத்துக் கொண்டார். துப்பாக்கிக் குழல் விரிந்து இவரை விழுங்க வருவது போல இவருக்குத் தோன் றியது அவர்கள் இரும்புத் தொப்பிகளுடனும் சிவந்த கண்க ளுடனும் சிரித்தபடி இவர்களை நோக்கி சுடத் தொடங்கினார்கள் பிணங்களை விழுந்தன இவரும் விழுந்தார்.

இவர் விழித்தபோது இருட்டில் பிணங்களின் இரத்க்கசகசப் புடன் விழுந்துகிடந்தார்.

தோளில் வலித்தது. இறந்து விட்டார் என்று நினைத்து விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அந்த இரவு இவருள் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத் துக்கு வந்து சேர்ந்தார். அந்த சம்பவத்தின் தாக்கத்திலிருந்து இவரால் மீள முடியவில்லை. தோளிலும் மனத்திலும் வடுவை ஏற்படுத்திவிட்டது. அந்த சம்பவம்.

“எவ்வளவு காலத்திற்கு இப்படி இருக்கப்போகிறேன். இப்படியே இதை விடக்கூடாது”

அவர் எழுந்து வெளியில் வந்தார், தூயவன் அவரைப் பார்த்துச் சிரித்தான். அவர் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

றைபிள் தூயவனுடைய மடியில் இப்போழுதும் கிடந்தது. சசி அதை தொட்டுப்பார்த்துக் கொண்டிருந்தான்.

கணபதிப்பிள்ளை அங்கு பார்வையைச் செலுத்தாது கவனமாய் இருந்தார்.

“ஐயா என்ன யோசிக்கிறியள்” தூயவன் கேட்டான் அவர் பேசாமல் இருந்தார்.

**“உங்களுக்கு மட்டுமில்லை எத்தனை பேருக்கு இப்படி நடந் திருக்கு கண்ணுக்கு முன்னாலை துடி துடிச்சு பெற்றதாயை மகனை சாகக் கொடுத்தவை எத்தனை பேர்? அவையளும் தங்களை இழக்காமல் துணிவோடை இருக்கினம் தானே, ஐயா, அவையள் எப்பிடி இருக்கினம்”**
அவன் சொல்லி நிறுத்தினான்.

அறையில் மௌனம் நிலவியது. அறையிலிருந்து அனைவரும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் கதவினூடே




தெரிந்த தென்னை மரத்தின் உச்சியைப் பார்த்தார். இருள் கவிந்து கொண்டிருந்தது. ஓலை ஒன்றின் மீது இருட்டாய் ஒரு காகம் இருந்தது.

தூயவன் திடீரென அருகிலிருந்த றைபிளை பற்றிக் கொண் டெழுந்தான்.

**அவர் முன் றைபிள் நீண்டது, வழக்கம் போல் துப்பாக்கி முனையல்ல, துப்பாக்கி பிடி தான் அவர் முன்நின்றது.** அவரின் காகம் சிறகடிக்க தொடங்கியது.

“ஐயா பிடியுங்கோ தொட்டுப் பாருங்கோ, எங்களுடைய கவசம், பிறகு கேளுங்கோ பயம் எண்டா என்னெண்டு.”

மௌத்தை கலைத்துக் கொண்டு அவன் குரல் ஒலித்தது. அவரின் இதயத்துள் எதிரொலிப்பது போல அவருக்குப்பட்டது. நடுங்கும் கரங்களால் அதனைப் பற்றினார்.

தோள்களில் ஊன்றி கைகளால் அந்த இரும்பு உபகரணத்தை வருடினார். தோளில் ஊன்றி துப்பாக்கியை உயர்த்தினார். துப்பாக்கி குழல் தென்னை மரத்தை குறி வைத்தது. இப்பொழுது காகத்தை காணவில்லை.

கண்களை மூடி தோளில் துப்பாக்கியை ஊன்றியபடி அவர் சில நிமிடங்கள் அப்படியே அமர்ந்திருந்தார். மனதில் இரும்புத் தொப்பியணிந்தவர்கள் வெறியாட்டத்தை விட்டு விட்டு ஓடி னார்கள். இவர் அவர்களை துரத்தி துரத்தி சுட்டார்.

றைபிளை வாங்கிக்கொண்டு தூயவனும் நண்பனும் போய் விட்டார்கள்.

வானத்தில் நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது இவர் மனதின் ஆழத்தில் ஆழ்கடலின் அமைதியை அனுபவித்துக் கொண்டு கண்களை மூடி கதிரையில் சாய்ந்தபடியே இருந்தார்.

“உங்களுக்கு ரீ இந்தாங்கோ குடியுங்கோ பிறகு கனவு காணுங்கோ.”

மனைவி அருகில் நின்று சொன்னாள் இவர் ரீயை கையில் வாங்கிக் கொண்டார்.

“உங்கடை காகம் இப்ப என்ன செய்யிது? மனைவி சிரித்த படி கேட்டாள்.

“அது பறந்து போயிட்டுது”.

“திரும்ப வராதேயப்பா?” இல்லை அதைக் கூட்டோடை கலைச் சுப் போட்டன்.

“தாத்தா அது எங்கை போயிரக்கும்?” சசி கோட்டான்.
“தெற்குப் பக்கமாய்த்தான் போயிருக்கும்?

அவர் ரீயைக் குடித்துவிட்டு தம்ளரை மனைவியிடம் கொடுத்தார்.

- 25.07.1995- நன்றி: அ. கிருஸ்ணேந்திரன், தமிழீழம்

# கரும்புலிகள் எழுச்சி நாள் யூலை 05 உலகம் ஈடாகாதவல்லமைச் சக்திகள்!

சூரியக் கதிர்கள் வெம்மையிறைக்கின்றன. மிகக் கடூரமாய் மணற்காட்டுப் புழுதி தீப்பிடிக்கின்றது - தாகத்துக்காய் பிராணிகள் கனை தேடியலைகின்றன - சோழகம் இலைகளைப் பிய்த்தெறிகிறது - வையம் தவித்துக் கிடக்கிறது.

யூலை என்றால் இப்படித்தான் எரிந்து கொண்டிருக்கும் மாதம். மறுகி, மறுகி எங்கள் வாழ்வைத் துடிக்க வைத்த மாதம். பல யூலைகளக் கண்டவர்கள் நாங்கள்.

1983-ல் ஒரு யூலை...

கொழுமப்பில் சூரியன் கண்குத்தி நின்றான். வெம்மைத்தீ பரவி எரிந்தது. நடுங்கி, நடுங்கி ஓடிக்கொண்டிருந்த களனி கங்கையில் நீர் ஆவியானது.

நீர்வற்றி போகிறபோது, யாருடைய கிருபையாலோ எங்கிருந்தோ பாய்ந்தது புது அருவி, சிவப்பாய் - குரதியாய்.

மீன்கள் சுவைத்துக் குடித்தன தமிழர் குருதி. பல்லெல்லாம் இரத்தம் வழிய வீதியில் “றபானா” அடித்து தமிழர் சடலங்களின் மீதேறி கண்டிய நடனமாடினர் சிங்கள இனவெறியர்.

**யூலை மாதம் கரும்புலிகளுக்கானது. உலகின் முகடுகளில் எதிரொலிக்குமாறு அவர்களின் ஆத்மகானம் கேட்கிறது. எங்கள் மண்ணின் காற்று அதை காவிச் செல்கிறது. மரங்களும் பறவைகளும் அதை உள்வாங்கிப் பாடுகின்றன. மனிதர்களின் நினைவெல்லாம் அவர்கள் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அசுரர்களை அழிக்க வந்த கடவுளின் குமாரர்களாய் மனக் கண்களில் ஒளிரும் அவர்களின் நினைவில் நனைந்து கொண்டு விடுதலையின் படிகளில் ஏறி நடப்போம்.**





கொழுந்து விட்டெரியும் தமிழர் கடைகளிலிருந்து பிடுங்கிக் கொண்டனர் பலர்.

கோரந்தான். என்ன செய்வது? வினைப்பயன் என்றனர் நொந்தோர். இப்படித்தான், யூலை இருந்தது. குருதி மணக்க வாடை அதைச் சுமந்து சென்றது தெருக்களெல்லாம்.

1987 யூலையில், வடமராட்சியில் தீகொழுந்து விட்டு எரிந்தது. டாங்கிகள் பூமியை உழுதன. குண்டுகள் மூலம் வயல்களில் தமிழர்கள் உடல்கள் நடவு செய்யப்பட்டன. உயிர் துடிதுடித்துக் கலங்க வையம் ஓலமிட்டது - குரதி நிறைய ஆனந்தக் குளிப்புச் செய்தன பேய்கள். சனமெல்லாம் நடுங்கி ஒடுங்கியிருந்தனர்.

“எதுவும் செய்ய முடியாது எங்களால்... கடவுளே, எல்லாம் வினைப்பயன்” என்றவர், அத்துவான வெளியை அண்ணாந்து பார்த்தபடி இருந்தனர்.

இரவு, கறுப்புக்குள் ஒளிந்து கொண்டிருந்தது. புலன் இருண்ட மனிதரெல்லாம் ஓலமிட்டுக் கொண்டிருந்தனர்.

காலம் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. வரலாறும் அப்படித்தான். வானில் ஓர் ஒளிப்பொட்டு. நட்சத்திரமாய் இருக்கலாம். நடுங்கிக் கொண்டிருந்த மனிதரின் கண்களுக்கு அது ஒளிவட்டமாய்த் தெரிந்தது.
இருள் விழுங்கி சூழல் ஆர்வத்துடன் எழுந்து பார்த்தது. சூரியக் குஞ்சு போல அந்த ஒளிப்பொட்டு மெல்ல இறங்கி வந்தது. சலனப்பட்ட பூமியின் மங்கிய கண்கள் பிரகாசித்தன சடுதியாய்... மிக ஆக்ரோஷத்துடன்... மிகுந்த வேகத்துடன்...

ஒரே பாய்ச்சல்...!

வையம் நடுங்கித் தீர்ந்து பேரோசை. எழுந்து அண்டமெல்லம் எதிரொலித்தது.

“ ன்ன அது”...?

படைநடத்தி வந்த பேய்ச் சேனை திக்கின்றி அலைந்தது. விளங்கிக் கொள்ள முடியாது திகைத்தது.

“ஊ...ஊ” என உயிரின் குரல் ஒலிக்க, எங்கள் சைனியத்தில் இருந்து புறப்பட்ட “உயுரம்பு” சுற்றிச் சுழன்றது.

“யார்... யார்...”

“கப்டன் மில்லர்”

“எங்கிருந்து வந்தது?”

“கரும்புலிகள் அணியிலிருந்து”

“கரும்புலிகளா? அது என்ன?”

“அது ஒரு சக்தி: ஒரு போராட்ட வழிமுறை”

“அது என்ன?”

“வினைப்பயன் என்று நொந்தவர்கள் தங்களது தவப் பயன் என்று நினைக்கிற வல்லமைச் சக்தி இந்த உலகம் முழு மையும் ஈடாகாது அந்தச் சக்தியின் ஆற்றலுக்கு”

உலகம் மூலைக்கு மூலை சுற்றியலைந்து வினாவெழுப்பி, விடையும் கண்டது.

கிழக்கில் சூரியன் எட்டிப் பார்த்தான் அத்துவான வெளியை அண்ணாந்து பார்த்தவர்கள் எழுந்து, “நம்பிக்கையை” பற்றிப் பிடித்தவாறு நடக்கத் தலைப்பட்டனர்.

அந்த யூலை ஐந்திலிருந்து எங்களுக்கு வசந்தம் பிறந்தது. மழை பொழிந்து. குளிர்ந்த தென்றல் வீசியது. இலையுதிர்த்த மரங்கள் எல்லாம் புதிய ஆடை கட்டிக்கொண்டு பூத்தும் காய்த்தும் குலுங்கின.

இப்போது முதல்...

அடக்குமுறையாளர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அடிவயிற்றில் தீ பரவியது. எங்கும் எப்போதும் மரணக் கற்பனையில் அலைந்தார்கள். அவர்களின் இரவுகள் அச்சம் தருவனவாயிருந்தன. நள்ளிரவில் பதைத்தெழுந்து குரல் கொடுத்தார்கள்.

“கரும்புலிகள் எம்மைக் கொல்ல வந்துள்ளார்கள்” - பயங்கரக் கனவுகளைக் காட்டிலும் அவர்களுக்கு நித்திரை தேவையில்லை என்றாயிற்று.

இந்நிலை, காலம் எங்களுக்களித்த வரம். தமிழரைக் காணும் போதெல்லாம் கரும்புலிகளின் பயம் வாட்டுகிறது. எதிரிகளை ஒரு கணநேரம், காற்றுறையும்; கடலுறையும்; பிரபஞ்சம் திடுக்கிட்டுப்போய் - பின் நகரும். அங்கே ஒரு கரும்புலியின் பிறப்பு நிகழும், புதியதொரு வரலாற்றுச் சாதனையுடன்!

எங்கள் மண்மீதும் மக்கள் மீதும் எமது நேரிய போராட்டத்தின் மீதும் கைவைக்க எண்ணுவாரோ!

அப்போதிருந்து எங்கள் சைனியத்திலிருந்து புறப்படும் உயிரஸ்திரங்கள் சன்னதம் கொள்ளும். துவம்சம் செய்தே ஓயும்! நினைப்பில் குறியுங்கள்.
யூலை மாதம் கரும்புலிகளுக்கானது. உலகின் முகடுகளில் எதிரொலிக்குமாறு அவர்களின் ஆத்மகானம் கேட்கிறது. எங்கள் மண்ணின் காற்று அதை காவிச் செல்கிறது. மரங்களும் பறவைகளும் அதை உள்வாங்கிப் பாடுகின்றன. மனிதர்களின் நினைவெல்லாம் அவர்கள் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அசுரர்களை அழிக்க வந்த கடவுளின் குமாரர்களாய் மனக் கண்களில் ஒளிரும் அவர்களின் நினைவில் நனைந்து கொண்டு விடுதலையின் படிகளில் ஏறி நடப்போம்.

- களத்தில் 02.07.1997



புலிப்படை வீரர்கள் புயலாகிச் சென்றார் – தங்கள்
களத்தினை வெல்வது திடமான தென்றார்
கரும்புலிக் குழந்தைகள் கனலாகிப் போக — எங்கள்
காவியத் தலைவனின் கண்களில் சோகம்


கரும்புலிகள் நாள்
யூலை 05 2024
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# கரும்புலி

## மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்!



அகோர வெய்யில் பொழிகிறது. பட்டிக்குள் நுழைந்தன சிங்கங்கள். கூச்சல், கதறல், அழுகை எதுவுமே அங்கே பலிக்கவில்லை. தாய்க்கோழிகள் குஞ்சுகளை பாதுகாக்க அலறியடித்தன. கூட்டித் திரிந்த குஞ்சுகளைப் பருந்துகள் தூக்கிச்செல்ல அந்தரித்தன தாய்ப் பறவைகள். கால்களைக் கட்டி கண்களைக் கட்டி இறைச்சிக்காக ஏற்றும் ஆடு மாடுகளைப் போல இளைஞர்கள் ஏற்றப்பட்டார்கள். இது அன்று 1987-ல் வடமராட்சியின் நிலையாக இருந்தது. பிடிக்கப்பட்ட அனைவருமே புலிகள் என்று முத்திரையும் குத்தப்பட்டார்கள். இவர்கள் அனைவருமே சிங்கள தேசத்தின் பூசா, மகசீன், வெலிக்கடை போன்ற சித்திர வதைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டார்க்ள. அனுப்பிவிட்டு பாட்டும் கூத்துமாய் பொழுதுகள் கழிந்தன.

"புலிகள் எல்லாத்தையும் பிடிச்சுப் போட்டோம்" என்று சிரித்துச் சிரித்து தம் உருக்களுக்கு போதை ஏற்றினர்.

அவன் தயாராகிக் கொண்டிருந்தான். யூலை 05-ம் திகதி இரவு பாட்டும் கூத்துமாய் கழித்த அந்த பருந்துகளின் கூட்டுக்குள் பாய்வதற்கு அவன் தயாராகிக் கொண்டிருந்தான். அவனுக்குள் அக்கினிப் பந்தொன்று ஆவேசமாய் உருண்டு கொண்டிருந்தது. சத்திய வேள்வி ஒன்றிற்காக அவன் சாகத் துணிந்து நின்றான். அவனைச் சுற்றிலும் தோழர்கள் துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவன் தாய் மீது பற்றுக்கொண்டவன், அவன் தாய் நாட்டின் மீது பற்றுக்கொண்டவன், அவன் தலைவன் மீது பற்றுக் கொண்டவன். இந்தத் தேசத்தின் மக்களுக்காக பெரும் தியாகம் செய்திட துணிந்தான். தன்னை அழிப்பதன் மூலம், தன் இனத்தவர்களை அழிப்பவர்களை அழித்தொழிக்கும் வல்லமை கொண்டான். தலைவன் கொடுத்த ஆசி அவனுக்கு மேலும் ஓர் புதியதோர் உற்சாகத்தையும் வழங்கியிருந்தது. எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. பாய்ச்சலுக்கான நேரமும் நெருங்கியது. ஒன்றாய்ப் பழகிய தோழர்கள், சிரித்து சிரித்து சந்தோஷமாய்ப் பழகியவர்கள் எல்லோரையும் அவன் பார்த்தான். தன் இனத்திற்கு தன்னால் செய்யக்கூடிய அதியுயர் தியாகத்தை செய்யப் போகிறேன் என்கின்ற பெருமிதத்தை அவன் முகம் வெளிப்படுத்தியது. எல்லோரையும் பார்த்தான். "மச்சான் போய்ற்று வாறன்". அவனைச் சுமந்த வாகனம் புறப்பட்டது. புறப்படும்







முதற்கரும்புலி
கப்டன் மில்லர்



வாகனத்தில் அமர்ந்திருக்கும் அவனைப் பார்த்து இருளிலும் மற்றவர்கள் கையசைத்தார்கள். சிறிது நேரத்தில் சுற்றுப் புறமெல்லாம் கிடுகிடுத்தது. வானத்தை நோக்கி கரும்புகை எழுந்தது. கூடி மகிழ்ந்த குஞ்சுகளையெல்லாம் கூட்டி அள்ளி கொடுஞ் சிறைக்குள் அடைத்தவர்களின் கொட்டம் அடங்கியது. அவனின் உயிர்ப் பறவை உயர எழுந்து பறந்தது. அந்த உயிர்ப் பறவையின் இனிய சுதந்திர தாகம் மெல்ல மெல்ல தென் றலுடன் கலந்தது.

மில்லர் மிகப் பெரிய தியாகம் செய்த நாள் யூலை 05 தமிழீழத் தின் புதியதோர் நாளாய், தமிழீழத்தின் புதிய சகாப்தம் படைத்த திருநாளாய் திகழ்கின்றது.

இரண்டாம் உலகப் போர் உக்கிரம் அடைந்திருந்த காலம் பிரித் தானிய கடற்படைக் கப்பல் புரிந்த அனர்த்தங்கள் ஏராளம். இந்த வேளையின்தான் ஜப்பானிய தற்கொலை வீரன் ஒருவன் விமானத்தில் பறந்து வந்து அந்தக் கப்பலினுள் வீழ்ந்து வெடித்த தன் தாய்நாட்டின் மீதான பற்றை வெளிக்காட்டினான். அவனது அந்தத் தியாகம் உலகில் வியந்து பேசப்பட்ட வரலாறாயிற்று. அந்தத் தாக்குதல் யுக்தியை 1987 யூலை 05-ல் தமிழீழம் மீண்டும் பேசிக்கொண்டது.

“பலவீனமான எமது இனத்தின் மிகப் பலம் வாய்ந்த ஆயுத மாகவே நான் கரும்புலிகளை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். போராட்டப் பாதையின் தடை நீக்கிகள்.” என்று எமது கரும்புலிகள் தியாகத்தையும் உருவாக்கத்தையும் முன்மொழிந்தார் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

கரும்புலிகள் மென்மையானவர்கள். எமது இனத்திற்கு பெருமை சேர்த்தவர்கள். எமது தேசத்திற்கும் பெருமை சேர்த் தவர்கள். பெற்றவர்களுக்கும், கூடப்பிறந்தவர்களுக்கும் பெருமை சேர்த்தவர்கள்.

எனவேதான், “என்ர மகன் செத்தது என்பது எனக்கு கவலை தான். ஆனா, அவன் நாட்டுக்காகத் தானே செத்தவன். அதை நினைக்க பெருமையாத்தான் கிடக்கு” கண்கள் கலங்க கரும்புலி ஒருவனின் தாய் கூறினாள்.

கரும்புலிகளின் உன்தமான தியாகங்களினால் எமது போராட்டம் எத்தனையோ திருப்பு முனைகளையும் எவ் வளவோ வளர்ச்சியினையும் கண்டுள்ளது. எதிரி இருந்த இடம் எல்லாம் அவர்கள் ஏறி நடந்தார்கள். குறைந்த பலத்ோடு நின்று எதிரிக்கு கூடிய அழிவை ஏற்படுத்துகின்றார்கள். தன்னை அழித்து பகைவர்களை அழிப்பதில் அவர்கள் பெருமை கொள் கின்றார்கள். தமக்கு கிடைக்கும் அந்த சந்தர்ப்பத்தை பெறும் பேறாகக் கருதுகிறார்கள். அதனால்தான் “இப்படியான நிறை வான சாவு எல்லோருக்கும் வராது” என்று கரும்புலி மேஜர் டாம்போ தன் தோழன் ஒருவனிடம் சொல்லிப் பெருமிதம் கொண்டான்.

கரும்புலிகளின் ஈடு இணையற்ற தியாகத்தினால் தமிழீழம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் கரும்புலிகளின் ஈகம் கலந்திருக்கின்றது. இரும்பு மனிதர்களாக கரும்புலிகள் இருந்தபோதும் அவர்கள் மனங்களில் மென்மை குடிகொண் டுள்ளது. அவர்களின் மென்மையான மனங்களில் உறுதி இருந்தது. தாயகத்து மண்ணிற்காக, தயாகத்து மக்களுக்காக செய்யும் உன்னதமான தியாகங்களில் அவர்கள் உறுதியோடு இருந்தார்கள். அந்த உறுதியின் வெளிப்பாடாகத் தான் மாங் குளம் முகாமைத் தகர்த்து வெற்றிக்கு வழி சமைத்த கரும்புலி லெப். கேணல் போர்க் தன் தோழனிடம் “நான் புறப்படப் போறன். இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது” என்று திட மாகச் சொன்னான்.

மனிதர்கள் மரணத்தைக் கண்டு நடுநடுங்கும்போது கரும் புலிகள் மரணத்தை மடியில் கொண்டு திரிகிறார்கள். அவர் களின் மரணம் ஆயிரம் ஆயிரம் காவியங்களானது. கண் ணீருக்கு அப்பாற்பட்ட சோகங்களை விரும்பாத வீரமாயிற்று. உறுதி, எதற்குமே அஞ்சாத உறுதி, எவருக்கும் அஞ்சாத உறுதி அதுதான் கரும்புலிகளின் பலம். நெல்லியடியில் இடியாய் முழங்கி மில்லர் தொடக்கிவைத்த தியாகம் இன்னும் ஓய வில்லை.

கரிய இருளைப் பூசிக்கொண்டு நீண்டு படுத்திருக்கும் அலைகட லிலும் கடற் கரும்புலிகள் உலா வந்தார்கள். எங்கள் வாழ்வின் இனிமைகளைக் குலைத்த எல்லா இடங்களிலும் கரும்புலிகள் பாய்ந்தார்கள். எல்லைகள் தாண்டியும் எங்கள் கரும்புலிகள் தமது பலத்தின் இருப்பை உணர்த்தினார்கள். வல்வைக் கட லில், பருத்தித்துறைக் கடலில், வெற்றிலைக் கேணியில், சிலாவத்துறையில், முல்லைக்கடலில், காங்கேசன்துறையில், காரைநகரில், திருகோணமலையில் என தமிழீழத்தின் எல் லாக் கடற்பரப்பிலும் ஏன் கொழும்பிலும் கூட எதிரியின் கடற் கலங்கள் சிதறின. வான் முட்ட எழுந்த புகை மண்டலத்துடன் கரும்புலிகளின் உடலும் உயிரும் கலந்தன. போராளிகளின் தும் தமிழ் மக்களினதும் உயிர்களைக் கொள்ளையடித்த உடமைகளை நாசமாக்கிய கடற்பேய்களை அவர்கள் அழித் தார்கள். தம் இனத்தை அழித்தவர்களை அழித்தார்கள். தம்மை அழிப்பதன்மூலம் தழிழீழ சந்ததியினருக்கு பெரும் தியாகம் செய்தார்கள். தங்களது இனிமையான உயிர்களையும் தியாகம் செய்தார்கள். “சாகும் பொழுதினில் இரு சாவிக் குண்டலம் தந்தவரெவர் கொடைக்கை” என்று கர்ணனின் கொடைச் சிறப்பை வியந்து போற்றினான் பாரதி. ஆனால் அக் கொடைக்கும் மேலாய் தம்மையே தற்கொடை தந்தவர்கள் எங்கள் கரும்புலிகள். தமிழீழத் தேசியத் தலைவரின் எண் ணத்தில் உருவாகி எண்ணற்ற வரலாற்றைப் படைத்தவர்கள் இவர்கள்.

இவர்களது வல்லமை ஆண், பெண் பேறுபாட்டிற்கு அப்பாற் பட்டது. பகைதனை ஒழிக்கும் பெரும் புயல்களாய் தமிழீழப் பெண் போராளிகள் கரும்புலியானார்கள். தம்மை வெடியாக்கி பகையை அழிக்க தீரமுடன் நிமிர்ந்தனர்.

அன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் வரிசையாக வந்தன பகைவனின் கடற்கலங்கள். அவன் உறங்கிக் கிடக்கும் எரி மலை என்பதனை அங்கயற்கண்ணி உலகிற்கு உணர்த் தினாள். கரும்புலிகள் பலர் எழுத முடியாத காவியங்களாக தமிழீழ நெஞ்சங்களில் உறங்கிக் கிடக்கின்றார்கள். உயிர்த் தியாகம் என்பது உன்னதமானது என்றபோதும் முகம் காட்டாத முகவரி சொல்லாத இவர்களின் உயிர்த்தியாகம் உன்னதத் திலும் உன்னதமானது. தன்னை இனங்காட்டாது தன் செயல் மட்டும் உலகறியச் செய்து தமிழீழத்தின் தன் மானத்தை உயரச் செய்தவர்கள் இவர்கள். இவர்களின் உறுதி, பற்று, பாசம் எல் லாமே உயர்ந்தவை. இவர்கள் ஓயாத எரிமலைகள். புகைச்சல் இல்லாத புயல்கள்.

தாக்குதல் தளத்திற்கு தம்மை இசைவாக்கிக் கொண்டபோதும்




தம் உள்ளங்களில் தாய் மண்ணின் விடுதலைத் தாகத்தையே சுமந்து நின்றார்கள். இவர்கள் அற்புத மனிதர்கள். எதிரிகளின் இலக்குகளைத் தேடி அவற்றை அழித்தொழிப்பதற்காக இவர்கள் ஓடிய ஓட்டமும் எடுத்த முயற்சிகளும் இவர் நெஞ்சிலே சுமந்து திரிந்த தாயக தாகத்தை வெளிப்படுத்தின. இவர்களின் தியாக உணர்வும் அர்ப்பணிப்புத் திறனும் அளவிட முடியாத விசித்திரங்கள்.

அரிய பல செயல்கள் செய்த கரும்புலிகளை எங்களது நெஞ் சுகளில் ஒட்டி நிற்கும் நிழல்களே, நெருப்புத் துகள்களே, தொடு வானம் போல ஜாலங்கள் நிறைந்த வாழ்வு சுமந்தவரே, சுதந் திர வேட்கையுடன் சுற்றித் திரிந்த சுதந்திரப் பறவைகளே, வெடி யதிரும் வேளையிலும் செடியில் மலராய் நின்றவரே, பகை யழிக்க மனம் விரும்பி உமையழித்த வீரரே எப்படி உங்கள் தியாகத்தை கூறுவோம், போற்றுவோம் எனத் தெரியவில்லை.

நன்றி: புலிகளின் குரல்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...

STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA

# BLACK JULY 1983

EELA THAMILS GENOCIDE

ஈழத்தமிழர் இன அழிப்பு

# கறுப்பு யூலை





"What is happening in Sri Lanka, nothing other than Genocide"
Indra Gandhi
Prime Minister of India
August 16, 1983

**41 Years**
Remembering
the 1983 Holocaust of Thamils in Sri Lanka

*The State Terrorism caused by the Sri Lankan Government killed more than 3000 Thamil civilians within 10 days. Many pieces of Thamils history were lost, more than 150,000 homeless and all of this was caused by Sinhala Mobs who were backed by the Sri Lankan Government.*

REMEMBRANCE OF BLACK JULY கறுப்பு யூலை 1983 ஈழத்தமிழர் இன அழிப்பு Genocide of Eelam Thamils

# கரும்புலிகள் நாள்

05.07.1987...





யூலை JULY 05 2024

KARUMPULIKAL NAAL

"கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள், எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" "Pulikalin Thaakam Thamil Eela Thayakam"

சங்கத்தமிழ்